ஆங்கீரஸ-மார்கழி-தை

1932 த. டிசம்பர் & 1933 ஜ. பிப்ரவரி

THE REGISTRAR OF
4—MAR 1933
MADRAS

மாலை 4 மணி 9&10.

ஓர் செந்தமிழ்

மாதப் பத்திரிகை.

ரா. சுப்ரமண்யம்,

பொதுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

211, N29BH
N32.4.9-10
197886

ஸ்திரீ ரத்தினங்களின் சீர்திருத்தச் சாரணி

ஸ்ரீமதி சரோஜ் நளினி தேவியின்



'ரிவான சரித்திரம்' விரைவில் வெளிவரும்.

சித்திரப் படங்கள் பலவற்றுடன் அச்சிலிருக்கிறது.



சிறந்த செந்தமிழ் மாவிகை

பொருள் அடக்கம்.

மாலை 4. ஆங்கீரஸஹூ மார்கழி-தைமீ மணி 9 & 10.

தொடர் எண். பக்கம்.

1. மனைத் தலைவி— 585
2. குடும்ப வாழ்க்கை— 587
3. இந்தியக் கைத்தொழில்கள்—
திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ... 596
4. சீன தேச கேசரி: சனயாத-சேனன்—
திரு. தினகரன் அவர்கள் ... 600
5. பிரதாபருத்ரன்—
திரு சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் ... 612
6. தோட்டி—கவியரசன் ரவீந்திரநாத தாகூர் ... 626
7. தொழிலாளி—திரு. அய்யாமுத்து அவர்கள் ... 627
8. கந்தர்வ யாத்திரை (ஒரு சிறு கதை)—
திரு. ஆ. வ. பதும்நாப பிள்ளை அவர்கள் ... 631
9. சிறு மணித்திரள்—(மனோகரனா்) 645
10. தூதவாக்யம் (ஒரு சிறு நாடகம்)—("தினமணி") ... 647
11. ஆசிரியர் குறிப்புகள்— 658

"பாரதி"யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு	ரூ.	10—0—0
,,	,,	½-க்கு	,,		5—8—0
,,	,,	¼-க்கு	,,		3—0—0
கவர்	,,	2 & 3	,,		15—0—0
,,	,,	4	,,		20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.

நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் அருளிய அன்னை.

பூரணமான யோக சக்தியைச் சாதனஞ் செய்வதற்கு இந் நூலைப் போன்றதோர் சாசனம் வேறில்லை. மனிதனை அமரனாக்கி, சுத்த முத்த சத்திய பதத்திற் சேர்ப்பதற்கு ஸ்ரீ அரவிந்தரின் அன்னை நல்ல வழிகாட்டியாயிருக்கிறாள். மஹா சக்தியின் நான்கு வடிவங்கள்: மஹேஸ்வரி, மஹா காளி, மஹா லக்ஷ்மி, மஹா சரஸ்வதி இவைகளெல்லாம் அவஸ்யம் பாராயணம் பண்ணத்தக்கவை. தமிழகத்திற்கு இவ் வரப்பிரசாதம் தெய்வானுக்ரஹமாகக் கிடைத்திருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணா 4.

கீதை காட்டும் பாதை.

இனிய தமிழ்! அரிய பொருள்!!

பகவத்கீதை முழுதிற்கும் விளக்கவுரையும் அதை வாழ்க்கையில் அமைத்துக்கொள்ளும் முறையும், பல அரிய யோக சாதனங்களும், தத்துவ விளக்கங்களும் விரவியிருக்கிறது.

விலை அணா பத்து.

புது யுகப் பாட்டு.

புது யுகம் பிறந்தது. சுதந்திர தாகத்தால் வறட்சி யுற்றிருந்த கவி நெஞ்சங்கள் அந்த சத்திய சகாப்தத்திலே ரஸலீலை புரிகின்றன. அழகு, அன்பு, அருள், உண்மை, சுத்தம், சுதந்திரம், சமத்வம், பேரின்பம், ஆத்ம சக்தி முதலிய தேவ ஒளிகள் இப்பாட்டுக்களில் கிரஹணம் வீசுகின்றன. சுயராஜ்யம் வேண்டுகிற இந்தியாவுக்கு இந்நூல் வீர விருந்து செய்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணா 5.

ஸ்ரீ அரவிந்தப்ரகாசம்.

இனிய தெளிய தமிழில் மஹரிஷி அரவிந்தரின் யோக வாழ்வு, கடிதங்கள், உத்தர்பாரா பிரசங்கம், கவியரசன் ரவீந்திரநாதரின் அரவிந்த நமஸ்காரம், அரவிந்தரின் சாசனம், அரவிந்த ஆசிரம வரலாறு, பூரண யோகம் முதலிய அரும்பெரும் பொருள்கள் அடங்கிய

புத்தகம் 1-க்கு விலை அணா 12.

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

சோவியத் ருஷியா

பண்டித ஜவஹர் லால் எழுதிய ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்
டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

பிப்ரவரி யிறுதியில் வெளி வருகிறது.

தோட்டியும் தொண்டமானும்
பிச்சைக்காரனும், பிரபுவும் ஏற்றத் தாழ்வில்லாமற்
குபேர வாழ்வு வாழுகிற சோவியத் ருஷியாவை அறிய,

இதுவே முதல் சந்தர்ப்பம்.

இத்தகைய நூல் இதுவரை வெளி வந்ததில்லை.

விஷயத்தை விளக்க
20 படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

கிளேஸ் காகிதம்! சுத்தமான பதிப்பு!!

விலை ரூபாய் 1—4—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.

உயிரிலாச் செய்திகட் குயிர்மிகக் கொடுத்து,
ஒளியிலாச் செய்திக் கொளியருள் புரிந்து,
வான சாத்திரம், மகமது வீழ்ச்சி,
சின்னப் பையல் சேவகத் திறமை,
எனவரு நிகழ்ச்சி யாவே யாயினும்
அனைத்தையு மாங்கே யழகுறச் செய்து,
லௌகிக வாழ்க்கையிற் பொருளினை யிணைக்கும்
பேதை மாசக்தியின் பெண்ணே! வாழ்க!
காளியின் குமாரி! அறங் காத்திடுக!
வாழ்க! மனையகத் தலைவி! வாழ்க!

—பாரதியார்.

இன்றிரவு சேவலானது சரியான நேரத்திற் கூவவில்லை. காதலர்கள் தங்களது சரச சல்லாபத்திலிருந்து முத்தமிட்டு விட்டு இன்னும் பிரிய வில்லை. என்றாலுங் கிளர்ச்சிக்காரர்கள் உறங்காமல் விழித்திருந்து தங்களது அழித்தல் வேலையைச் செய்துகொண்டுதா னிருக்கிறார்கள். ஆகையால் ஜாமியா மசூதியிலிருந்து, காலைத் தொழுகைக்கு வாங்கு சொல்லுகிற சப்தங் கேட்கிறவரைக்கும், அதாயக் அரசனுடைய அரண்மனைச் சேவகன் நஹாரா (முரசு) அடிக்கிற சப்தம் வருகிறவரைக்கும், அந்த மூடச் சேவல் உதடோடு உதடு அசைக்கிற (கூவுகிற) வரைக்கும் நீ சந்தோஷமாயிரு.

* * *

இரைப்பொருளை வேட்டை யாடுவதற்காக, முன் காலின் எல்லா நகங்களையும் நன்றாய்த் தீட்டி நீட்டி முன்னால் வைத்துக்கொண்டு, பதுங்கி யிருக்குஞ் சிங்கமானது நாய் குலைக்குமே யென்று பயப்படப் போகிறது?

* * *

உனது மலர் போன்ற கண்களை நித்திரை யென்னுங் குளிர்ந்த நீரால் கழுவு! ரோஜாப் புஷ்பத்தைப் போல் சிரி! புல் புல் பக்ஷியைப் போல் பாடு!

—ஸாயி ஸாதி.

ஆண்டவனே! நீ யென்னை (உனது பக்தி) வலையிலே பிடித்துக் கொண்ட பின், நான் எப்படிப் பறந்து போய் விடுவேன்? என்னுடைய ஹிருதயத்திலே நீ குடிகொண்ட பின்னால், இன்னொருவன் பேரிலே நான் எப்படிப் பக்திக் காதல் கொள்ள முடியும்? என் கண்களிலே பக்திக் கண்ணீரானது சதா சர்வ காலமும் வழிக்கொண் டிருக்கும்போது வேற்று முகம் என் கண்களிலே என்னமாய்ப் படும்?

—உமர் கையம்.

குடும்ப வாழ்க்கை.

வீடு ஒரு பெரிய சாம்ராஜ்யம். அதைச் சார்ந்த முற்ற வெளி, கொல்லை கொடிக்கால், தோட்டந் துறவு, கன்று காலி இவைகளெல்லாம், அந்த மஹா சாம்ராஜ்யத்தின் உட் பிரதேசங்கள். அவற்றின் உள்ளிருந்து கொண்டும், அவற்றை ஏக போகமாக அனுபவித்துக் கொண்டும் ஒரு குடும்பம் உஜ்ஜீவிக்கின்றது. அந்த மனுஷ்யக் கூட்டத்தின் வாழ்க்கை யெப்படி யிருந்தால் இன்பகரமாகவும், தேசோத்காரமாகவும், லோகாதாயமாகவும் இருக்குமென்பது அத்யாவஸ்யம் ஆராயப்பட வேண்டிய விஷயம். ஏனெனில் சமூகத்தின் ஜீவ நாடியாகவும், சமுதாயத்தின் ஹிருதயமாகவும், தேசத்தின் ஆத்மமாகவும் இருக்கின்ற குடும்பமாகிற அஸ்திரவாரக் கல்லின் மீதுதான், உலகம் என்கிற மாளிகையை ஆண்டவன் கட்டி யிருக்கின்றான். வீடு கட்டுஞ் சிற்பிகள் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துவது போல, மனுஷ்ய வாழ்க்கையை வகுக்கின்ற சிற்பிகளின் ஜாதியிலே சேர்ந்த நாமும் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துகிறோம்.

குடும்பம் ஒரு சின்ன உலகம். அங்கே அரசனிருக்கிறான்; அரசி யிருக்கிறாள்; மந்திரி பிரதானிகளு மிருக்கிறார்கள். சாதாரணமான ஊழியக்காரன் முதல், உயர்தரமான உத்தியோகஸ்தர்வரை உண்டு. இவ்வளவு பேர்களுஞ் சேர்ந்து நடத்துகிற குடும்ப நிர்வாஹம், ஒரு அரசாங்கத்தின் இராஜரீகத்தைப் போன்றது; இராஜரீகத்தின் ஜீவாம்ஸமானது.

உலகத்திலே நிகழுகிற எல்லா இராஜரீகங்களும், அவற்றின் உள் அம்ஸங்களாகிற பல இலாக்காக்களுங் கூடக், குடும்ப நிர்வாஹத்தில் இருக்கின்றன. தனியொரு மனிதனால் ஆளப்படுகிற அரசன் ஆட்சி (Monarchy) பிரஜைகள் தங்களைத் தாங்களே யாளுகிற பிரஜாதிபத்திய ஆட்சி (Democracy) இப்பொழுது ருஷியாவில் நடக்கிற பொதுவுடைமை யாட்சி (Soviet Rule) முதலிய எல்லா முறைகளும், தனித் தனியாகவோ அன்றி ஐக்கியமாகவோ அங்கு நடைபெறுகின்றன.

மனிதன் ஒரு விசித்திர ஸ்ருஷ்டியா லேற்பட்டவன்; காட்டு மிருகங்களினின்றும், வானத்துப் பக்ஷிகளிலிருந்தும் மாறுபட்ட பிராணி. பிரபஞ்சத்தோ டளவளாவி, பிரகிருதியின் வாத்ஸல்யமான பராமரிப்பிலே வாழ்ந்து தீர வேண்டியவன். மனுஷ்ய ஜாதியோடும், மிருக ஜாதியோடும், மற்றுமுண்டான ஜீவ வர்க்கங்களோடும் ஒன்றி யிராமல், தனக்குத் தானாய்—ஏகாந்தவாசியா யிருக்க மனிதன் கற்பதில்லை. கூட்டத்திலே பிறந்து, கூட்டத்திலே வளர்ந்து, கூட்டத்திலே வாழ்ந்து, கூட்டத்தாலே புதைக்கப்படுவது மானுஷீக இயல்பு. அதன் உருவகத்தைத்தான் குடும்பம் என்கிறோம்.

ஒருவனை யொருவன் வெறுக்காமல், அன்பு செலுத்தி, அன்யோன்யமாக வாழுவது மனித தர்மம். அதனின்றும் வழுவாமல் சமத்வம், சகோதரத்வம், சுதந்திரம் இம் மூன்றும் நிறைந்து, கல்வியறிவு, கைத்தொழில், செல்வப் பெருக்கு முதலிய நயங்களோடு திகழுகிற ஒரு குடும்பமானது:

"அறிவு, தொழில், உரிமை, ஆக்கைவளமும்
விறல் நாட்டணியே விளம்பு"

என்கிறபடி அந் நாட்டின் அணியாகவும், அழகாகவும் விளங்குகிறது.

மாதிரிப் பண்ணைகள் (Model Farm) வைத்து, அவற்றின் வழியாகத் தேசத்தின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வது போலத் தனிக் குடும்பத்தின் நிர்வாஹத்தை மாதிரியாக வைத்துக் கொண்டு இராஜரீகம் நடத்தப்பட வேண்டும். ஏனெனில் ஜனங்களின் சௌகரியத்திற்காகவே அரசாங்கங்கள் அமைக்கப்படுகிறதே யொழிய, அரசாங்கங்களுக்காக ஜனங்கள் ஸ்ருஷ்டிக்கப்படவில்லை.

குடும்ப வாழ்க்கையில் நிறைந்திருக்கிற சமத்துவ உணர்வையும், சர்தர்மச் சிந்தனையையும் அவ்வளவு ஸ்புர்த்தியோடும் வேறெங்கேனுங் காண்பதுண்டா? தாய் தந்தை, அண்ணன் தம்பி, சகோதரன் சகோதரி, மாமன் மருமகன், மைத்துனன் மைத்துனி, கணவன் மனைவி, குழந்தை குட்டி இவ்வளவு பேர்களும் ஒரு கொத்துப் புஷ்பங்கள் போலும், ஒரு குலைக் காய்கள் போலும், ஒரு கொங்கைக் கனிகள் போலவும் அன்பால், ஆதர்ஸத்தால், ஒன்றி ஒருமித்து வாழ்க்கைச் சகடையை வழி பிசகாமல் இழுத்துச் செல்லுகிறார்கள். அவர்களுக்குள்ளே எந்த விதமான ஏற்றத்தாழ்வுங் கிடையாது; ஜாதி பேதமோ சமய பேதமோ அங்கில்லை; தீண்டாமை யென்கிற தோஷமுங் கிடையாது. ஆண் பெண் சமத்துவத்திலுள்ள ஒரே யொரு குநஷ்டை மாத்திரம் இல்லாவிட்டால் (இந்தியாவில் மாத்திரம்)

சிலருக்கு இப்பொழுதிருப்பது போல் குடும்பமானது ஒரு பெரிய பாரமாக இராமல், புண்ணிய க்ஷேத்திரமாகவும், கோடையிலே யிளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரு' வாகவும், பூரண சுகந்தரும் இன்ப உலகமாகவும் இருப்பதிற் சந்தேகமில்லை.

பாக சாலைக்கும், போக சாலைக்கும் பயன்படத் தக்க போகப் பொருளாகப் பெண்கள் படைக்கப்பட் டிருக்கிறார்கள் என்று தப்பாக எண்ணிக்கொண்டு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைக் கொடுக்க மறுப்பது ஆண்களிடத்திலுள்ள மஹா பெரிய தோஷம். சகவாச உரிமை, சொத்துரிமை, வாக்குரிமை, வாழ்க்கை யுரிமை முதலிய உரிமைகளைப் பெண்பாலாருக்குக் கொடுத்து ஆண்களோடு சரி நிகர் சமானமாய் அவர்களை வைக்காமல் நிராகரிக்க ஆண் மனது எவ்வளவு கடினமானது? எவ்வளவு சுயநலங் கொண்டது? "வீட்டிலுள்ள பழக்கமே நாட்டிலுண்டாம். வீட்டினிலே தனக்கடிமை பிறரா மென்பான், நாட்டினிலே" பிறர்க்கடிமையாவான் என்பது போல நாம் ஒரு குலத்தை (பெண் குலத்தை) அடிமையாக வைத்து ஆண்டு அனுபவித்தால் நாமும் பிறரால் அடிமைப்படுத்தப்பட்டு அவதியுறுவோம் என்பது சாபத்தீடு. "உன்னிடத்திற் பிறன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டு மென்று நீ விரும்புகிறாயோ, அவ்வாறே நீயும் பிறரிடத்தில் நடந்துகொள்" என்கிற கிறிஸ்து வாக்கின் தாதுப் பொருளும் இதுவே யாகும். உனது ஜாதி ஜனங்களுக்கு, அவர்களுக்குரிய உரிமையை யளிக்க நீ மறுத்தால், உனக்குரிய உரிமைகளுக்காக உனது சத்துருக்களை நீ வற்புறுத்துவ தெப்படி?

வீடு ஒரு பெரிய சர்வ கலாசாலை. அங்கே போதிக்கப்படுவதெல்லாம் அருமையான பாடங்கள். கருத்தரிப்பதிலிருந்து காஷ்டமேறுகிறவரை மனிதனுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை வரைவது வீடுதான். கெர்ப்ப சாஸ்திர முறைப்படி கருத்தரித்திருக்குங் குழந்தையை மனுஷ்யனாகவோ, மிருகமாகவோ செய்கிற மஹா சக்தி, தாய் தந்தையரிடமிருக்கிறது. சத்காரியங்களை யெண்ணிச், சத்காரியங்களைப் பேசிச், சத்காரியங்களையே செய்கிற பெற்றோருக்குப் பிறக்கிற குழந்தைகள், சத்புத்ரர்களாகவே யிருக்கிறார்கள். அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்த அபிமன்யு, வில் வித்தையில் மஹா வீரனாகப் பிறந்த கதை கற்பனையல்ல; மனோவஸ்யத்தின் மாயா சக்தி.

"வீடு மனுஷ்யனைச் சிருஷ்டிக்கிறது" (Home makes man) என்று ஆங்கிலப் பேராசிரியர் **ஸ்மைல்ஸ்** என்பவர் கூறுகிறார்.

பெற்றோர், குழந்தைகளுக்கு வெறும் பெற்றோர் மாத்திரமாயிருந்து விடாமல் பாஷை கற்பிக்கும் ஆசிரியர்களாகவும், வாழ்க்கை லட்சியங்களைப் போதிக்கின்ற பேராசிரியர்களாகவும் இருக்கின்றனர். "இன்னது செய்திடேல், இவரொடு பழகேல், இவ்வகை மொழிந்திடேல், இனையன விரும்பேல், இன்னது கற்றிடேல், இன்ன நூல் கற்பாய், இன்னவ ருறவு கொள், இன்னவை விரும்புவாய் எனப் பல தருமம் எடுத்தெடுத் தோதி ஓய்விலா தவரோ டுயிர் விடல்" தாய் தந்தையருக்கன்றிப் பிறரால் சாத்தியப்படத் தக்கதில்லை. இப்படியெல்லாம் நாலா வழிகளிலும் முயன்று பிள்ளைகளுக்கு வருங்கால வாழ்வைப் போதிக்கின்ற பெற்றோருக்குக் குழந்தைகள் தங்களது பிதுர் பக்தியைத் தவிர வேறு யாது காணிக்கை செலுத்துகின்றனர்?

பிள்ளைகளுக்குச் சிறுபோதிலிருந்து அச்சமின்மையை அறிவுறுத்தி வந்தால், அவர்கள் வயது வந்தபோது தேசத்தைக் காக்கும் வீரர்களாக வருவார்கள். குழந்தைகள் அழும்போது பேயென்றும், பூதமென்றும், என்னென்னவோ ஆள் விழுங்கிப் பிராணிகள் இருப்பதாகப் பயமுறுத்துந் தாய்மார் அக் குழந்தைகளைக் கோழைகளாக ஆக்கி விடுகிறார்கள். அது கூடாது. வீரர்களின் கதைகளைச் சொல்லி வீரர்களாக்க வேண்டும். குடும்பரீகத்தின் கல்வி யிலாக்காவை நிர்வஹிக்கின்ற ஆசிரியர்கள் கையிலேதான், தேசத்தின் வருங்காலப் பயிர்களான குழந்தைகளின் வாழ்க்கையிருக்கிறது; அதை நன்கு வகுக்க வேண்டியது அவர்களது கடமை. சற்புத்திரர்கள் தேசத்தின் சத்து; அறிவுடையவர்கள் உலகத்தின் ஆத்மா. தமிழ் நாட்டின் குழந்தைகளுக்குக் கவியரசன் பாரதி, "பாப்பா பாட்டு" என்கிற வேதத்தை வரைந்து வைத்திருக்கிறான். அதை ஒவ்வொரு தமிழ்க் குழந்தைக்கும் மனப் பாடஞ் செய்வித்து, அதன்படி நடத்த வேண்டுமென்பது பிள்ளைகளைப் பெற்றோர்க்கு நாம் விடுக்கும் விண்ணப்பம். பள்ளிக் கல்வியைவிட, மனைக் கல்வியே பல துறைகளிலும் மாண்புறுங் கல்வி.

குடும்பம் ஒரு கூட்டுறவுக் கழகம் (Co-operative Society). அதினின்றுமே கிராம பரிபாலனம், நகர பரிபாலனம், தேச பரிபாலனம் முதலிய எல்லாப் பரிபாலனங்களும் உருக்கொள்ளுகின்றன. குடும்பத்தின் ஒரு தனி நபர் உண்பதும், உடுப்பதும், உழைப்பதும் தன்னொரு சரீர, ஆத்ம நலத்திற்காக மாத்திரமில்லை; அங்குள்ள சகல ஜீவாத்மாக்களுக்காகவுந்தான். அவரவர் தரத்திற்கும், தகுதிக்குந் தகுந்தவாறு, ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும் என்பது குடும்பச் சட்டம். ஆண்கள் ஆண்களுக்குரிய கஷ்ட வேலைகளைச் செய்கிறார்கள்; பெண்கள் பெண்களுக்குரிய சுலபமான வேலைகளைச் செய்கிறார்கள். உழுகிறவன் உழுகிறான்; விதைக்கிறவன் விதைக்கிறான்; அறுக்கிறவன் அறுக்கிறான். அப்புறம் அதைக் குத்தி அரிசியாக்கிச் சமைக்கிறவர்கள் சமைக்கிறார்கள்; எல்லோரும் உண்டு பசியாறுகின்றனர். எல்லோரும் வேலை செய்து எல்லோருஞ் சாப்பிடுகிறது என்கிற இந்த முறையைக் கொண்டுதான் ருஷியாவின் சோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. பொதுவுடைமையின் ஜீவாம்ஸமான கொள்கையும், குடும்ப நிர்வாஹத்திலிருந்தே பிறந்திருக்கிறதன்றி அது ஓர் வானத்துப் பொருளில்லை.

வயிற்றுக்கு உணவு விளைவித்தாயிற்று; மானத்தை மறைக்க உடை வேண்டுமே அதற்கென் செய்வது? கைத்தொழில் செய்ய வேண்டும். சோம்பலிற் காலங் கழிக்கிற குடும்பம் வறுமைக்கு இருப்பிடம். விவசாயத்திலோ அன்றி வேறு பிரவிர்த்தியிலோ ஈடுபட்டிருப்பவர்கள், தங்களுக்குக் கிடைக்கிற ஒவ்வொரு நிமிஷத்தையும் உபயோகித்து, யாதாமொரு கைத்தொழிலைச் செய்து, தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். வெறுமனே சத்திரஞ் சாவடிகளிலும், மடங்களிலும், ஊர்ப் புராணிகளைப் பேசிக்கொண்டு, திண்ணை தூங்கி வேதாந்திகளாயிராமல், வேலை செய்து ஜீவிக்க வேண்டும். வேலை செய்யாதவனுடைய மனதில், சைத்தானவன் சாக்ஷாத்தாகக் குடிபுகுந்து, தனது குறும்பு வேலைகளைச் செய்து, மனிதனை மனிதத்தன்மையிலிருந்தும் பிரித்து மிருகமாக்கி விடுகிறான். அடிதடி! வம்பு தும்பு! கொலை! கோர்ட்டேறல்! இவைகள் யாவும் சாத்தான் கை வேலைகள். இதினின்றுந் தப்புவதற்காகவேனும், மனுஷ்ய வர்க்கம் உறங்கும் நேரம் போக, மற்றைய நேரங்களில் ஏதாவதொரு பிரவிர்த்தியிலீடுபட்டிருக்க வேண்டும். நூற்றலோ, நெய்தலோ, பின்னலோ, பிணைத்தலோ எது லாபகரமாகவும், தகுதியாகவுந் தெரிகிறதோ அதைச் செய்து குடும்பத்தின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டும். காந்திஜீயின் கைராட்டை, குடும்ப வாழ்க்கைக்கு வெகு உபயோககரமானது.

கைத்தொழிலை, வாழ்க்கையின் இரண்டாவது தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறவர்களில், அதிக அவகாசங் கிடைக்கப் பெற்றவர்கள் பெண்கள்தான். ஆனால் அவர்கள் அத் தங்கமான தருணத்தை, உபயோகித்துப் பயனடைவது இனிமேலேதான் ஆக வேண்டும். இந்தியப் பெண்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை வம்பர் மஹாசபை கூட்டி, வாய் சலிக்கப் புராணி பேசிக் கழிக்கின்றனர். அடுத்த வீட்டு அம்புஜம், எதிர்த்த வீட்டு இந்திராணி,

இரண்டாம் வீட்டு இராதை, மூன்றாம் வீட்டு மூக்காயி, நாலாவது வீட்டு நல்லக்காள், இப்படியாக எல்லா அக்காள்களும், ஆயிகளும், அம்மாள்களுங் கூடிக்கொண்டு, அவளையும் இவளையும் பற்றி வம்பு தும்புகள் பேசிக் காலத்தைப் பாழ்படுத்தி விடுகின்றனர். அப்படிச் செய்யப்படாது. ராட்டை சுற்றி அதன் மதுரமான ரீங்காரத் தொனியிலே லயித்து, லாபமும் இன்பமும் அடைய வேண்டும். தாலிக் கயிற்றிற்கும் மானங் காக்கும் ஆடைக்கும், அயல் நாட்டாரை யெதிர் பார்த்துக்கொண்டு இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் இந்தியப் பெண்மணிகள் காத்திருக்கப் போகிறார்கள்?

இவ்வாறு பல துறைகளிலும் இறங்கிக் குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை உழைப்பால் பெற்று, அந்த ஒரு குடும்பம் உஜ்ஜீவிப்பது மாத்திரம் போதாது, பிற குடும்பத்தினருக்கும் பயன்பெற வாழ வேண்டும். தனி மனிதன் எவ்வாறு பிறருக்காகவே மூச்சு விடுகிறானோ, அவ்வாறே ஒவ்வொரு தனிக் குடும்பமும் பிற குடும்பத்தினருக்குக் கூடுமானவரை தங்கள் சக்தியைப் பகிர்ந்து தர வேண்டும். அப்பொழுது நாட்டினிடமாக மனித ஜாதி அன்யோன்ய பாவத்தோடு வாழுவார்கள்.

குடும்ப வாழ்வுக்கு அன்பே ஜீவன்; அன்பே வேலி. குடும்பத்தின் எல்லா அங்கத்தினர்களும் ஒருவரை யொருவர் அன்போடும், ஆதர்ஸத்தோடும் நேசித்து, ஒற்றுமையாக வாழ வேண்டும். ஒரு சரீரத்திலிருக்கிற கை, கால், கண், மூக்கு, செவி முதலிய அவயவங்கள் அததன் வேலையைச் செய்கிறபோது மனிதன் ஈனமில்லாதவனாயிருக்கிறான். கண் பார்க்காவிட்டால் குருடன்; காது கேட்காவிட்டால் செவிடன்; கால் நடக்காவிட்டால் முடவன். இவர்களது வாழ்க்கை பூர்த்தி பெற்றதா யிருக்க முடியாதிருப்பது போன்றே, ஒற்றுமை யில்லாத குடும்ப நிர்வாஹமும் இருக்கிறது. எனவே குடும்பத்தில் ஒவ்வொரு மனிதனுந், தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும், தனது ஜாதி ஜனத்திற்காகவும், தனது சமூகத்திற்காகவும், தனது தேசத்திற்காகவும், உலக மக்களுக்காகவும் உயிர்வாழ வேண்டும்; உஜ்ஜீவிக்க வேண்டும். தன்னலங் கொண்டவன் மனிதப் பதர்; மனிதக் கூட்டத்திலே வசிக்கத்தானும் அவனுக்கு அருகதை யில்லை.

குடும்பம் ஒரு அன்புக் களஞ்சியம். அங்குள்ளோர் அனைவரும் தகப்பன் பிள்ளைப் பாந்தத்திலோ, சகோதரப் பாந்தத்திலோ, மற்றேதேனும் ஓர் பாந்தத்துவத்தாலோ கட்டுண்டிருக்கிறார்கள். அது இரத்தக் கலப்பால் ஏற்பட்டது என்பர் சிலர். ஆனால் எங்கோ தூரந் தொலையிலே, யாரோ, எவரோ, இனங்கூடச் சரியாய்த் தெரியாத

மூன்றாம் பேர்வழியை மணமகனாகவோ, மணமகளாகவோ கட்டிக் கொண்டுவந்து, பழைய குடும்பப் பண்ணையோடு சேர்க்கிறார்கள். அந்த ஆசாமியும் வந்த நாள் முதல், புகுந்தகத்து அன்பிற் குலாமாகிக் குலாவுகிறாள். இது இரத்தத்திலிருந்து பிறந்த அன்பில்லை; ஹிருதயத்திலிருந்து பிறந்தது; காதலாற் சம்மேளித்தது. அக் காதலன்பு இன்னுஞ் சற்று வியாபகமாக வியாபித்துப், பிள்ளைகளின் மீது பரவுகிறது. பின்னர் அவ் வாத்ஸல்யம் வையத்தன்பாக வளர்ந்து, சமுதாயக் காதலாகவும், தேசத்துக் காதலாகவும் மாறுகிறது. இவ்வாறாகக் குடும்பத்தின் வற்றாத களஞ்சியத்திலிருந்து வாரி யிறைக்கப்படும் அன்பினாலேதான் மன்பதைக் கூட்டமும், உலகமும் உயிர் வாழுகிறது. இல்லாவிட்டாற் சிச்சீ இச் சம்சாரம் என்னத்திற்காகும்? ருசியிருக்குமா? ரஸனை யிருக்குமா? பாலைவனத்தைப்போற் பாழடைந்து போகாதா?

வீடு ஒரு பண்டகசாலை. உயிர் வாழ்வுக்கு அவஸ்யமான எல்லாப் பண்டங்களும் அங்கு குவிந்துகிடக்கின்றன. அவற்றை அக் குடும்பத்தா ரனைவருஞ் சம உரிமையோடு சமமாக அனுபவிக்கின்றனர். அன்றன்றைக்கு வந்ததை வயிற்றிலே கொட்டிக்கொண்டு, நாளைக்கென்கிற சிந்தனை யில்லாம லிருந்துவிடுகிற நிஷ்காமிய நினைவு குடும்பத்தாருக்கில்லை; வருஷத்துக்கெல்லாங் காணும்படி சிக்கனமாகச் செலவுசெய்து, மிகுத்துவைக்கிறார்கள். ஊதாரிகளுக்கும், தன் வெறுப்புக் கொண்டவர்களுக்குங் குடும்ப வாழ்வு கசப்பாயிருக்கலாம். ஆனால் ரஸக்ராஹிகளும், கர்ம வீரர்களுங் குடும்பத்தில் இன்ப ருசிகளை அமோகமாக ரஸிக்கின்றனர்.

வீடு ஒரு பாசறை; சைன்யந் தங்குகிற பலத்த கோட்டை. வெளியிலிருந்து வருகிற படையெடுப்புகளையும், கொள்ளையடிப்புகளையும் உயிரைப் பணயமாக வைத்துக் காக்கின்ற ஸ்வபாவம் அங்கிருக்கும் ஒவ்வொருவனுக்கும் ஸ்வபாவத்திலேயே தோன்றுகிறது. தன்னையும், தனது குடும்பத்தாரையும் எதிரிகளினின்றும் அவன் காக்கிறதுபோல எந்த தேசத்துக் கூலிப் படையாற் காப்பாற்ற முடியும்?

இவ்வாறாக வாழ்வின் உண்மைகளைப் பல வழிகளிலும் பகுத்தறிந்து, பிறப்பின் வினையையும், பிறவிப் பயனையுங் கண்டு, கர்மஞ் செய்வதற்காகவே மனிதன் படைக்கப்பட்டிருக்கின்றான். அதை மறந்து அவலமாகக் காலத்தை வீணே கழித்து, நோய்க்கும் நொடிக்கும் இரையாகி மாண்டு மக்கிப்போகாமல், பிறருக்காக மூச்சுவிட்டு, பிறருக்காக மூச்சு வாங்கி, உண்பதும், உடுப்பதும் பிறருக்காகவே யென்கிற எண்ணத்திற் பரதர்மிஷ்டர்களாக வாழவேண்டும்.

இந்தியக் கைத்தொழில்கள்.

திரு. என் வேங்கடரமணன் அவர்கள்.

இக்கால உலக நிலையை உற்று நோக்குமிடத்து, செல்வத்திலும், பிற வளங்களிலுஞ் செழித்து, முன்னேற்ற மடைந்துள்ள நாடு ஒவ்வொன்றுங் கைத்தொழில்களிற் சிறந்து விளங்குவதைக் காணலாம். இக் காலத்தைக் 'கைத்தொழில் யுகம்' என்றே அழைத்தல் வேண்டும். ஊண், உடை இவற்றோடு மக்கள் திருப்தியடைந்து, குடிசைகளில் வாழ்க்கை நடத்திவந்த முற்காலத்தில், விவசாயமே மக்கள் வாழ்வுக்கும், நாட்டின் மேன்மைக்கும் முக்கிய சாதனமா யிருந்ததென்னலாம். ஆயினும் நாளடைவில் ஊணும், உடையும் பற்பல வகைகளாக வளர்ந்து, மாளிகை வாசமும், நாகரீக வாழ்க்கையும் அவசியமாகி, மக்கள் பற்பல விதங்களான சுகபோக நுகர்ச்சிகளை நுகர்ந்துவர முற்பட்டதினின்றும், விவசாயத்தைவிடக் கைத்தொழில்கள் முதன்மையடைந்துவரத் தலைப்பட்டன. எனவே இதுகாலை இந்தியாவும் பிரபஞ்சப் போட்டியில் முதன்மை யடைய வேண்டுமெனில், இந் நாட்டிற் காலத்திற்கேற்ற கைத்தொழில்கள் பலவும் பிரபலமடைய வேண்டுவ தவசியம். தற்போது உலகமெங்குந் தானியங்களுக்கு விலை மிகக் குறைந்துபோனபடியால், விவசாயத்திற் போதிய ஊதிய மில்லாமற்போயிற்று. அதனாற் கோடிக்கணக்கான குடியானவர்களுக்கு வேலையில்லை. முற்காலத்தில் இந்தியாவில் விவசாயமே முதன்மையான தொழிலாக நடந்துவந்தபோதிலும், பாரததேசம் அப்பொழுதே நாகரீகம் பெற்றுச் சிற்சில கைத்தொழில்களையும் நடத்திப் பெருமை பெற்று வந்திருக்கிறது. அழகிய மெல்லிய வஸ்திரங்களைத் தயாரிப்பதில் அக்காலத்திய உலகில், இந்தியாவே தலைசிறந்து விளங்கியது. மெல்லிய துணிகள் இந் நாட்டினின்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன. ஐரோப்பிய நாடுகளிலும், பாரசீகத்திலும், துருக்கியிலும் இந்தியாவிலுள்ள டாக்கா, மசூலிப்பட்டணம் போன்ற இடங்களில் நெய்யப்பெற்ற மஸ்லின் துணிகள் முக்கியமாக விற்கப்பட்டன. ஐரோப்பியர்கள் ஒரு காலத்தில், இந்தியாவிற் கம்பளங் காய்க்குஞ் செடிகளிருப்பதாக அதிசயத்துடன் நம் பருத்திச் செடிகளைப்பற்றிப் பேசியதும் உண்டு. நம்

தேயத்தில் மூல்டான், காம்பே, காசி முதலிய இடங்களில் தயாரிக்கப்பட்ட வஸ்திரங்கள் ஏராளமாக அயல்நாடுகளுக்குச் சென்றுகொண்டிருந்தன. அமிர்தசரஸ், தார்வார், கான்பூர், ஸ்ரீநகர் முதலிய இடங்களில், மேலான கம்பளங்கள் தயார்செய்து வந்தனர். காஷ்மீரம், டில்லி, பனாரஸ் போன்ற இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டுவந்த வுல்லன் சால்வைகள் பெயர்போனவையாகும். அவையனைத்தும் அயல்நாடுகளில் அதிகமான விலைக்கு விற்கப்பட்டுவந்தன. கட்டிட நிர்மாணங்களிலும்; சிற்பத் தொழிலிலும் இந்தியா அடைந்திருந்த உன்னத நிலைமைக்கு நம் நாட்டிற் காணப்படுங் கோட்டை கொத்தளங்களும், ஆலய அமைப்புகளும், கோபுர வகுப்புகளும், பௌத்த ஆலயங்களும், பழம் பெருங் குகை நிர்மாணங்களும், பிறவும் இன்னுஞ் சாக்ஷி கூறுகின்றன. இவை யனைத்தையும் பற்றி யோசிக்கையில், அக்காலத்தில் இந் நாட்டில் விவசாயமே முக்கிய தொழிலாக யிருந்ததாயினும், இதர கைத்தொழில்களும் அக் கால நிலைக்கேற்ப, மேலோங்கி வளர்ந்து வந்தனவென அறியலாகும்.

ஆங்கிலேய துரைத்தனத்தார் இந்தியாவைக் கட்டியாளத் தலைப்பட்டதினின்றும் இந் நாட்டுத் தொழில்கள் மறையத் தலைப்பட்டன; அதற்குக் காரணங்கள் பல. அயல்நாட்டுக் கைத்தொழிற் பொருள்கள், மலிவாக இந் நாட்டில் விற்கப்பட முற்பட்டதினின்றும், இந் நாட்டுக் கைத்தொழில்கள் யாவும் ஒடுங்கலாயின. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் அதிகாரத்தின்கீழ், இந்திய நெசவுத் தொழிலாளர் எவ்வாறு ஒடுக்கப்பட்டன ரென்பது ஆராயத்தக்கதாகும். இந்தியாவில், கம்பெனியாரின் அதிகாரம் ஆரம்பித்த காலத்தில் இந்தியத் துணிகள், இந்தியக் கப்பல்களில் பெருவாரியாக இங்கிலாந்துக்குச் சென்று விலையாகி வந்தன. அதுபோது ஆங்கிலேயர், தம் நாட்டில் இந்தியத் துணிகளை விற்கவொட்டாமல் தடுக்கவேண்டி, மேற்கொண்ட முயற்சிகள் பல. இந்தியத் துணிகளுக்கு அதிகச் சுங்க வரி விதித்தனர். ஆங்கிலேய நாட்டில் ஆலைகளை ஸ்தாபித்து, அபரிமிதமாகத் துணிகளை உற்பத்திசெய்ய முற்பட்டனர். அயல் நாட்டுத் துணிகளை வாங்கும் ஆங்கிலேயர்களுக்கு அபராதம் விதிக்கவும் முனைந்தனர். அதே காலத்தில் இந்தியாவில் ஒப்பந்த முறையாலும், பிற வகையாலும், இந்திய நெசவுத் தொழிலாளரைக் கட்டாயப்படுத்திக் கம்பெனியார் இந் நாட்டு வர்த்தகத்தைக் கைப்பற்றலாயினர். இந்தியக் கப்பல்களுக்குப் போட்டியாக, ஆங்கிலேயக் கப்பல்களை நடத்தினர். இதுபோன்ற பல காரணங்களால் இந்தியத் தொழில்கள் குன்றலாயின. ஒரு நாடு பொருளாதாரத்தில் வளம்பெற வேண்டுமாயின், அந் நாட்டில் தயாரிக்கப்படும் பொருள்கள் உடனுக்குடன் விற்பனையாகத்தக்க சாதனங்கள் இருக்கவேண்

டும். இந்திய வர்த்தகம் பெரும்பாலும் அயல்நாட்டாரின் கைவசமானதினின்றும் இந் நாட்டுப் பொருள்கள் வெளிநாடுகளுக்குச் செல்லுவதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. மேலும் இங்கிலாந்தில் மில்கள் தோன்றி, விரைவாகவும், அளவில் அதிகமாயும், நயமாகவுந் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டபடியால், அத் துணிகள் இந் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, விலை சரசமாக விற்கப்பட்டன. அதனால் இந்தியக் கைத்தொழிலாளரனைவருக்கும் நஷ்டமுண்டாயிற்று. அக் காலத்தில் இந்திய வாணிபத்தை நடத்தும் முறைகள் யாவும் ஆங்கிலேயருக்கு அனுகூலமாக மாற்றி யமைக்கப்பெற்றன. அம் மாற்றம் இன்றும் அப்படியே நிலைபெற்றிருப்பதால், இந் நாட்டு வர்த்தகத்திற்கு எத்தனையோ இடையூறுகள் இன்றளவுங் குறுக்கிட்டு வருகின்றன. மூலப் பொருள்களை விளைவித்து, வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறதன்றி, அவற்றைக்கொண்டு இந்தியர் பற்பல கைத்தொழில்களை இயற்றுவதற்கு, வசதிக ளில்லாமலிருக்கின்றன. இது காலை விலைவாசிகள் இறங்கிப்போனபடியால், கோடிக்கணக்கான இந்திய மக்கள், நாட்டுக்கு முதன்மையானதான விவசாயத்தைக்கூட விடவேண்டியவராகின்றனர். இந் நிலைமையில் நில வரியையுந் துரைத்தனத்தார் மேன்மேலும் ஏற்றிக்கொண்டே போகின்றனர். இந்திய விவசாயிகளுக்கு அனுகூலமாக இந்தியத் துரைத்தனத்தார் இது காலை நீர்ப்பாஸான (இர்ரிகேஷன்) வேலைகள் பலவற்றைச் செய்து வருகிறார்கள். ஆயினும் இனிமேல் விவசாயத் தொழில் அவ்வளவு ஊதியத்தைக் கொடுக்கு மெனத் தென்படவில்லை. நவீன முறைகளைக் கைப்பற்றி, விவசாயத் தொழிலை வளர்த்துவர முற்பட்டாலும், அதனால் வயிற்றுக்கின்றிப் பட்டினி கிடந்து வாடும் கோடிக் கணக்கான குடியானவர்களுக்கு ஒரு வேளை (A single meal) உணவு கிடைக்கலாமாயினும், அவர்களின் நிலை முழுதும் நன்மை யெய்த வேண்டுமாயின் கைத்தொழில்களைக் காலத்திற்கேற்ப வளர்த்துவர வேண்டுவது அவசியமாகும்.

நம் நாட்டில் நிலக்கரித் தொழில் சிறுபான்மை நடந்துவருகிறது. அதை மேன்மேலும் வளர்த்துவர ஜனத் தலைவர்கள் முற்படவேண்டும். பம்பாய், அஹமதாபாத், நாகபூர் போன்ற நகரங்களில் தோன்றியுள்ள துணி மில்லுகள்போற் பல நாட்டில் பிற இடங்களிலும் ஏற்படவேண்டும். நாட்டுப்புறங்களிற் குடியானவர்கள் விவசாய வேலைகள் இல்லாத ஓய்வு காலங்களிற் பலவித குடிசைத் தொழில்களை யியற்றும்படி செய்யவேண்டுவது இன்றியமையாததாகும். ஆண்டுதோறும் எழுபது கோடி ரூபாய்க்கு மேலாக அயல் நாட்டுத் துணிகள் இந் நாட்டுக்கு வந்துகொண்டிருப்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதை முன்னிட்டே காந்தியடிகளார் கடந்த சில

வருடங்களாகக் கதர் இயக்கத்தைக் கண்டு, வளர்த்துவருகிறார். அவ் வியக்கத்தின் பயனாய் நாட்டுக்கு ஏற்பட்டுவரும் நன்மைகளைப் பத்திரிகைகளின் வாயிலாகப் பலரும் அறிந்திருப்பர். எனினும் நாட்டின் தேவைக்கேற்ப ஏராளமான துணிகள் இன்னுந் தயாரிக்கப்படவேண்டி யிருக்கின்றன. நம் நாட்டிற் கரும்புப் பயிர் செய்வதற்கேற்ற வசதிகள் அதிகமாக இருந்தும் கோடிக்கணக்கான ரூபாய் விலை பெறும் அயல்நாட்டுச் சர்க்கரை, ஆண்டுதோறும் இங்கு வந்துகொண்டிருக்கிறது. இன்னும் இதுபோன்ற பல பண்டங்களை வாங்கும் முகத்தான் இந்தியாவின் பணம் கோடிக்கணக்காக அயல் நாடுகளைத் தேடி யோடிக்கொண்டிருக்கிறது. முக்கியமாகத் துணிகளையும், சர்க்கரை முதலியவற்றையும் அயல்நாடுகளினின்றும் வாங்குவதை விடுத்து, அவற்றை இந் நாட்டிலேயே தயாரித்துக்கொள்ள முற்படாதவரையில், இந்தியா ஒருபோதும் மீட்சியடைய முடியாது. மேலும் உலகியற் பொருளாதாரத் துறையில் மீண்டும் இந்தியா தலையெடுக்க முடியாதவாறு விரைவில் வீழ்ச்சியடையவும் நேரும்.

இதனிடையில் ஜப்பான் தேசத்தின் போட்டியால், இந்தியத் துணி மில்லுகளுக்கு அதிக நஷ்டமேற்படலாயிற்று. அதனால் இந்திய ஆலை முதலாளிகளும், ஜனத் தலைவர்களுஞ் செய்த கிளர்ச்சி மிகவாகும். அதன் பலனால் இந்தியாவில் இறக்குமதியாகுஞ் ஜப்பான் துணிகளின் மீது சிறிது அதிகமான சுங்க வரியை விதிக்க இந்திய துரைத்தனத்தார் மனமிசைந்தனர். அதுபோலவே இந்தியத் தொழில்களுக்குப் பலவகைகளிலும் துரைத்தனத்தார் உதவி புரிய வேண்டியிருக்கிறது. காகிதங்கள், தீக்குச்சிகள், பலவகைப் பட்டுகள், பீங்கான்கள், கண்ணாடிகள், சோப்புகள், புட்டிப் பால்கள், செயற்கை உணவுகள் முதலியவற்றைத் தயாரிப்பதற்கேற்ற வசதிகள் நம் நாட்டில் அதிகமாகவுள. இதுபோது வங்காளத்தில் செய்யப்படுங் காகிதங்களும், சென்னையிற் செய்யப்படும் காகிதப் பென்சல்களும், இந் நாட்டிற் செய்யப்படும் இந்தியத் தீக்குச்சிகளும் அயல் நாட்டுச் சரக்குகளுக்கு எத்துணையும் இளைத்தவை யல்லவென்பதை யாரால் மறுக்கமுடியும்? எனவே தேசத் தலைவர்களும், பொது ஜனங்களும், துரைத்தனத்தாரும் இந் நாட்டிற் பல கைத்தொழில்களையுங் கண்டு, வளர்ப்பதற்குக் கவனஞ் செலுத்தவேண்டும். துரைத்தனத்தாரின் துணையின்றேல்- எந்தத் தொழிலும் விருத்தியடைய முடியாதாயினும், பொது மக்கள் ஊக்கங்கொண்டு, ஒற்றுமையுடன் உழைப்பார்களாயின் துரைத்தனத்தாரின் துணையைப் பெறுவது சுலபமாகவே முடியும். ஐரோப்பிய மகா யுத்தத்தின் பயனாய், அக்காலத்தில் இரும்புத் தொழிலில் இந்தியாவில் முதன்மை யெய்தி மேலோங்கிய தாதா (Tata) கம்பெனியார், அத் தொழிலில்

எவ்வளவோ ஊக்கங் காட்டியபோதிலும், கோடிக்கணக்கான விலை பெறும் இரும்பு இன்னும் அயல்நாடுகளிலிருந்து வந்துகொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய இந்திய நாட்டில், தாதா கம்பெனியைத் தவிர அது போன்ற இன்னொரு இரும்புக் கைத்தொழிற் ஸ்தாபனத்தைக் காணமுடியவில்லை. ஒரு காலத்தில் நல்ல இரும்பைக்கொண்டு, யுத்தாயுதங்களைச் செய்து, அயல்நாடுகளுக்கு அனுப்பி வந்த இந்தியா, இன்று சிறு பேனாக்கத்தி முதல் பெரிய தண்டவாளங்கள்வரையில் பலவகை இரும்புச் சாமான்களுக்கு அயல்நாடுகளை எதிர்பார்க்கிற நிலையில் இருப்பது விசனிக்கத் தக்கதன்றோ? "இரும்புயுக"மெனப் பாராட்டப்படும் இவ் விருபதாவது நூற்றாண்டில், இரும்புக்கிருக்கும் முதன்மை வேறெந்த உலோகத்திற்கு மில்லையென்னலாம். எனவே இவ் விஷயத்தில் இந்தியர் ஊக்கஞ் செலுத்த வேண்டுவது அவசியமாகும். இன்று இந்தியாவிற் கடிகாரங்கள் செய்யத் தொடங்கியிருக்கின்றனர்; கண்ணாடிகள் செய்ய முற்பட்டிருக்கின்றனர்; மோட்டார்கள் சமைக்க முனைந்திருக்கின்றனர்; புதியமாதிரி லாந்தர்கள் (Lanterns) தயாரிக்கப் புகுந்திருக்கின்றனர். இன்னும் பல புதிய தொழில்கள் புறப்பட்டிருக்கின்றன. இவை யனைத்தும் எங்கே, யாரால், எவ்வாறு நடந்துவருகின்றன வென்பதை யறிய முயற்சித்தீர்களா? உடனே ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு சுதேசிக் கடையைத் திறக்க முயலுங்கள். அக் கடையில் இந்தியாவிற் செய்யப்படும் பொருள்களைத் தவிர வேறு வஸ்துக்களுக்கு இடமளிக்காதீர்கள். இந்தியாவில் எங்கெங்கே, என்னென்ன, நவீனக் கைத்தொழில்கள் நடைபெறுகின்றன வென்பதை அவ்வப்போது தெரிந்து, பிரசுரங்களின் மூலமாக வெளியிடுவதற்கு இந்திய வியாபாரச் சங்கங்கள் முயலவேண்டும். அவ்விதப் பிரசுரங்கள் ஒவ்வொரு சுதேசிக் கடையிலும், பொது மக்களின் அறிமுகத்திற்கு வைக்கப்பட வேண்டும். இது நிற்க, இந்தியாவில் இதுகாலைத் தோன்றியுள்ள சுதேசி இயக்கத்தின் தீவிரத்தைக் கண்டு, அயல்நாட்டு முதலாளிகள் பலர் இந் நாட்டில் தொழிற்சாலைகளை ஏற்படுத்திப், பலவிதப் பொருள்களைத் தயாரித்து, அவற்றை இந்தியாவிற் செய்ததென விளம்பரமிட்டு, விற்றுப் பணந் திரட்டிச் செல்ல முற்பட்டிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் நடத்துந் தொழிற்சாலைகளிற் கூலி வேலை செய்து, சொற்ப ஊதியம் பெறுபவர் இந்தியர்கள் சிலராக இருப்பினும், அத் தொழிற்சாலைகளின் விளைவாகிய பெரும் பயனைக் கொள்ளைகொண்டு போகிறவர்கள் யார் என்பதைச் சிந்திக்க வேண்டும். நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் இந்தியர்களுக்குச் சொந்தமாக இல்லாத எந்த ஸ்தாபனமும் சுதேசி என்ற பெயரைப் பெறமுடியாதென்பது உறுதியாகும். ஆகவே சுதேசி என்ற பெயரைத் தாங்கிப் புறப்படும் போலிச் சரக்குகளைக் கண்டு ஏமாறலாகா

தென்பது கவனிக்கத் தக்க முக்கிய விஷயம். அரசியற் கலப்பின்றிச் சுதேசக் கைத்தொழில்களையும், பொருள்களையும் ஆதரிக்கும் முறையில் இந்திய ரனைவரும் யாதொரு கட்சி பேதமும், சமய பேதமும், ஜாதி பேதமும், சமூக பேதமுமின்றி முன்வந் துழைக்க முற்பட வேண்டும். இஃது துரைத்தனத்தாரின் எவ்வித அடக்குமுறைகளுக்கும் ஆளாகக் காரணமில்லை. ஒவ்வொருவருக்கும், தம் தாய் நாட்டுப் பொருள்களை ஆதரிப்பதென்பது பிறப்புரிமையாகும்.

இந்தியத் துரைத்தனத்தார் கோலியுள்ள பொருளாதாரத் திட்ட நிர்மாணத்திலும், வர்த்தக முறையிலும் இந்திய மக்களின் நன்மை கவனிக்கப்படாமல், ஆங்கிலேயரின் நன்மையே முதன்மையாகக் கருதப்படுகிறதென்று இந்தியத் தலைவர்கள் கூறுவதும் சிந்திக்கப்பட வேண்டிய விஷயம். ஒட்டவா மகாநாட்டின் முடிவாகப், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வியாபார ஒப்பந்தமும், அதற்கு முன்னரே ஏற்படுத்தியுள்ள நாணய மாற்று முறையும் இந்தியாவின் நன்மைக்கெனப் பரிணமிக்கும் நாளே நாட்டுக்கு நன்னாளாகும். மாகாண சட்டசபைகளிலும், இந்தியா சட்டசபையிலும், இந்தியப் பிரதிநிதிகள் ஆரவாரத்துடன் உபந்நியாசங்கள் புரிந்து அமர்ந்துவிடுவதோடு அமையாது, ஜனங்களிடையில் தீவிரமான பிரசாரஞ் செய்து, நாட்டின் பொருளாதார முறையை நமது நன்மைக்கான வகையில் மாற்றியமைக்க முயற்சி செய்ய வேண்டும். இந்தியப் பொது மக்களும், சுதேசக் கைத்தொழில்களை யாதரிப்பது தங்கள் முக்கிய கடமையெனக் கொண்டு, எங்கும் பலவித கைத்தொழில்களை ஸ்தாபிக்கவும், சுதேசம் பண்டகசாலைகளை ஏற்படுத்தவும், கூடியவரையில் அயல்நாட்டுப் பொருள்களை வாங்காமல், நம் நாட்டுப் பொருள்களையே வாங்கவுந் தலைப்பட வேண்டுவது மிகவும் அவசியமாகும். "பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தன"வன்றோ? சிந்தியுங்கள். கடமையைச் செய்ய முன் வாருங்கள்.

கிழக்கிலும், மேற்கிலும் ஜன சமுதாயங்கள், முதுகொடிந்து இரத்தங் கக்கிக்கொண்டு கிடக்கின்றன. அந்தப் புண்களை ஆற்றுவதற்காக அநேக ஆத்மாக்கள் வைத்தியனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன.

* * *

பயப்படாதே! உனது தினப் பிரவிர்த்தியைக் கைவிட்டு விடாதே! நீ தேடுவதை வனத்திலே காண மாட்டாய். அங்கேன் ஓடுகிறாய்? உன்னை விட்டு நீ ஓடிவிட முடியாது. உழை. உழைப்பாலேதான் சுதந்திரம் அடைவாய்.

— வஸ்வானி.

சீன தேச கேசரி: சன யாத-சேனன்.

(DR. SUN YAT-SEN.)

திரு. தினகரன் அவர்கள்.

IV

இப்படித் தேச தேசாந்தரியாகத் திரிந்த சன யாத-சேனனின் நாடோடி நாட்களிலே எத்தனை யெத்தனையோ விபத்துக்கள் குறுக்கிட்டிருக்கின்றன. அவைகளிலெல்லாம் அவனுக்குத் தெய்வ சகாயம் ஏராளமாயிருந்தது. இயல்பில் இருந்த ஆகர்ஷண சக்தியாலும், அத்யாத்ம சமர்ப்பணத்தாலும் தேசாபிமானிகள் மாத்திரமில்லை, தேசத்துச் சத்துருக்களும், தேசத் துரோகிகளுங்கூட சன யாத-சேனனின் தோற்றத்திலுந் தேற்றத்திலும் வஸ்யமாயினர். இதற்குச் சாக்ஷியங்களாகப் பல பல கூறலாம். அவைகளில் இரண்டே யிரண்டு சந்தர்ப்பங்களை மாத்திரம் இச் சரித்திரச் சுருக்கத்திற் குறிப்பிடுகிறேன்.

ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் மாறு வேடம் பூண்டு, தலை மறைவாய், ஒற்றர்களின் யாதனையையும், வறுமையின் வேதனையையுஞ் சுமந்துகொண்டு திரிந்த சேனனுக்குத் தன் தாய்நாட்டை ஒரு முறை கண்ணாலேனுங் கண்டு களிக்க வேண்டு மென்கிற தீக்ஷண்யமான ஆசை பிறந்து, இரகசியமாக யாத்திரை செய்து, நேகிங் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தான். ஆனால் கப்பலை விட்டுக் கீழிறங்கத் தைரியம் வரவில்லை. அடித்தட்டில் ஓர் அறையிலே ஒளிந்துகொண்டிருக்கின்றான். கப்பல் வேலைக்காரர்களெல்லாம் சன யாதனுக்கு உடந்தையாயிருக்கிறார்கள். சமயம் பார்த்துச் சீனாவின் மண்ணிலே யிறக்கிவிடுகிறது என்றெல்லோருங் காலத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தபோது எவனோ ஒரு படுபாவி, யாதனுடைய ஆசையிலே மண்ணைப் போட, அங்கு வந்து சேர்ந்தான். கப்பற் சேவகர்களுக்கு வயிற்றிலே தீப் பாய்ந்தது. ஆனாற் சன யாத-சேனன் சித்தங் கலங்கவே யில்லை.

வந்தவன் யாத-சேனனை நன்றாய் அடையாளங் கண்டுவிட்டான். எதிரே ஸ்திரமாய் நின்றுகொண்டு சொல்லுவான்: "சன யாதா! நீ யிப்பொழுது என் கைப் பிடிக்குள் ளிருக்கின்றாய். அரசாங்கத்தாரிடம் உன்னை நான் பிடித்துக்கொடுத்துப் பதினாயிரம் ரூபாய் பரிசு பெறப்போகிறேன்; என்ன சொல்லுகிறாய்?"

சேனனுடைய கண்கள் திகைப்புக் குறி காட்டவில்லை. முகம் மலர்ந்தது; ஹிருதயம் யதார்த்தம் போலவே ஓடிக்கொண்டிருந்தது. தேசாவேசத்தாலும், ஆத்ம சமர்ப்பணத்தாலும் வார்த்தைகள் தீக்ஷண்யத்தோடும் புறப்படுகின்றன. அத்துடன் அவன் பார்வை நன்றாய் அவனைப் பிடிக்கவந்த அந்த ஆளின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது. அதிலே வந்தவன் வஸியமாகிவிட்டான். மேலுஞ் சன-சேனன் சொல்லுவான்: "நண்பனே! நான் உனக்கு என்ன கெடுதலைச் செய்தேன்? அல்லது வேறு யாருக்குத்தான் என்னால் தீங்குண்டு? உனக்கும், சமஸ்த சீனத்துக்குந் தொண்டு செய்கிற இந்த ஊழியனைச் சர்க்கார் வசம் பிடித்துக் கொடுப்பதால் நீ யென்ன பிரமாதமான பலனை யடைந்துவிடப்போகிறாய்? என்னை நீ சத்துரு பக்ஷத்தாரிடம் ஒப்புவிப்பதால் என்னையல்ல, உனது தேச மாதாவை—பிறந்த பொன்னாட்டைப் பதினாயிரம் ரூபாய்க்கு விற்றவனாகிறாய். உனக்கு இவ்வளவேனும் மனச்சாக்ஷி யிருக்குமானால்—தேசிய உணர்வு இருக்குமானால்...உன் னிஷ்டப்படி நீ செய்யலாம். என் னுயிரைப்பற்றிய ஆசை எனக்கில்லை. மரண பயத்தை வென்றவன் சன-சேனன். இப்பொழுது உனக்கு முன்னே இரண்டு பொருள்கள் இருக்கின்றன: ஒன்று பணப் பரிசு; இன்னொன்று தேசச் செல்வம். இந்த இரண்டில் நீ எதை ஸ்வீகரிக்கப்போகின்றாய்? தேசச் செல்வம் அழிவற்றது; உரிமையுடையது. சத்துருக்கள் கொடுக்கும் பரிசு சாச்வதமல்லாதது; தேசத்துக்கு நஷ்டத்தையுங் கஷ்டத்தையுந் தருவது."

இவ் வுத்கிருஷ்டமான வார்த்தைகளைக் கேட்டதும் அந்த ஆள், மகுடித் த்வனி கேட்ட கிருஷ்ண சர்ப்பத்தைப்போல லயித்துவிட்டான். துரோகச் சிந்தனை அவனில் மங்கிப்போய்ச், சன யாதனின் பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்து, மன்னிப்பு வேண்டினான். சேனன், மனித மரியாதையில் அவனை மன்னித்ததுடன் ஆசீர்வதிக்கவுஞ் செய்தான். விபத்து விலகிவிட்டது.

அடுத்த ஆபத்து இன்னும் அதி பயங்கரமானது. இப்பொழுது சன-சேனன் தனியொரு மனிதனின் வசமில்லை; ஒரு பட்டாளத்தினிடஞ் சிக்கிவிட்டிருக்கிறான். நாலா பக்கங்களிலுஞ் சைனிகர்கள் தேனடையை ஈக்கள் மொய்ப்பதுபோலச் சூழ்ந்துகொண்டார்கள். சரீர சக்தியால் தப்புவதற்கு வழியில்லை; வஸிய மந்திரத்தை யுச்சரித்துத் தப்பினால்தானுண்டு. இல்லாவிட்டாற் சேனன், தூக்குமேடையில் தூங்கவேண்டியவன்.

மானஸ சக்தியானது மஹா பயங்கரமான வனராஜனும், மிருகேந்திரனுமாகிற சிங்கத்தைக்கூட வசப்படுத்திவிடுகிறது. தின்ன வரும் புலி தன்னையும், மனிதன் அன்பால் ஆட்கொண்டு விடுகிறான். அப்பேர்ப்பட்ட கொடிய சிப்பாய்களுஞ் சன யாதனுடைய மானஸ சக்தியிலும், ஆத்மத் தியாகத்திலுங் கட்டுண்டுபோனார்கள். தனது தாரக மந்திரமாகிற தேசோச்சாடனத்தை நன்றாய் உபதேசித்தான். சிப்பாய்கள், சிப்பாய்களேயாயினும், ஏகாதிபத்திய சர்க்காரின் சேவகர்களென்றாலும் மனிதர்களில்லையோ; சீனர்களல்லையோ! தங்களுடையவும், தங்கள் தேசத்துடையவும் உத்தாரணத்திற்காக ஊழியஞ் செய்கிற பரமாத்மாவைப் பிடித்துக்கொண்டு போய்த் தூக்குமேடை யேற்ற, அவர்களது மனது கல்லாயிருக்கவில்லை. ஈர நெஞ்சோடு சன-சேனனை அவனது போக்கில்—யதேச்சையில் விட்டுப் போய்விட்டார்கள். மரண பயத்தை ஜெயித்தவர்கள் உலகத்தையே ஜெயித்தவர்களாகிறார்கள்.

இந்தக் காலங்களிலே சீன தேசத்தில் யாது நடக்கின்றது? தெய்ப்பிங் புரட்சியில் அடிபட்ட தேசியச் சீனர்கள் அப்படியே அடங்கிப்போய்விட்டார்களா? பர்மா, கொரியா முதலிய நிலப் பரப்புகளை அந்நியர்கள் ஆட்கொண்டுவிட்ட பின்னால், அவ்வளவு மானஹானியையுஞ் சுமந்துகொண்டு, அவர்கள் அயர்ந்திருந்தார்களா? இரகசியத்தில் இன்னொரு புரட்சிக்கான சகல முஸ்தீபுகளையும், சர்வ பிரயத்தனங்களையுஞ் செய்துவந்தார்கள். "விதேசிச் சைத்தான்களை"ச் சீனத்துக்கு வெளியே விரட்டிவிட வேண்டுமென்கிற வேகத்தில் வேலைகள் நடந்தன. மஞ்சு மன்னனைத் தொலைப்பதற்கும் ஏற்பாடு ஆகிக்கொண்டிருந்தது.

இருபதாவது நூற்றாண்டின் முதலாவது வருஷமாகிய 1900-ம் ஆண்டு பிறந்தது. இற்றை நாட்களிற் சீனர்கள், சுத்த சுயாதீனர்களாய் வாழப்போவதற்குப் பீடிகையாகவும், களப் பலியாகவும் அவர்கள் கிளர்ச்சி கொண்டு புரட்சித் தீயிடைப் புகுந்தார்கள். பாக்ஸர் என்கிற இடத்திலே சீனர்கள் பயங்கரமான இரத்தக் களரி கொண்டாடினர். நர ஹத்தியும், நாச வேலையுந் தொடர்ந்தன. ஆனால் அதுவோர் கட்டுப்பாடான புரட்சியில்லை. காலத்திற்கு முந்தி அவசரத்தாலும், ஆத்திரத்தாலும் ஆரம்பிக்கப்பட்டது. சீனமெங்கும் ஏககாலத்திற் கிளம்பி அன்னியச் சத்துரு பக்ஷத்தாரைச் சர்வ நாசஞ் செய்கிறது என்கிற உத்தேஸ்யத்தைக் கடந்து, ஆரம்ப சூரத்துவத்தில் பாக்ஸர் புரட்சிக்காரர்கள் இரத்தந் துடிக்கப், படபடத் தெழுந்துவிட்டார்கள். உடனே மஞ்சூவும், இதர வல்லரசுகளுந் தங்கள் தங்கள் படைகளை யெல்லாம் ஒன்று சேர்ந்துப் புரட்சியை யடக்கிவிட்டனர். சீன ஜனக் கிளர்ச்சி

ஊழிக்காற்றி லகப்பட்ட பஞ்சுபோ லாயிற்று. கிறிஸ்தவப் படுகொலையையே பரம உத்தேஸ்யமாகக் கொண்டு, சீனர்கள் கிளர்ந்தெழுந்தார்கள் என்றோர் கற்பனைக் கதை கட்டப்பட்டது. தேசிய லட்சியம் அப் புரட்சியில் இல்லவே இல்லை யென்கிற இரத்தப் பொய்யையுங் கூறினார்கள்.

பாக்ஸர் புரட்சியின் விலை கொஞ்சமல்ல. உயிர்ச் சேதத்தோடு ஈட்டுப் பணமாக, சீனக் கடற் கரைகளிற் சுங்கத் தீர்வை வசூல் செய்து கொள்ளுவதையும், அந்நியர்கள் தங்கள் கையிலே வைத்துக்கொண்டார்கள். பெக்கிங் முதலிய துறைமுகங்களில் விதேசித் துருப்புகளைச் சீனர்கள் செலவிலே வைத்துக்கொள்ளுவ தென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறாகச் சீனர் செய்த மூன்றாவது முயற்சியும் பாழாய்ப் போய்விட்டது.

கூட்டக் கொள்ளைக்காரர்கள்கூட கட்டுப்பாடுடனும், ஒற்றுமையோடும் ஒரு காரியத்திலே இறங்குகிறார்கள். கொள்ளை யடித்த செல்வத்தைப் பகிரும்பொழுது அவர்களுக்குள்ளே பாக விஸ்தியில் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டு அபிப்பிராய பேதப்படுகின்றனர். அந்த பேத வாதமே அவர்களைக் காட்டிக்கொடுத்து விடுகிறது; கொள்ளை கொடுத்தவர்கள் நன்மை யடைகிறார்கள். பாக்ஸர் புரட்சிக்கு நஷ்ட ஈடாகக் கிடைத்த பிரதேசங்களையும், வர்த்தக உரிமைகளையும் அனுபவிப்பது சம்பந்தமான தகராறு பிறந்தது. ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களுஞ் சம பாகங் கேட்டார்கள். பிரெஞ்சுக்காரர்களின் ஒப்பந்த உதவியைக் கொண்டும், ஜெர்மனியின் தூண்டுதல் பெற்றும், மஞ்சூரிய, மங்கோலியப் பிரதேசங்களிற் சில பகுதிகளைத் தனக்குத் தானே ஸ்வாதீனஞ் செய்துகொள்ள வேண்டுமென்று ருஷியா விரும்பிற்று. தென்றல் முற்றிப் புயலானது போல், இத் தாவா, ருஷியர்களையும் ஜப்பானியர்களையும் ஒரு போரிலே இறக்கி விட்டது. ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களுக்குச் சைன்ய சகாயமும், மற்றுஞ் சகாயங்களுஞ் செய்தார்கள். ஒரு லட்சத்துக்கு மேற்கொண்ட உயிர்களையும், கோடிக் கணக்கான பணத்தையும் இழந்தாலும் ஜப்பான், ருஷியாவை வென்று விட்டது.

ருஷிய-ஜப்பான் யுத்தத்தினால் சீனாவுக்கு நேரடியான நன்மை யெதுவும் நேர்ந்துவிடா விட்டாலும் நல்லதோர் பாடத்தைக் கற்றுக்கொண்டது. கீழ் நாட்டை அடிமைப் பிரகிருதியில் ஆழ்த்தி வந்த மேல் நாட்டை 'நில்'லெனத் தடுத்த ஜப்பான் தன், தறுகண் ஆண்மையைப் புகழ்ந்தது. ஜப்பான் ஒரு சின்னஞ்சிறு தீவு. ஆள் எண்ணிக்கையிலும் ஜப்பானியர்கள் ரொம்ப ரொம்பக்

குறைந்தவர்கள். இந்தியாவின் நிலப் பரப்பில் ஏழில் ஒரு பங்கும்; ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்குங் கொண்ட ஒரு சின்ன தேசம் ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றை ஜெயிப்பதென்றால் சாமான்யமா? இவ்வுக்கிர வீர சக்தியானது சீனர்களின் சிந்தனையிலும் புகுந்தது. நாகரீகம், கலை வளர்ச்சி, கைத்தொழில் முதலிய எல்லாத் துறைகளிலுஞ் சீர்திருத்திச் சீனாவைச் சுதந்திர நாடாக்கவேண்டுமென்று அறிவாளிகள் பலர் எண்ணினார்கள். ஏதேச்சாதிகாரமாக இட்டதே கட்டளை, இஷ்டமே சட்டமாக ஆண்டுகொண்டிருக்கும் மஞ்சு மன்னனைத் தொலைத்துவிட்டு, அந்த ஸ்தானத்திலே ஜனங்களின் நன்மைக்காக ஜனங்களால் ஆளப்படும் ஜனாதிபத்தியத்தை ஸ்தாபிக்காதவரை எதுவும் அசாத்தியமானதென்று தேசாபிமானிகள் வற்புறுத்தினர். ஆனால் அத் திட்டத்தின் மீது வேலை செய்யச் சன யாதனைத் தவிர வேறு யாரால் முடியும்?

நாடோடியாகத் திரிந்த யாத-சேனன் தனது உத்தேஸ்யமற்ற ஓட்டத்தால் நாட்டிற்கு யாது பயனென்றெண்ணத் தலைப்பட்டான். ஆனால் உண்மையில், ஆங்காங்கு வெளி நாடுகளில் வியாபாரார்த்தமாகவும், வேறு பிரவிர்த்திக்காகவுஞ் சென்றிருந்த சீனர்கள், சன-சேனனின் ஆணித்தரமான பிரசண்ட பிரசாரத்தை நன்றாய் ஊன்றிக் கேட்டார்கள். அதன் பலனைத் தங்களது ஸ்வதேசத்திற்குங் கொண்டுபோய் வாலிபச் சீனர்களுக்கு வழங்கினார்கள். தேசமெங்கும் ஒரு புதிய ஆதர்ஸம் பரவலாயிற்று. 1901-ம் ஆண்டில் டன்-மன்-ஹூ என்கிற விடுதலைச் சங்கம் ஸ்தாபிக்கப் பெற்றது. அந்தக் கொடியைச் சூழ்ந்து, இளங் காளைகள் எண்ணற்றோர் பிரசாரஞ் செய்தனர். ஸ்வாதந்தர்ய உணர்வு சீன இரத்தத்தில் தீவிர கதி கொண்டு, விடுதலை வெறிகொள்ளச் செய்தது. டாக்டர் சேனன் மலேயா, அமெரிக்கா முதலிய நாடுகளில் ஸ்வதந்தர வேலைக்காகச் சீனர் மத்தியில் நிதி திரட்டியும், ஆள் சேர்த்தும் டன்-மன்-ஹூவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தான். உணர்ச்சி யூட்டக்கூடிய துண்டுப் பிரசுரங்களும் சீனாவுக்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருந்தன.

V

இக்காலத்திலேதான் சன-யாதன், தனக்கோர் வாழ்க்கைத் துணையாகவும், தனது தேச காரியத்திற்கொரு கையாளாகவும் ஸூங் சிங்-லிங் என்கிற மாது கோமளத்தை மணஞ்செய்துகொண்டதாகும். அந்த அம்மாளின் பிரபாவம் அதி விசேஷமானது. இற்றையச் சீனர்கள் எவ்வாறு சன-சேனனைத் தங்களது வீர தெய்வமாக வணங்குகிறார்களோ அவ்வாறே ஸ்ரீமதி சன-சேனனையும் வீர்ய தேவியாகப் பூஜிக்கின்றனர். ஸூங் சிங்-லிங் நல்ல

அறிவாளி; உயர்தரமான படிப்பாளி; ஆங்கிலக் கல்வியிலும் மேதாவி. அமெரிக்காவில் ஜார்ஜியாவிலுள்ள மேக்கான் கலாசாலையில் நாலு வருடம் படித்திருக்கின்றாள். அதனால் உலக ஸ்வதந்தரத்திற்கே பிதுர் ஸ்தானம் வகிக்கின்ற அமெரிக்கர்களின் விடுதலை உணர்வு சிங்-லிங்கின் ஹிருதயத்தில் கேந்திரம் பெற்றிருந்தது. அவளது சக்தி யாம்ஸமான ஆதர்ஸமும், டாக்டர் சன யாதனின் தேசா வேசமும் காதலால் ஒன்றின. இனிமேல் சீனாவுக்கு சுயராஜ்யம் வருகிற வழியை, யாரால் அடைக்க முடியும்?

வீர விளக்கு ஸூங்-சிங் சீனத்துப் பெண்களின் முன்னேற்றத்திலும், சீன தேசத்தின் விடுதலையிலும் எவ்வளவு தீக்ஷண்யத்தோடும் வேலை செய்தாள் என்பதை வர்ணிக்க என்னிடம் பாஷையில்லை. மஹா வீரன் லெனினுக்கு கிரப்ஸ்கயா வாழ்க்கைத் துணையாய் வாய்த்தது போற் சன-சேனனுக்கு வாய்த்த சிங்-லிங்கின் தேசோத்காரத்தை அவளது வார்த்தைகளிலேயே வாசிப்போம்:

"நமது மூதாட்டிகள், அமெரிக்க ஸ்திரீகளினின்றும் 500 வருஷங்களுக்குப் பிற்பட்டவர்களாக இருந்தார்கள். நாகரீகத்திலும், கலைப் பயிற்சியிலும், கைத்தொழிலிலும் ரொம்பப் பழமை! சர்ஞடகந்து வாழ்க்கை! ஆனால் இப்பொழுதோ எங்கள் புத்திரிகள்-வருங்காலத்துப் பயிர்கள்-அமெரிக்கர்களைவிட 50 வருஷங்களுக்கு முந்தியிருக்கின்றனர். நாங்கள் இன்று பயிற்றுவித்து வரும் மாதர் இயக்கத் தலைவிகள், எண்ணத்திலேதானும் அடிமைகளில்லை. சுத்த ஸ்வதந்திர சக்திகளாய், ஆண்களோடு சரி நிகர் சமானமாய், விடுதலைப் போரில் ஜீவ வேகத்தோடு வேலை செய்கிறவர்களாய் விளங்குகிறார்கள். டாக்டர் சன யாத-சேனனின் வாழ்க்கை லட்சியமும் இதுதான். பெண்கள் விடுதலையும், தேச விடுதலையும், சன சேனனுக்கு ஏற்றத் தாழ்வில்லாத ஏக உத்தேஸ்யம். யாத-சேனன் வெறும் ராஜீயப் புரட்சிக்காரன் மாத்திரமல்ல, சமத்துவ, சமுதாயச் சீர்திருத்தக்காரனுமாவான். சன யாதனுடனே நான் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் ஜாதீய விடுதலைக்காகவும், பெண்கள் விடுதலைக்காகவும் அவன் செய்த போராட்டங்களை நேரிலே கண்டிருக்கிறேன். சாதாரணச் சந்தர்ப்பங்களிலும், மஹாநாட்டு நடவடிக்கைகளிலும், மாதர்கள் சன-சேனனுடன் சரியாசனத் தமர்ந்து விவாதித்த வழக்கம் இப்பொழுது சீனமெங்கும் பழக்கத்திற்கு வந்துவிட்டது. புரட்சித் தலைவர்கள் மத்தியிலாயினும், கோ-மின்-டாங் சபையிலாயினும், பெண்கள் பாகுபாடு படுத்தப்படுகிறதில்லை. ஆணுக்குள்ள சர்வ உரிமையும், சர்வ அதிகாரமும் பெண்களுக்கும் உண்டு.

"இருபது வருஷத்துச் சீனச் சரித்திரத்தை இப்பொழுது எனது அகக் கண்ணாலே காணுகிறபோது, எல்லாம் நேற்று நடந்ததுபோலிருக்கிறது. நேற்றுத்தான் சீனத் தாய் தனது அடிமை நிலையை யுணர்ந்தாள்; நேற்றுத்தான் சீனர்கள் தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால் ஆஹா! அந்த ஒரே யொருநாள் முடிவடைவதன் முன்னே எவ்வளவு மஹத்தான மாறுதல்கள் நேர்ந்திருக்கின்றன? முழுதுந் தற்குறிகளால் நிரப்பப்பட்டிருந்த சீனம், இன்றைக்கு எத்தனை அறிவாளிகளை அடைந்திருக்கின்றது? இப்பொழு திருக்கின்ற தாய்மார்கள் தங்களது குமாரத்திகளை வேறெந்தவோர் உலகத்தின் விநோதவாசிகளென்றே கருதுகிறார்கள். ஆனால் அக் கிழவிகளின் ஹிருதய அறைகளிலே யுவதிகளாகிற எங்களைப்பற்றி ஒரு மங்கிய பொறுமையும், ஒரு அச்சமான அங்கீகாரமும் இருப்பதாக நாங்கள் அறிகிறோம்.

"என்றாலும் அமெரிக்க மாதர்கள் இற்றைய சீன ஸ்திரீ சக்தியை இவ்வளவென்று கணிக்கின்றார்களா? நாலு வருஷங்கள் நான் அமெரிக்காவிற் கல்வி கற்றபோது, பல பெண்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் அரசியல், சமுதாய ஆற்றல்களை அறிந்திருக்கின்றேன். ஓட்டுரிமைக்காக அவர்கள் புரிந்த துணிகரமான போராட்டத்தையும், சட்ட பூர்வமான சமத்துவம் பெற நீண்ட நாட் கிளர்ச்சி செய்ததையும் நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன். அவர்களது விடாப்பிடியான தீர்மானமும், கடுமையான வேலைப்பாடும் என்னில் நன்றாய் அழுத்தமாகப் பதிவுற்றிருந்தது. ஆனால் அமெரிக்கப் பெண்களைப் பிணித்திருந்த அடிமைச் சங்கிலிக்குச் சீனப் பெண்களைப் பிணித்திருக்குஞ் சங்கிலியின் பலத்திற் பாதிதானும் இல்லை. என்றாலும் அவர்கள் செய்த போர் பிரமாதமானது. அதைக் கவனித்த நான் ஒரு நெடுமூச்சு விட்டு, 'எனது சீனச் சகோதரிகள் இத்தகைய விடுதலையைப் பெற இன்னும் எத்தனையோ தலைமுறைகள் கடாவேணும்'' என்று வருந்தினேன். சீனச் சகோதரிகளின் சுதந்திரம் வானத்து வஸ்து—ஆகாயக் கோட்டை யென்றும் முடிவுகட்டினேன்.

"நான் நினைத்தது தவறு. என் சகோதரிகளின் அடிமை விலங்கு அவ்வளவு பலத்ததாயினுஞ் சுக்குநூறாய்த் தகர்த்தெறியப் பட்டுவிட்டது—எதிர்பாராத அவ்வளவு சீக்கிரத்திலே புரட்சி வேள்வியில் ஆகுதி செய்யப்பட்டுவிட்டது. பண்டைப் பாழடைந்த யுகம் இப்பொழுதில்லை. புதியதோர் நவ சகாப்தத்திலே நாங்கள் நின்றிருக்கின்றோம். இந்த மஹா வரப்பிரசாதத்தை எங்களுக்கு யார் வழங்கினார்? கோ-மின்-டாங் சபை கொடுத்தது—அச் சபையைச் சிருஷ்டித்த சன யாத-சேனன் கொடுத்தான்! இப்பொழுது

பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளில்லை; சமத்துவமான துணைவர்கள்.

"கோ-மின்-டாங் சபை கொடுத்த இன்னொரு அமர பதத்தையும் நாம் ஆராதிக்கவேண்டும். மனுஷ்ய வித்தியாசத்தையுங்கூடக் கோ-மின்-டாங் கடிகிறது. பணக்காரன், ஏழை, படிப்பாளி, தற்குறி, முதலாளி, தொழிலாளி யென்கிற பாகுபாடும் இங்கில்லை. நிலத்தாளிகள் செய்கிற அக்கிரமங்களும், பணத்தாளிகள் பண்ணுகிற பாப கிருத்தியங்களும், சன-சேனன் கட்சியாருக்கு அதி அருவருப்பானவை. இச் சீர்திருத்தங்க ளெல்லாஞ் சீனாவுக்குச் சமீபத்தில் இல்லை யென்று நாங்கள் ஆதியில் தப்பாக எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால் இந்த இருபதாவது நூற்றாண்டில் இவைகளை யடைவதற்காக நாம் ஆமைபோல் ஊர்ந்து செல்லவேண்டாம்; முன்னைப்போற் சிரமப்படவும் வேண்டாம் என்று தோன்றுகின்றது. கோ-மின்.டாங் கட்சியினரால் வரையறுக்கப்பட்ட தேசீய அரசியலில், ஆண் பெண் இரு சாராருக்குஞ் சமத்துவமான உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிய சீனத்தில் ஓட்டுரிமைக்காகவும், பெண்கள் பாதுகாப்பு, பெண் கல்வி, சமமான விவாகச் சட்டம் இவைகளுக்காகவும் பெண்கள் சண்டையிட வேலையில்லை. விவாகமும், விவாக ரத்தும் இரு பாலருக்கும் பொதுவாகவே யிருக்கிறது. முடியரசை யொழித்துக் குடியரசை ஸ்தாபிப்பதிலும், அந்நியர் ஆதிக்கத்தை அறவே அழிப்பதிலும், சீனப் புரட்சிக்காரர்கள் எவ்வளவு ஜீவ வேகத்தோடு வேலை செய்தார்களோ அவ்வளவு வேகத்தோடும் பெண்களுக்கு, நிலமக ளுரிமை (Citizenship) வழங்கவும், சொத்துரிமை கொடுக்கவும் பாடுபட்டார்கள். இவைகளாற் சீனப் புரட்சியானது வெறும் ராஜீயப் புரட்சிமாத்திரமல்ல, சமத்துவச் சீர்திருத்தப் புரட்சியுமாகிற தென்பது விளங்குகிறது."

இவ் வார்த்தைகளிலிருந்து ஸூங்-சிங் சாமான்யமானவளல்ல; மஹா பயங்கரமான புரட்சிக்காரி யென்பதை யறியமுடியும். அவளும், சன-சேனனும், சேர்ந்தபோது, சீனப் புரட்சிக்காரர்கள் இரட்டைப் பலம் பெற்றார்கள். சன யாதன் தம்பதிகள் ஊரூராய், தேச தேசாந்திரமாய் அலைந்து, புரட்சித் தீயை மூட்டிக்கொண்டு திரிந்தார்கள். சீனர்கள் எங்கெங் கிருந்தார்களோ அங்கெல்லாஞ் சென்று, தாய்நாட்டின் தாரித்ரிய நிலைமையையும், பராதீன ஸ்திதியையும், சாங்கோபாங்கமாகச் சொல்லி, சுதந்திரப் போருக்கு அவர்களைத் தூண்டினார்கள். வெளி நாடுகளிலே சீன தேசத்தின் புரட்சியை வளர்த்து, வாலிபமாக்கிவந்த சன யாதர்களின் சமய சாதுர்யச் செயல்கள் இற்றையச் சீனத்தில் வீரக் கதைகளாகப் பேசப்படுகின்றன. ஒற்றர் கண்களில் ஒளிந்துகொண்டும், சகோ

தரச் சீனர்களுக்குத் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டும் படை திரட்டுவது எவ்வளவு கஷ்டம்? பணஞ் சேர்ப்பதும் எத்தனை சிரமம்?

அயல்நாடுகளிலிருந்த சீனர்கள் சன-சேனர்களுக்குச் சகல சகாயங்களுஞ் செய்தார்கள். பணக்காரர்களும் பணம் உதவினர்; ஏழைகளும் பணம் உதவினர். ஒரு சின்ன திருஷ்டாந்தம்: அமெரிக்காவிலுள்ள பிலாடெல்பியாவில் நடந்தது. ஒரு நாள் ஒரு சீனக் கோயிலில் சீனச் சகோதரர்களுக்குச் சன யாத-சேனன் பிரசங்கஞ் செய்கிறான். பண உதவி வேண்டப்பட்டது. ஒவ்வொருவரும் அவரவர்களால் இயன்ற அளவு ஏதேதோ கொடுக்கின்றார்கள். அவர்கள் மத்தியிலே ஒரு சீனன் துணி மூட்டை யொன்றைத் தூக்கிக்கொண்டுபோய் அவசர அவசரமாக யாத-சேனனிடங் கொடுத்துவிட்டு மறைந்துபோனான். இவ்வளவு பெரிய முடிப்பு யாதாயிருக்கலாம் என்கிற வியப்பில் யாதன் அதை அவிழ்க்கின்றான். ஹா! பணம்! ஏராளமான பணம் பளபள வென்று மின்னிக்கொண்டிருந்தன. வலது கை செய்த தருமத்தை இடது கை யறியாமற் செய்த அந்த மகா தியாகி யாரென்று பின்னால் விசாரித்ததில் அவன் ஒரு வண்ணான் என்று தெரிந்தது. சீன தேசத்தின் விடுதலைக்காக அவன் கொடுத்த அவ்வளவு பணங்களும் அவனது 20 வருட உழைப்பின் பயன். தன்னிடமிருந்த எல்லாவற்றையுந் தேசோத்தாரமாகத் தந்துவிட்ட அவ் வண்ணானின் தர்மம் மகா புனிதமானது. பரிபூரணத்திலிருந்து தர்மஞ் செய்வதைவிட வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு வைத்திருந்ததை யெல்லாங் கொடுத்துவிடுவது மஹா தர்மமல்லவா!

இவ்வாறு வெளி நாடுகளிற் சன-சேனன் செய்த பிரசாரத்தின் எதிரொலியானது சீன தேசத்திலே ஸ்பஷ்டமாய்ப் பிரதிபலித்துப் பலப்பல இரகசியப் புரட்சி சபைகள் ஸ்தாபிதம் பெற ஹேதுவாயிற்று. மலைக் குகைகளிலும், மாளிகை மத்தியிலும் மர்மமாகக் கூடிக் கூடிப் பேசினார்கள். அரசியற் கொலைகளும், அரசியற் கொள்ளைகளும் ஆங்காங்கு நடைபெற்றன. அநாமதேயப் பிரசுரங்களும் ஏராளமாகச் சீனர்களிடை பரப்பப்பட்டன: சீனத்துப் பொது ஜனங்கள், மஞ்சு மன்னனைத் தொலைப்பதிலும், பிரஜாதிபத்தியத்தை ஸ்தாபிப்பதிலும் ஆர்வங் கொண்டிருந்தனர். சாமக் கிரிகைகள் யாவுந் தயாரிலிருந்தன. நெருப்பு மூட்டப்பட வேண்டியதுதான். காட்டுத் தீப்போன்று புரட்சி கங்கு கரையில்லாமற் பரவிவிடும். எத்தனை சீனர்கள் செத்திருப்பார்கள்! எவ்வளவு சீன இரத்தஞ் சிந்தப்பட்டிருக்கும்!

சமிக்கைக்காகக் காத்துக் கொண்டிருந்த புரட்சிக்காரர்களுக்குச் சன யாத-சேனன் கைகாட்டத் தயாரில்லை. கட்டளை தரவேண்டுமென்று எத்தனையோ பேர் வற்புறுத்திக் கேட்டார்கள்; உத்தரவிட மறுத்துவிட்டான். “பரிபக்குவ மடையாத எந்தப் புரட்சியும் பயனளிக்கா” தென்பது சன-சேனனின் அபிப்பிராயம். “கொல்லுவதும், கொல்லப்படுவது மாகிற நரஹத்தி யல்ல புரட்சி. பழையன கழித்துப் புதியன புகுத்துவதே அந்த மஹா யாகத்தின் தத்துவார்த்தம். இப்பொழுது நாம் நமது நாச வேலையை யாரம்பித்தால், அதன் பின் செய்யவேண்டிய ஆக்க வேலைக்கு நாம் மிஞ்சியிருக்கப் போகிறதில்லை. பொறுத்திருங்கள் காலம் வரும். அப்பொழுது அழித்தலின்றியே ஆக்கல் நடைபெறக் காணுவீர்கள்” என்று கையமர்த்தினான். சன யாதனின் அகண்டிதமான ஹிருதயத்திலே ஏதோ வோர் தீக்ஷண்யமான திட்டமிருப்பதாக மாத்திரம் புரட்சிக்காரர்கள் உணர்ந்தார்கள். சன யாதனிடம் அவர்களுக்குப் பக்தியும் விஸ்வாசமும் பலப்பட்டது.

தேச கேசரி சன யாத-சேனனைத் தெரியாத சீனன், சீனத்திலாயினும், வெளி நாடுகளி லாயினும் எவனுமே யில்லை; அவனது மகான்மிய மறியாத சீனனுங் கிடையாது. சிறு பிள்ளைகளுக்குஞ் சன சேனனைத் தெரியும்; பெரிய ஆளுக்குந் தெரியும். சைனிகனும் அறிவான்; சாதாரண உழவனும் அறிவான். சர்வ ஜனாபிமானியாகிவிட்ட சன யாதன், தனது பார்வையை யிப்பொழுது பாசறையிலே புகுத்தினான். மஞ்சுவுக்குப் படைத் துணையாயிருக்கிற சைனிகர்களை யவன் கூர்ந்து நோக்கினான். அவர்களிலே சேனனுக்கு நம்பிக்கை பிறந்தது. தனது தெய்வீகச் சக்தியனைத்தையுஞ் சிப்பாய்களிடையே புகுத்தி, அவர்களையுந் தன் வசமாக்கிக் கொண்டான். அதற்காக அவன் செய்த பிரசாரங் கொஞ்சமல்ல. சைனிகனாயிருக்கிற சீனனும், சாதாரணச் சீனனும், புரட்சிக்காரச் சீனனும் யாவருஞ் சகோதரச் சீனர்கள் என்பதைச் சிப்பாய்களுக்கு நன்றாய் அறிவுறுத்திவிட்டான். இனிமேல் மஞ்சுவின் சேனை, மஞ்சுவைக் காக்காது. சன-சேனன் அச் சைன்யத்திற்கு மானஸத் தலைவனாகிவிட்டான். அவனாற் செய்யப்படுகிற எந்தக் கலகத்திற்கும் எந்தப் புரட்சிக்கும் விரோதமாகச் சீனத்துச் சிப்பாய்கள் இனிமேல் ஆயுத மெடுக்கவே மாட்டார்கள்.

சரி. சீனனுக்குச் சீனன் இனிச் சத்துரு இல்லை யென்றாகிவிட்டது. மஞ்சுவுக்காக எந்த வொரு சீனச் சிப்பாயியுந் துப்பாக்கி தூக்கமாட்டான். ஆனால் அவனது (மஞ்சுவின்) உதவி

யாற் சீனாவிற் சாரியடிக்கின்ற வல்லரசுகளின் சைன்யங்கள் உதவி செய்யாமல் நிற்பார்களா? அந்த வழியையும் அடைத்துவிட யாது உபாயம் என்றெண்ணினான் சேனன். இக் காலத்திலே ஆசியாக் கண்டத்தின் அறிவாளிகளிடையே ஒரு அத்யாத்ம உணர்வு பரவியிருந்தது. அதற்கும் ஆதிபீஜம் சன யாதனைகத்தானிருந்தான். ஐரோப்பாக் கண்டத்தின் வல்லரசு நாடுகள், ஆசியாவிலெங்கும் அமோகமாக நாட்டு வேட்டையாடுகின்றன. அதற்கோர் அழுத்தமான முற்றுப் புள்ளி போடவேண்டும் என்பதுதான் அந்த உணர்வு. இம் மங்கலான பிரச்னையைத் தங்கமான தருணமாகக் கொண்டு சீனப் புரட்சியில் உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்று சன-சேனன் சிந்தித்தான்.

சீனாவுக்குச் சமீபத்திலே யிருக்கின்ற தேசங்கள் மூன்று. அவைகளில் ஜப்பான், கீழ்நாட்டு பிரிட்டனாக விளங்குகிறது. இராணுவத் திறமையிலும், யுத்த கௌசலத்திலும், பொருளாதாரப் பெருமையிலும் கைத்தொழில் வளமையிலுங் கீழ்நாடுகளிலே ஜப்பானுக்கு நிகராக எந்தத் தேசமும் இல்லை. அடுத்தது ருஷியா. அது சமீபத்திலேதான் ஜப்பானால் அடியுண்டு கிடக்கின்றது. மூன்றாவது இந்தியா. இது பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் இருக்கிறது. இம் மூன்று நாடுகளுமே சீனப் புரட்சிக்கு உடந்தையாயிருக்குமானால் இதர வல்லரசர்கள் மஞ்சூ மன்னனுக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்பதாக யாத-சேனன் எண்ணினான். ருஷியாவில் ஜார் சக்கிரவர்த்திக்கு விரோதமான புரட்சிகள் நடந்துகொண்டிருந்தன. உள் நாட்டுக் குழப்பங்களும், அரசியற் கொலைகளும் அங்கு ரொம்ப ரொம்ப மலிவு. புரட்சியாகிற ஒரே கப்பலிலே ஒரே கொந்தளிப்புள்ள கடலிலே யாத்திரை செய்கிற யாத்ரீகர்கள் ஒருவருக்கொருவர் அனுதாபத்தாலும், ஆதர்ஸத்தாலும் உதவிக்கொள்ளுவது சகஜமல்லவா? அந்த நியதிப்படி, மஹாத்மா லெனின் கீழ் புரட்சிக்காரர்கள், மஹா வீரன் சன யாத-சேனன் கீழ் புரட்சிக்காரர்களுக்குச் சர்வ சகாயங்களுஞ் செய்துவந்தார்கள்.

இந்தியாவிலிருந்துகூடச் சன யாதன் அனுதாபம் பெறலானான். அப்பொழுது பாரத வர்ஷத்திலே பரமாத்மா திலகரின் ஆஞ்ஞா சக்கரஞ் சுழன்றுகொண்டிருந்த காலம். மஹாராஷ்டிரத்திலே அபினவ பாரத சபையும், வங்காளத்திலே அரவிந்த பாபுவும் அட்டஹாஸஞ் செய்துகொண்டிருந்த தருணம். மணிகதோலாவிலே வெடிகுண்டுகள் தயாராகிக்கொண்டிருந்தன. இந்தியா விடுதியிலிருந்தும் (இங்கிலாந்தின்) வெடிக்குண்டு செய்கிற விதம்(Bom Manual) அடங்கிய புத்தகங்களும், புரட்சிப் பிரசுரங்களும் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்தியாவுக்குள் இறங்கிக்கொண்டிருந்

தன. இப்பொழுதிருக்கின்ற இந்த நவீன யுத்தமாகிற அஹிம்சைப் போர் அக் காலத்தில் இல்லை. இரத்தப் புரட்சியாலன்றி அடிமை நாடுகளுக்கு விமோசனமில்லையென்பது அப்பொழுதைய தேசாபிமானிகளின் கருத்து. இந்த எண்ணத்தினால் இந்தியர்கள், சீனர்களுக்கு வீழ்வார்க்கு வீழ்வார் துணை செய்ததுபோலத் துணை செய்தார்கள்.

மூன்றாவது ஜப்பான். அதன் பிரபாவத்தைச் சொல்லவேண்டாம். மேல்நாட்டு வல்லரசை ஜெயித்த பெருமை யதற்குண்டு. மேலும் ஜப்பானியரின் இரணாங்க சூரத்துவத்தைக் கண்டு, ஐரோப்பிய அரசர்களுக்குங் கொஞ்சம பயம் இருக்கவே யிருந்தது. தனக்குச் சமீபமாக வல்லரசர்கள் இருக்கிற விஷயத்தில் ஜப்பானுக்குப் பொறாமையுமுண்டு. அத்துடன் சீனக் கிளர்ச்சியில் ஜப்பானியர் அனுதாபிகளாகவுமிருந்தனர். இவ்வளவு ஹேதுக்களோடு, தனது அருள் வல்லபத்தையுஞ் சேர்த்து உபயோகித்து, ஜப்பான் அரசியல் வாதிகளின் நட்பைப் பெற்றுக்கொண்டான் சன-சேனன். இதனால் இதர வல்லரசுகள் மஞ்சூவுக்கு அவனது ஆபத்துக் காலத்தில் உதவுவார்கள் என்கிற சந்தேகமுந் தீர்ந்துவிட்டது. இனிமேல் புரட்சியை யாரம்பிக்க சன யாத-சேனன் ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்கவில்லை.

1911-ம் வருஷம் டிசம்பர் மாதங் கடைசி வாரத்திலே, சன-சேனன் தனது புரட்சிச் சைன்யத்திற்குச் சமிக்ஞை தந்தான். தலைநகரத்தை நோக்கியும், தலைநகரத்தின் தெருக்களிலுஞ் சட்ட விரோதிகள் தங்குதடையில்லாமல் நுழைந்துகொண்டிருக்கின்றனர். அரசனுக்குச் சமாச்சாரமெட்டியதும் அவன் தனது சைனியத்தை வெளிப் புரட்சிக்காரர்களை அடக்கும்படி கட்டளையிட்டான். ஒரு சிப்பாயிதானும் அந்த உத்திரவை லட்சியஞ் செய்யவில்லை. இனிமேல் என்ன செய்கிறது? அரச பதவி போனாலும் உயிர் மிஞ்சினாற் போதுமென்று மஞ்சூ மன்னன் ஓட்டம்பிடிக்கலானான். இனிமேல் சீனாவுக்கு இராஜனில்லை; பிரஜா பிரபுத்துவத்திலே சீன சர்க்கார் செல்லுபடியாகும்.

சன யாத-சேனனின் அழித்தல் வேலை முடிந்தது; ஆக்க வேலை அதி அற்புதமாயிருக்கும்! அவனது இராஜதந்திரம் இன்னதென்பதை இனிமேலேதான் படிக்கப்போகிறோம்.

பிரதாப ருத்திரன்.

ஓரங்கல் நாட்டுப் பேரரசன். (கி. பி. 1288—1326.)

திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.

மத்திய காலத்தில் தட்சிண இந்துஸ்தானத்துச் சமஸ்தானங்களுள் மிகப் பெரிய சாம்ராஜ்யமாய்க் கீர்த்தி சிறக்கத் திகழ்ந்தது ஓரங்கல். இது தெலுங்கு நாட்டிற் கிருஷ்ணா ஜில்லாவிலுள்ளது. இதன் ஆதிக்கத்தில் ஆந்திரம், ஒட்ரம், மகாராஷ்டிரம், கர்ணாடகம், திராவிடம் முதலிய தேசங்கள் அடங்கி யிருந்தன. இங்ஙனம் இவ்வோரங்கல், பேரரசாய் மகோன்னத பதவியில் தலை சிறந்து விளங்கிய காலம் கி. பி. 13-ம் நூற்றாண்டெனப. ஓரங்கல் சாம்ராஜ்ய அதிபதிகளுக்குக் "காகதீய கணபதிகள்" என்பது குடிப்பெயர். இவர்களுள் முதன்மையுடையவர்கள் மூவர். அவர்கள் கணபதி தேவன், ருத்திரம்ம தேவி, இரண்டாம் பிரதாப ருத்திரன் என்னும் பெயரினராவர். இங்கு நாம் கூறத் தொடங்குவது பிரதாப ருத்திரனது வரலாறு. இம் மன்னர் பிரான், ஆந்திர ஜாதியில் விலை மதித்தற்கரிய மாணிக்கம் போன்றவனும், திக்கெல்லாம் புகழ்கின்ற கீர்த்தி யுடையவனும், சர்வ லோகங்களும் அறியக்கூடியவனும், ஆண்மை நிறைந்தவனும், புகழுடம்பு பெற்றவனு மாவான். அதிசயமுடையதும், இனிமை பயப்பதுமான இவனது அரிய வரலாறு யாவரும் விரும்பிக் கற்பதற் குரிய தகுதி வாய்ந்தது. எவனொருவன் உலகம் போற்றும் உத்தமனாகத் திகழ்கின்றானோ அவன் வரலாற்றை யாவர் கவனத்திற்குங் கொண்டுவர வேண்டும். அது உத்தமமான வரலாறாகும்போது புகழ்ந்து பேசவேண்டும். பழமையான வரலாறுகள், பிராணனில்லாத நம்மைப் போன்றவர்களுக்குப் பிராணாதாரமானது. அவை உலர்ந்துபோன எலும்புகளுக்கு வீர ரஸத்தை யுண்டாக்கும். நமது தேசம் புத்துயிர் பெற்றுப், புனர் விருத்தியுடன் பிரகாசிக்க வேண்டுமானல், இளமையிலேயே நமது குழந்தைகட்கு முலைப்பாலுடன் தேசாபிமானச் சீலர்கள், வீரர்கள், அரசர்கள் ஆதியோருடைய அரிய வரலாறுகளைப் புகட்ட வேண்டும். ஒப்புயர்வற்ற திப்பிய மன்னர்களின் வீர வாழ்வுகளையெடுத்து மொழியாத நாவும் நாவல்ல; கேட்காத செவியும் செவியல்ல.

ஆனதுபற்றியே நாம் பிரதாப ருத்திரனது வரலாற்றை இங்கு எழுச முன் வந்தது.

பெற்றோர்களும்—பெயரும்.

ஓரங்கல் நாட்டுத் தாரணிக் கோட்டைக்கு அரசனும், அகன்ற அரசியல் வாதியும், சிறந்த வீரனும், நீதி குன்றாத நெறியுடையவனுமாய் விளங்கியவன் கோட்டைப் "பேத்தராஜுப்" பெயரினன். இவனே பிரதாப ருத்திரனது தந்தை. ஓரங்கல் அரியாசனத்தை நன்னீதியால் அலங்கரித்த யாவராலும் பெண்ணரசிகளில் இவள் மிகச் சிறந்தாள் என்று பாராட்டப்பட்ட ருத்திரம்ம தேவியின் தலைமைப் புதல்வி "உக்கம்மாள்" என்னும் பெயரினளே இவனது தாய்.

பிறப்பும்—இளமைச் செய்தியும்.

இவ் விருவர்கட்குந் தவமகனாய்க் குலம் விளங்கத் தோன்றியவன் பிரதாப ருத்திரன் II. கணபதி தேவனுக்குப் பின்னர் காகதீய வமிசத்தில் ஆண் சந்ததி பிரதாப ருத்திரனே யானதால், இவனது தோற்றம் ஓரங்கல் நாட்டு அரச குடும்பத்திற்கும், குடி மக்களுக்கும் அதிசய வரவாய் ஆனந்தமா யிருந்தது. பிரதாப ருத்திரனின் அழகிய முகமும், பரந்த நெற்றியும், நீண்டு அகன்ற கண்களும், திரண்ட கழுத்தும், எடுத்த விசாலமான மார்பும், பருத்துத் திரண்டுயர்ந்த தோள்களும், முழந்தாளளவும் நீண்ட கைகளும், பாம்பின் படம்போற் பரந்த முதுகும், சிங்கத்தின் இடைபோன்ற இடையும், இன்னும் விவரித்தற்கரிய உத்தம புருஷ லட்சணங்களும் அவனில் மின்னிப் பிரகாசித்துக்கொண் டிருந்தன.

இங்ஙனம் ஆந்திர சாம்ராஜ்யத்திற்கு, ஆணழகனாகத் தோன்றிய பிரதாப ருத்திரன், வளர்பிறைச் சந்திரனென நாளும் வளர்ந்து, ஐந்தாம் ஆண்டின் எல்லையை அடைந்தான். அதுதொடங்கி அரசிளங்குமரர் கற்கவேண்டிய தரும சாஸ்திரங்களையும், நீதி நூலையும், அரசியல் வரலாறுகளையும்; யானை யேற்றம்–குதிரைச் சவாரி–சிலம்பத்தொழில்–வில் வித்தை–வாள் வீச்சு முதலியவற்றையுங் கற்கத் தொடங்கினான்.

அரியாசனமும்—செங்கோ லேந்தலும்.

பதினாறும் ஆண்டிற்குள் மேற்கூறியவைகளுடன்,

"கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்லின் உரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும்............"

பிரதாப ருத்திரன் ஒருங்கே யடைந்து உயர்ந்தான். நாள் வளர வளரத் தோன்றலுக்கு அறிவும் அதிகரித்தே வந்தது. அதனுடன் எதனையும் ஆராயும் அறிவும், நுனித்தறியும் நுண்ணுணர்வும், அரிய சக்தியும், அரசு கைக்கொண்டு நடாத்துந் திறமையும் உண்டாயின. இஃதுணர்ந்த பாட்டியார் ருத்திரம்ம தேவி, ஓரங்கல் சாம்ராஜ்ய அதிகாரத்தைத் தனது கண்போன்ற பேரன் பிரதாப ருத்திரனிடம் ஒப்புவித்து, அவனை அரியாசனத் தேற்றித் திருமுடி சூட்டிச் செங்கோலளித்துத், தனது தந்தையார் உடைவாளையும் அவனிடமே தந்து, தான் மாதர் வசிக்கும் அந்தப்புரம் சேர்ந்தாள்.

அரச நீதியும்—ஆளுந்தன்மையும்.

திருமுடி புனையப்பெற்று, செங்கோ லேந்தி, அரியாசனத் தமர்ந்த பிரதாப ருத்திரன், அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறங்கங்களையும் அடைந்து, அஞ்சாமை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி இவைகளைப் பெற்று, ஓதல், வேட்டல், ஈதல் என்னும் பொதுத் தொழிலும்; படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல், பகைத் திறந் தெரிதல் என்னுஞ் சிறப்புத் தொழிலுந் தேர்ந்து, அவற்றில் மிக்கானாய் விளங்கி, பகைவரை வருத்தல், திறை பெறுதல், தன்னாடு தலையளித்தல் முதலியவற்றால் மண், பொன், நெல் ஆகிய பொருள் வருவாயைப் பெருக்கி, அவைகளைப் பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வோர் முதலியவர்களாற் கவரப்படாது காத்து, கடவுள், அறவோர், வறியவர் என்றின்னவர்கட்கு அறம்பொருட்டாகவும்; கரி, பரி, படை, நாடு, அரண் முதலியவற்றிற்குப் பொருள் பொருட்டாகவும்; மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா என்பவற்றிற்கு இன்பப்பொருட்டாகவும், முகமலர்ந்து, இன்மொழி புகன்று, அப் பொருளைக் கொடுத்தும், காட்சிக் கெளியனாய், கடுஞ்சொல் இல்லனாய், இடித்துரை பொறுத்து, இன்சொற் கூறுவோனாய் விளங்கிக் கல்வி யறிவாற் பெரியாரைத் துணைக் கொள்ளுதலும், இறை மாட்சியால் சிற்றினந் தவிர்தலும், உறவினர், பகைவர் என்று யார்மாட்டுஞ் சார்பின்றி நடுநிலை நிற்றலும், என்றாதிய அரசர்க்குள்ள நீதிநெறிகளையும் உணர்ந்து விளங்கினான்.

பிரதாப ருத்திரன், அரசாட்சி யென்னும் இயந்திர வுருவுக்கு மந்திரிகளை கண்களாகவும், குடிகளை கால்களாகவும், நட்பாளரை வலிமிகு புயங்களாகவும், ஒற்றுவரை செவிகளாகவும், விதி நூல்களை உணர்ச்சியாகவும், தூதுவரை வாயாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன வென்பதை அற நூல்களால் ஆய்ந் துணர்ந்தவனாதால், அவர்களை அங்கங்களாகக் கொண்டு, தமது பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், விலங்கினங்களாலும் குடிகட்குத் தீங்கு நேராமல் முன்னின்று காத்து,

“வைய மன்னுயிராகவும் மன்னுயி
ருய்யத் தாங்கு முடலன்ன மன்னவன்”

என்னும் இலக்கியத்திற்கும் உரியவனாக அரசு செய்தான். இவனது அரசாட்சியில், குடிகளுக்கு விளைந்த நன்மைகள் அளவிறந்தன. முன்னே முளைத்த காதைவிடப், பின்னே தோன்றிய கொம்பு வலிமையுடையது, என்பதுபோலத் தனது தாதையும், மூதாதைகளும், குடிகளுக்குச் செய்த நன்மைகளைவிடப் பன்மடங்கு இவன் நன்மை செய்ததனால் குடிகள் இவனைத் தங்கள் இரு கண்ணென மதித்துக் கொண்டாடினர். இதனால் இவனது புகழ், குன்றின்மேற் றீபம்போல் விளக்கமடைந்தது.

“ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயனின்றே
வேந்தமை வில்லாத நாடு” —(திருக்குறள்)

என்று தேவர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தபடி, நாடானது எல்லா நலன்களாலும் சிறப்புற்றிருப்பினும், அரசனிடத்துக் குடிகளுக் கன்பும், குடிகளிடத்து அரசன தருளும் இல்லாவிட்டால், மதியிலா வானமும், மக்களில்லா மனையும், கண்ணில்லா முகமும், கணவனில்லாக் காரிகையும், பொருளிலார் இளமையும்போல் வீணேயாகும். ஆயின், நமது பிரதாப ருத்திரன் ஆட்சியில் மேற்கூறிய குறைகளுக்குச் சிறிதும் இடமின்றி, அரசனுங், குடிகளும், உடலும், உயிரும்போல் ஒன்றுபட்டு, ஒற்றுமையுடன் இருந்தார்கள்.

இங்ஙனம் இவனது அரசாட்சியிற் குடிகள் ஒற்றுமையுடன் ஒன்றியிருந்ததனாற் பிரதாப ருத்திரனுக் குப் பகைமை யென்பதே யின்றி, யாவரும் விரும்புந் தன்மையில் நன்றாக அரசு செய்துவந்தான். இவன் தனது ஆளுகையில் தனது நாட்டைத் தெற்கில் கன்னியாகுமரிவரைப் பரவச் செய்தான். யாவரும் இவனைத் திரிலிங்க சாம்ராஜ்ய துரந்தனன் என்று புகழ்ந்து கொண்டாடினார்கள்.

பொறுமையும்—செயலும்.

தனது அரசாட்சியிற் பெரும் பாகத்தைப் பிரதாப ருத்திரன் போரில் செலவிடாமலே சாந்தமாகவும், அமைதியுடனும் அரசு செய்து வந்தான். இவனது ஆட்சியில் ஓரங்கலைப் பல பாகங்களாகப் பிரித்து, அவற்றிற்கு எல்லைகள் வகுத்து, நாடுகளாக ஏற்படுத்தி, அக் கால விருப்பத்திற்கு ஏற்றபடி அவைகளுக்குப் பெயர்கள் சூட்டி, அவைகளைப் பரிபாலித்து வருவதற்குத் தக்காரை ஆராய்ந்து அமைத்து, அவர்களுக்குச் சர்வாதிகளையுங் கொடுத்து, எங்குஞ் சமாதானமும், ஒழுங்கும், அன்பும், நீதியுந் தவழுமாறு பாதுகாத்து வந்தான். இச் சமயத்தில் தனது பகைவர்களான திரிபுராந்தகாம்பாள், தேவாதி மண்டலேஸ்வரன் என்ற அரசர்கள் மறைமுகமாகப் போர்க் குறி

களைக் காட்டியும், நாட்டில் துஷ்டர்களை யேவிச் சிறு கலாம் விளைவிக்கச் செய்தும் வந்தார்கள். மனத் தைரியமின்றி, மறைந்து செய்யும் பகைவர்களது கோழைச் செயல்களைப் பிரதாப ருத்திரன் ஒரு பொருட்படுத்தாமலும், முனிவு கொள்ளாமலும் இருந்தான். தண்டநாயகர்கள் பொறாது, அத் துஷ்டர்களையும், சூழ்ச்சியாளர்களையுங் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கு உத்திரவு கொடுக்கும்படி பிரதாப ருத்திரனைக் கோரினார்கள். அவர்களுக்குப் பிரதாப ருத்திரன், 'பகிரங்கமாக வெளிவராத பகைவர்கள்மீது குற்றஞ் சுமத்தித் தண்டிக்க முயல்வது ஆண்மையற்றதுடன் நியாய விரோதமும் ஆகும்' என்று எடுத்துக் கூறி, மேலும் யுத்த தர்மத்தின் நீதிகளைத் தெளிவாக மனதிற் பதியுமாறு உபதேசித்துச் சமாதானஞ் செய்தான். இஃதொன்றினாலே இவனது பொறுமையும், அறிவுடைச் செயலும் நன்கு விளங்கலாகும். அரசனது இனிய நீதி வசனங்களையும், முறையையுங் கண்டு, சேனைத் தலைவர்களும், பிறருந் தமது ஆண்டகையின் அரும் பெருங் குணத்திற்கு அக மிக மகிழ்ந்து கொண்டாடினார்கள்.

கவனமும்—கண்காணிப்பும்.

தனது தோள் வன்மையாலும், பெருகிய படைவலியாலும், பலம் பொருந்திய சேனாபதிகளாலும், யுத்த சாமர்த்தியத்தாலும், அகன்ற அறிவும், தேர்ந்த அநுபவமும் மிக்க அமைச்சர்களாலுந் தனது சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்திப் பகை யரசர்களுக்கு இடியேறுபோன்று விளங்கினான். எங்குந் தனது அதிகாரஞ் செல்லுமாறு அமுல் நடாத்தி, சம்ராட் என்னும் பெரும் பெயர் தாங்கிப் பிரதாப ருத்திரன் அரசு செய்துவந்தான். இவற்றால் அயலிற் சுதந்திரமாக விருந்து, சிற்றரசு செய்துவந்த தேசாதிபதிகள் தமது பலங் குன்றித் திறை செலுத்தி; சக்கரவர்த்தியின் ஆணைக் கடங்கி, மானத்தைக் காப்பாற்றி வாழவேண்டியவ ரானார்கள். பொறாமை காரணமாக வஞ்சக மேற்கொண்டு, சதிபுரியத் திரை மறைவிலிருந்து, கொடிய தந்திரங்களை ஆராய்கின்ற கொடுமைக் குணமுடையவர்களைக் கண்டுபிடிக்கவும், நெடுந் தூரத்தில் நடக்கும் வர்த்தமானங்களை அவ்வப்போது தெரிந்து வந்தறிவிப்பதற்கும், ராஜ விஸ்வாசமுள்ள தூதுவர்களை ஏற்படுத்தியும், குடி மக்களுக்குக் குறைகள் நேர்ந்தால், அவற்றிற்கு வேண்டிய பரிகாரங்களை அவ்வப்போதே கவனித்து நிவர்த்தி செய்தும், பல நன்மைகள் புரிந்தும் ஓரங்கல் சாம்ராஜ்யத்தை ஆயிரம் வகையால் அதி ஜாக்கிரதையாகக் கண்காணித்துக் காத்துவந்தான்.

அரணும்—கோட்டையும்.

"முனைமுகத்து மாற்றலர் சாய, வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்"

என்பது தேவர் திருவள்ளுவர் திருவாக்கு. ஒரு பேரரசனது நல்லிருக்கையாக விருப்பது அவனது கோயிலாகிய கோட்டை. இக் கோட்டைக்குப் பகைவரால் அழிவு வாராமற் பாதுகாப்பாக நின்றுதவுவன வலிய அரணும், வீரமிக்க படை வீரர்களுமேயாம். இவ் வகையில் நமது அரசர்பிரான் தனது முழுக் கவனத்தையுஞ் செலுத்தி, யாதோர் குறையும் நேராவண்ணம் ஏற்பாடு செய்திருந்தான். தனது மூதாதையான புரோல ராஜா, தனது ஆளுகையில் ஓரங்கலில் மிகப் பெருஞ் செலவில் மாபெருங் கல்லொன்றைக் கொண்டே ஒரு பெருங் கோட்டையை, மிகவும் வலிமையுடையதாகவும், திறமையும், சிற்பமும் நிறைந்ததாகவுங் கட்டி முடித்ததோ டமையாது அக் கோட்டைக்குப் பெருங் காப்பாக 12,546 கஜ நீளத்திற் சுற்றுமதிற் சுவற்றையும் எழுப்பி முடித்தான். இதற்கு ஏகசிலா நகரம், அதாவது ஒரு கல்லால் அமைந்த பட்டினம் என்று பெயருங் கொடுக்கப்பட்டது. இக் கோட்டை, வலிய பகைவர்கள் பெரும் பீரங்கிகளைக் கொண்டு பொழியுங் கனத்த குண்டு மழைகளையுங்கூட ஒரு பொருட்படுத்தாது, பெரும் மலைப் பூதம்போல் இறுமாந்திருக்கும் பலம் வாய்ந்தது. இதனை அநுசரித்தே மேலும் நமது பிரதாப ருத்திரனும், அக் கோட்டையின் ஈசான்ய திக்கிற் பிரதாபகிரி என்ற பெயரில் துர்க்கம் அதாவது மலைமேற் கோட்டை யொன்றையுங் கட்டுவித்தான்.

போரும்—வெற்றியும்.

பிரதாப ருத்திரன், பேரரசனாகத் திருமுடி கவிக்கப்பட்டு ஓரங்கல் அரியாசனத்தில் அமர்ந்ததற்குப் பின்னர், வலியவந் தெதிர்த்த தேவகிரி யாதவ அரசர்களுடன் செய்த போரே முதற் போர். காகதீய கணபதி அரசர்கட்கும், மஹாராஷ்ட்ர சாம்ராஜ்ய மன்னர்களாகிய தேவகிரி யாதவ அரசர்கட்கும் பன்னாளாக மண்ணாசை காரணமாகப் பகை மூண்டு, அப்பகை உள்ளில் புகைந்துகொண்டே யிருந்தது. அவர்கள் பன்முறை படை திரட்டித் தமது பகைவர்களாகிய காகதீய கணபதி அரசர்களின்மீது போர் தொடுத்தும் வெற்றி யடையாமல் வேசாரிப்பட்டார்கள். இப்போது பிரதாப ருத்திரன் பேரரசனாய் முடி புனைந்து சிம்மாதனத் தமர்ந்து செங்கோ லோச்சுவது அவர்களுக்குத் தாழாத மனோ வேதனையை அதிகரிக்கச் செய்தது. பிரதாப ருத்திரனைச் சிம்மாதனத்தி னின்றும் இறக்கி, அவனைச் சிறைப்படுத்தி ஓரங்கல் அரசைத் தாங்கள் கைக்கொள்ள வேண்டுமென்ற நோக்கமே மிகுதியாயிற்று. அந்நோக்கமே பெரிதாகப் பரிணாம மடைந்தது. அது காரணமாகவே வலுவிற் போர் தொடுக்கத் துணிந்தார்கள். துவேஷ வீரியம் மேலோங்கத் தேவகிரி அதிபதிகள்

பெரும் படை திரட்டிக் கோபாவேசங் கொதித்தெழக், கோதாவிரியின் எல்லையைக் கடந்து ஆந்திர தேசத்து ஓரங்கல் நாட்டைச் சார்ந்து தண்டிறங்கிப் போர்ப் பறை முழக்கினார்கள். திடீரெனத் தனது மதிலருகிற் போர்ப் பறையோசையும், சேனைகளின் பேரிரைச்சலுங் கேட்பதற்குக் காரண மறியாது திகைத்து, ஒற்றரைக்கொண்டு உண்மை யுணர்ந்து, பிரதாப ருத்திரன் காலாந்தகனைப்போல் கோபித்தெழுந்து, போருடை தரித்து, யுத்தக் கோலத்துடன் சேனா நாயகர்கள் புடைசூழ, பெரும் படைகள் முன்னே செல்ல, அமர்க் களம் புகுந்தான். தேவகிரி அரசர்கள் அங்ஙனம் வந்த பிரதாப ருத்திரன்மீது போர் புரியுமாறு படைகளுக்கு ஆணை தந்தார்கள். இரு சேனைகளுங் கை கலந்தன. பெரும் போர் நடந்தது. பிரதாப ருத்திரன் இளங் காளையாயும் பலம் பொருந்திய வீரனாகவும் இருந்ததனாலும், இவனது படைகள் பல பெரும் போர்களிற் சண்டை செய்து பயிற்சி பெற்றிருந்ததனாலும், அகாரணமாய்ப் போர்க் கெழுந்ததனாலும் மிகவும் முனிவு கொண்டு தேவகிரி யாதவப் படைகள்மீது எதிர்த்து அவைகளை நாலு பக்கமாகச் சிதறியோடும்படி கலக்கியடித்தோடு, பகைப் படையைப் பெருவாரியாகக் கொன்று பிண மலையாகக் குவித்தனன். இக்கடும் போருக்கு எதிர் நிற்க மாட்டாது தேவகிரி யரசர்கள் ஓடி ஒழிந்தனர். வீரர்கள் வெற்றி முழக்கி ஆரவாரித்தனர். பிரதாப ருத்திரன் வாகைமாலை சூடினான். இவ் வெற்றிக்கு நிதி மந்திரி "கௌதமீஸ்வர"ரும், தேசாபிமானம் நிறைந்த படைத் தலைவர்களும், உண்மைப் போர் புரிந்த படைகளுமே காரணமென்பது மிகையன்று.

பகைவர்களால் அசைக்க முடியாத போரணும், மிகுந்த பலத்துடன் உண்மை வீரர்களால் நிரம்பிய படைகளும், இராஜ தந்திர மிக்க அமைச்சர்கள் சேர்க்கையுமே ஓரங்கல் சாம்ராஜ்யம் பூரண சோபையுடன் விளக்குவதற் கேதுவாயின.

திக்விஜயமும்—சென்ற விடங்களும்.

ஓரங்கல் உருத்திரன், போர் புரிவதில் ஒப்பற்ற வீரனாகவும், படைக்கலப் பயிற்சியில் வல்லவனாகவும், வாட்போர் மற்போர்களில் மிக்கானாகவும், யுத்த தந்திர உபாயமுடையவனாகவுஞ் சிறந்திருந்ததினால், பகைவர்களை வெற்றி கொள்ளுவது எளிதாக விருந்தது. இவற்றால் இவனுக்குப் போன விடமெல்லாம் புகழும், சென்ற விடமெல்லாம் வெற்றியுமே சித்தித்தன. பகை யரசர்கள் இவன் பெயரைக் கேட்டால் இடியோசை கேட்ட நாகம்போல் அஞ்சிப் பதுங்குவர். இங்ஙனம் இவன் பகை யரசர்க்குப் பயங்கரனாய் விளங்கியதால், சிற்றரசர்கள் திறை செலுத்தி, ஆணைக்கடங்கி யிருந்தார்கள். இவ்வரசனது தண்ட யாத்திரையும், செய்த யுத்தமும் மிகுதியானதென்றே

அறியப்படுகிறது. வேற்றரசர்கள் தனது அதிகாரத்திற்குட்பட்ட பின்னரேயே பிரதாப ருத்திரன் திக்குவிஜயம் செய்வதற்கு எழுந்தனன். இத் திக்குவிஜயத்தில் இவன் சென்ற நாடுகள் சில பகுதியென்றே சொல்ல வேண்டும், அந் நாடுகள் அடியில் வருமாறு:—

"சாளுக்கியர்களின் முக்கிய நகரமான கலியாணபுரிக்கும், சௌராஷ்ட்ர தேசத்திற்கும், மகாராஷ்ட்ர நாட்டிற்கும் சென்று அந் நாட்டு அரசர்களால் நன்கு வரவேற்கப்பட்டு, அவர்கள் கொடுத்த காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டு, அதன் பின் கர்னாடகத்திற்குச் சென்று அங்கு வரிசை பெற்று அங்கிருந்தும் மலையாளம் புகுந்து அங்கு அரசு செய்துகொண்டிருந்த கேரள முகுந்த தேவனால் நன்கு உபசரிக்கப்பட்டுத் திறை தரப்பெற்று, அவ்விடத்தினின்றும் அகன்று தமிழ்நா டடைந்து பாண்டிப்பதி புகுந்து பல மூர்த்திகளையுஞ் சேவித்துக்கொண்டு சேது நாடு சென்று சேதுஸ்நானஞ் செய்து இராமநாதனை வணங்கி விடை பெற்று, சோழ நாடு, தொண்டை நாட்டு வழியாக ஆந்திர நாட்டு ஓரங்கல் சாம்ராஜ்யத்திற்கு மீண்டான்."

தரைச் செலவும்—கரிப் படையும்.

வேந்தர் பிரானது வீர மிக்க படைச் செலவையும், யானைப் படையின் பெருக்கையும், அவற்றின் அபூர்வக் காட்சியையும், பிரதாப ருத்திரனது சம காலத்தி லிருந்த ஆந்திரக் கவி யொருவர், தாம் உடனிருந்து கண்டவைகளைத் தாம் இயற்றிய நூலொன்றில் அழகாகவும், விஸ்தாரமாகவும் வருணித்திருக்கின்றார். அவ் வருணனை மிக நன்றாகவும், இனிமை பயப்பதாகவும், இவ் வரலாற்றுக்கு ஏற்றதாகவும் இருப்பது கொண்டு தேவைக் கேற்றவைகளை ஆந்திர மொழியிலிருந்து தமிழில் தர்ஜுமாச் செய்து இங்கு தருகின்றோம். அவை:—

"ஓரங்கல்லி லிருந்து கொண்டபல்லி, கோலகொண்டாக்களுக்குச் செல்லும் மார்க்கங்களி லெல்லாம், பிரதாப ருத்திரனது பராக்கிரம மிக்கப் பெருஞ் சேனைகள் வழி நடந்த இளைப்பால் களை தீரத் தண்டிறங்கிச் சென்றன. இந் நெடு வழியின் இரு மருங்கிலும் வரிசை வரிசையாக வளர்ந்துள்ள மரங்களிற் சில, பேரரசனாகிய பிரதாப ருத்திரனது தண்ட யாத்திரையை நேராகப் பார்த்தவை. இம் மரங்களிலுள்ள பசிய இலைக ளெல்லாம் நாவாகவும், அந் நாவுகளுக்கு மனிதனது நாவுகளைப்போற் பேசுஞ் சக்தி இறைவனால் அருளப்படுமாயின், காகதீய சாம்ராஜ்ய வைபவங்களை, வரலாற்று ஆசிரியர்களை விடவும், இரண்டாயிரம் நாவுகளை யுடைய ஆதிசேஷனிலும் மீசுரமாகவும், சுவை நிரம்பியதாகவும், மிக்கச் சமத்காரமாகவும் வருணிக்கக் கூடுமன்றோ! அல்லாமல் இம் மரங்களில்

பல, ஓரங்கல் சேனைகள் நெடும் பிரயாணத்தாற் சோர்ந்து களைப்புற்ற பொழுதும், போரில் காயப்பட்ட பொழுதும், தமது தண்ணிய நிழலைத் தந்து உபசரித்தன. பகைவர் திடுக்கிட் டஞ்சத் தக்க காகதீய அரசர்களது யுத்த பேரிகைகள், இப் பாதைகளி லெல்லாம் எதிரொலி யுண்டாகும்படி அதிர்ந்து பெரு முழக்கஞ் செய்தன. மார்பின் மீது கணீர் கணீர் என்று ஓசையுடன் அசைந்து வருகின்ற கல்யாண மணிகளின் சப்தமும், பரந்த நெற்றியினின்றும் நீண்ட துதிக்கை வரையிலுந் தாழ்ந்து அசைகின்ற தங்க முலாமிட்டு ஒளி வீசுகின்ற அழகிய முக படாமும், கை வல்லோரால் நன்கு சித்திரிக்கப்பட்டு மேனி முழுவதும் போர்க்கப்பட்ட சரிகை விதானங்களும், அழகாக அணியப்பெற்று, வரிசை வரிசையாக அசைந்து செல்லுகின்ற யானைப் படைகளின் தோற்றமானது, காகதீய சாம்ராஜ்ய லட்சுமி, ஆயிரம் விதமான அலங்கார உருவெடுத்து ஒயிலாக நடிக்கின்றாளோ வென்று காண்போர் கருதும்படியாக விளங்கின. மற்றும் காண்பதற் கினியதும், புகழ்ந்து பாராட்டுவதற்கு உரியதுமான இந்த வழிகளிற் பிரதாப ருத்திர தேவனது யானைப் படைகள் ஆயிரம் ஆயிரமாக நகர்கின்ற மலைகளைப்போல் நடந்து, அசலங்கள் அதிரும்படியும், எதிரொலி எழும்படியும் பிளிறிடும் பேரோசையினால் வீறிட்ட வண்ணம் சென்றதானது, ஆயிரம் பணா முடி யுடைய ஆதிசேடனது முதுகு நெளியும்படியாக விருந்தது."

மதமும்—அபிவிருத்தியும்.

உருத்திரனது தந்தை பெத்தராஜனும், அவனது முன்னோர்களும் ஜயின மதத்தையே தழுவி, அம் மதத்திற் பற்றுடையவர்களாய் இருந்துவந்தார்கள். என்றாலும் பிரதாப ருத்திரனும், அவனைப் பெற்ற தாயார் உக்கம்ம தேவியும், பாட்டியார் ருத்திரம்ம ராணியும், பாட்டனார் கணபதி தேவனும், சைவ மதாபிமானிகளாய் அம் மதத்தில் அளவற்ற அன்பு கொண்டிருந்தார்கள்; பிறமதங்களில் வெறுப்புடையவர்களா யிருக்கவில்லை. தாம் தழுவிய சைவ மதத்தில், தாங்கள் கண்ட உண்மையையும், உறுதியையுங் கைவிடாமல், அந் நெறியிலே நின்று, அம் மதத்தை அபிவிருத்தி செய்துவந்தார்கள். அவர்களுக்குப் பின் அரசு கைக்கொண்ட நமது பிரதாப ருத்திரனும், அம் மதத்திற் பேரன்பு கொண்டு பிரபலிக்கச் செய்துவந்தான். இவ் வுண்மை, இவன் காளத்தி முத்தீஸ்வரனுக்கும், இராமேச்சுரம் இராமநாதனுக்கும், திருவண்ணாமலை அருணாசல ஈச்சுரனுக்கும், கோகர்ணப் பெருமானுக்கும், மற்றுஞ் சிவாலயங்களுக்குஞ் செய்த அபரிமிதமான பொருட் செலவுகளே போந்த உதாரணமாகும். அம்மட்டோ! ஸ்ரீசைலம், காளேஸ்வரம், திரிபுராந்தகம் முதலிய தேவாலயங்களுக்கும், கோலனுபாக, வேமுலவாட, அநமகோண்ட முதலான மலை

மேற் கோயில்களுக்குஞ் செய்த தானங்களாலும், மதாபிமானமும், அபிவிருத்தியும் விகசிதமாகும். இவன் மேற்படி ஆலயங்களின் க்ஷேத்திர மகாத்மியம் பிரகாசிக்கவும், நித்தியநைமித்திகங்கள் சிறப்புற்றோங்கவும் எடுத்துக்கொண்ட முயற்சி அளவிறந்தன. இவன் ஆட்சிக் காலத்தில் ஜைன மதம் வெகுவாய் நிலைகுலைந்து, அருகிவிட்டதென்றே சொல்லவேண்டும். சுருங்கக் கூறுமிடத்துப் பிரதாப ருத்திரன் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட இராஜ்யங்களிலுள்ள எல்லா ஆலயங்களிலும் சைவ மதமும், அதன் அனுஷ்டானங்களுமே அநுஷ்டானத்திலிருக்குமாறு ஆணையிட்டிருந்தான். அதனால் சைவ மதம் உயர்நிலையடைந்து, செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது.

இக் காலத்தில் சைவ மடங்களின் பேராச்சாரியாராக விளங்கிய பெரியார், சிவதேவையா என்னும் பெயரினர். இவர் ருத்திரம்ம தேவியின் பிரதம மந்திரியாக இருந்தவர். பிரதாப ருத்திரன் காலத்தில் வயோதிகத்தால் அப் பதவியை விட்டு, மத வளர்ச்சியைச் செய்வதன் பொருட்டு ஞானாசிரியப் பதவியை மேற்கொண்டார். இம் முதியார் சிவ மதத்தின் ஏற்றத்தையும், தத்துவத்தையும் விளக்கும் பொருட்டு விஸ்தாரமான நூல்கள் எழுதி வெளியிட்டார்.

அழகும்—பவனியும்.

பிரதாப ருத்திரச் சக்கிரவர்த்தி அழகே வடிவு கொண்ட ஆனந்த ரூபன்; வனப் பமைந்த அங்க சுந்தரன். இவன் நானா விதமாக நன்றாய் அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையின்மீது ராஜவுடை தரித்து, உயர்ந்த கோலத்தில், பெருமித தோரணையில் வீற்று, ஓரங்கல் நகரத்துத் தெருக்களில் அழகாக பவனி வந்து பிரஜைகளுக்கு இனிய தரிசனம் தருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இவ் வழக்கம் உண்மை யென்பது கவிச் சக்கரவர்த்தி கம்பரது பாடலாலும் உறுதிப்படுகின்றது. அப்பாடல் "தமிழ் நாவலர் சரிதை"யில்:—

"அவனிமுழு துண்டு மயிரா வதத்தன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா..... ...."

என்று காணப்படுகிறது. இவ் வரசன், சிருங்கார ரஸ சுகாநுபவங்களில் மிக்க விருப்பமுடையவனாக இருந்தது கொண்டு, இவனைப் பரஸ்திரீ கமனனென்று யூகித்துச் சில புலவர்கள் இவன்மீது கவி பாடி யுள்ளார்கள். இது நம்பத் தக்கதல்ல. வித்வான்களது நிதானமற்ற தன்மைக்கு வருந்துகிறோம். மனித சுபாவத்தில் தவறுத விருப்பது சகஜம். அதனை அறிவுடையோர் மனிதனது இயல்பு என்று விடுத்து, அவனது அரும் பெருங் குணங்களைக்

கவனித்துப் பாராட்டுவர். பிரதாப ருத்திரனிடத்து நெருங்கிப் பழகி, அவனது உயரிய குண விசேஷங்களை அறிந்த நண்பர்களிற் சிலர் மேற் குறித்த செய்தி, கற்பனை, நம்பத் தகாதது என்று கூறி அவனது உத்தம நடத்தையையும், மேலான நோக்கங்களையும், தூய்மைக் குணங்களையும் பலபடப் பாராட்டி, விவரித் திருக்கின்றனர். இவைகளைக் கொண்டு ஓரங்கல் உருத்திரன் சமயச்சை விரும்பினனும், சிருங்கார விளையாட்டுகளில் ஆவலுள்ளவ னென்பதும் தெளியலாகும்.

கல்வியில் விருப்பமும்—கவிகளின் கூட்டமும்.

நமது வேந்தர் பிரான், தனது நாட்டுப் பாஷையாகிய ஆந்திர மொழியை, மேலான முறையில், நன்றாக அபிவிருத்திசெய்து அதன் வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமா யிருந்து வந்தான். இதனால் தெலுங்கு பாஷை இவன் ஆட்சியில் பெரும் பிரகாசத்தைப் பெற்றிருந்தது. தானும் அப் பாஷையில் ஒப்பற்ற புலமை யடைந்து புலவர்கட்குப் புலவனாய் விளங்கினான். அத்துடன் வட மொழியிலும் நல்ல விற்பனமடைந்து, காவிய நாடகாலங்காரங்களைச் சுவைத்தறிந்தனன். இருமொழிகளிலும் வல்லானாக இருந்ததனால், இவனது அன்பைப் பெறுவதற்கு வித்வ சிகாமணிகள் இவனது பேரவையை விரும்பி யடைந்தார்கள். "வண்டுகள், மலர்ச் சேர்க்கையை விரும்புவது இயல்பன்றோ!" இங்ஙனம் வந்த புலவர்களைப் பூபாலன் எதிர்கொண் டழைத்து, நன்கு உபசரித்து, இருக்கை நல்கி, அவர்கள் அருங்கவி கேட்டு ஆனந்தத்தி லாழ்ந்தனன். எப்பொழுதும் அவர்கள் கூட்டத்திலேயே கூடியிருந்து கவி யின்பத்தி லாழ்ந்திருப்பது சொர்க்கானுபவ சுகமுடைய தென்பது அவனது கருத்தா யிருந்தது. அக் காரணங் கொண்டே அவன் தனது சமஸ்தானத்தில் அவர்களுக்கு இடமளித்துச் சிறப்புச் செய்தான். இதைக் கண்டுதானோ காளமேகப் புலவர், கலைமகளாரை நோக்கிப் பாடிய செய்யு ளொன்றில்,

> "அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
> சரியாசனம் வைத்த தாய்"

என்று கூறினார் போலும். இவ்வகையிற் கூடிய பல் வகைக் கவிகளே பிரதாப ருத்திரனது பேரவையை அலங்கரித்தவர்களாவர். இவர்களில் முதன்மை யுடையவர்களாக விளங்கியவர்களின் பெயர்களே இப்பொழுது அறியக்கூடியதாக விருக்கிறது. அவர்கள் பெயர்களும், பிரபந்தங்களின் பெயர்களும் அடியில் வருமாறு:—

முதலாவது பாஸ்கர இராமாயணத்தை, ஆந்திர பாஷையில் இயற்றிய "மல்லிகார்ச்சுன பட்டர்." இவரே 'நிரோஷ்டிய இராமாயணத்'தைச் சமஸ்கிருதத்திற் செய்ததாக ஸ்தானிக வரலாறு

கூறுகிறது. மற்றும் இவர் அரசியல் நூல்களிற் பெரும் புலமை பெற்றிருந்ததனால், ஓரங்கல் சமஸ்தானத்தில் மிகுந்த கௌரவமடைந்து மந்திராலோசனைக் கூட்டங்களில் இடம் பெற்றிருந்தார்.

இரண்டாவது, "பிரதாப ருத்திரீயம்" என்னும் அலங்கார நூல் இயற்றியவன் "வித்யா நாதன்." இக் கவீச்சுரனே பிரதாப ருத்திரனின் ஆஸ்தான கவிகளில் தலைமை யுடையவனாக விளங்கினன். இவ்வலங்கார நூல் யாவராலும் மிகுதியாகப் பாராட்டப்பட்ட பெருமை யுடைத்து; பெரும் பிரசித்தி பெற்றது மாகும். இந் நூலின் பெரும் பகுதி, பிரதாப ருத்திரனது வம்ச வரலாற்றை ஆயிரம் விதங்களாக வருணிக்கப்பட்டதா யுள்ளது.

மூன்றாவது, வட மொழி மார்க்கண்டேய புராணத்தை ஆந்திர பாஷையில் இயற்றிய சாஹின மாரன்ன கவி.

நான்காவது கன்னிய சேனனி, ஐந்தாவது ருத்திர தேவன். இவ்வாந்திர கவி, சமஸ்கிருத கன்னட பாஷைகளிற் சில நூல்கள் இயற்றினன்.

ஆறாவது சிவ தேவையா. இப் பெரியார் சைவம் பழுத்த ஆச்சாரியர். இவர் இயற்றிய உத்தம நூலின் பெயர் "சிவதத்துவ ரஸாயனம்" இது ஆந்திர பாஷையில் இப்பொழுதும் இருக்கிறது. இவர்களை யன்றி மற்றும் பெயர் தெரியாத உத்தம கவிகள் மிகப் பலர் பிரதாப ருத்திரன் அவைக் களத்திற் கூடியிருந்தார்கள். இவர்களில் முதன்மைப் புலவர்கள் பலர், சக்கரவர்த்தியாற் சன்மானிக்கப்பட்ட பொற் சிவிகைகளின் மீது சபைக்கு எழுந்தருளுவர். இவர்களுடன் சகல கதாப்பிர வீணர்கள்; விகட கவிகள் ஆக எண்மர்களும்; வேத வேதாங்க பாரங்கதர்கள் நூற்றுவரும், வேறு இருநூறு கவிகளும் உடன்கூடி வருவர். இவர்க ளனைவர்களுந் தத்தமது தகுதிக் கேற்ப உயரிய பீடங்களில் வீற்றிருந்து தத்தமது வித்வத் திறமையைக் காட்டி அரசர் பிரானைக் களிப்பிப்பார்கள்.

இப்புலவர் பெரு மக்களால் அபூர்வமானதும், அரும் பெரும் விஷயங்க ளடங்கியதும், வியக்கத்தக்கதுமான உயரிய நூல்கள் நூற்றுக் கணக்கிலும், ஆயிரம் இலக்கங்களிலும் ஓரங்கல் சாம்ராஜ்யத்தினின்றும் வெளிவந்திருக்க வேண்டுமென நம்புவது வீணாகாது. இவைகளை நிஜாம் ராஜ்யத்து நூல் நிலயங்களிலும், பண்டித மணிகளின் வீடுகளிலும் முயற்சியுடன் ஆய்ந்து தேடினால், அந் நூல்களின் பெயரும், ஆசிரியர் அபிதானமும் வெளிப்படலாம்.

ஓரங்கல் கோட்டையும்—முகமதியர் முற்றுகையும்.

கி. பி 1306-ஆம் ஆண்டு அயோத்தியில், டில்லியில் அரியாசனத்திலிருந்து அதிகாரஞ் செலுத்திய முகம்மது டோக்ளாக் என்னும்

பெயரிய மகம்மதிய வேந்தன், இந்து தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று, ஆங்கு அரசு செய்யும் அரசர்களனைவரையும் வென்று, தன் ஆணைக் கடங்கித் திறை செலுத்தித், தன் கழற் பணியும்படியும், தான் பேரரசன் என்கிற பெருமையையும், பிரசித்தியையும் பெறக் கருதி, கடல்போற் பரந்திருக்குந் தனது சேனைகளின் பெரும் பகுதியை, அப்பொழுது தளகர்த்தனைச் சிறந்து விளங்கிய அலாவுதீன் மாலிகாபூர் என்னும் வெற்றிவீரனிடம் ஒப்புவித்து, வெற்றிபெற்று வருமாறு அனுப்பினான். அம் முகம்மதிய வீரன், முதன்முதல் உத்தர இந்துஸ்தானத்தின்மீது, தனது பெரும் படையைச் செலுத்தித், தனது தோள் வலிமையை முழுதுங் காட்டி, ஆங்குள்ள அரசர்களை வென்று, தனது அரசனுக்குத் திறை செலுத்துமாறு ஆணையிட்டுப், பின்னர் தனது திருஷ்டியைத் தட்சிண இந்துஸ்தானத்தின்மீது செலுத்தினான். அப்பொழுது ஆங்கு இரண்டு ராஜ்யங்கள் பிரசித்தி பெற்றிருந்தன. அவைகளில் ஒன்று தேவகிரி யாதவ ராஜ்யம். இது மகாராஷ்ட்ர சாம்ராஜ்யம். இரண்டாவது ஓரங்கல் ஆந்திர ராஜ்யம். இது வட இந்துஸ்தானத்திற்குச் சரிபாதி எல்லையிலிருக்குந் தட்சிண இந்துஸ்தான் சாம்ராஜ்யம். முகமதியப் பிரதாப அக்கினிக்குத் தேவகிரி ராஜ்யம் முதலாவது ஆகுதியாயிற்று. அதன் அரசன் இராமதேவனும் (இராமச்சந்திரன்) மாலிகாப்பூரின் கோபாவேசத்திற்கு உள்ளாகிச் சுவர்க்கம் புகுந்தான்; அவன் குமாரன் ஹரிபாலனும் தந்தை சென்ற வழியே சென்றான். இப் போர் நிகழ்ந்தது கி. பி. 1309-ஆம் ஆண்டில். சில மாதங்களுக் கப்பால் முகம்மதிய வீரப்பிரதாப வீரனாகிய அலாவுதீன் மாலிக்காபூர், தனது ஆதிக்கத்தின் கீழுள்ள சேனைப் பிரவாகத்தை ஓரங்கல் கோட்டையைத் தாக்கும்படி விடுத்தான். அப் பெரும் பிரவாகம் பேராரவாரத்துடன் அலை கிளம்பி மோதிப் புரண்டு, வலிய அரணமைந்த ஓரங்கல் கோட்டையை அடுத்ததேயன்றி, மதில்சுவற்றை அணுக முடியாது தவித்தது. அத்துடன் பெருநஷ்டத்தோடு தோல்வியடைந்துந் திரும்பிச் சென்றது. இந் நிகழ்ச்சி கி. பி. 1310-ஆம் ஆண்டில்.

திரும்பவும் இரண்டாம் முறை கி. பி. 1321-ஆம் ஆண்டில் அதாவது பதினோராண்டு கழித்து, முன்னிலும் பன்மடங்கு சேனைகளைச் சேர்த்துக்கொண்டு வலிய கோபாவேசனாய் மாலிக்காபூர் ஓரங்கல் கோட்டையை முற்றுகையிட்டான். இம் முறையும் அவன் எண்ணம் நிறைவேறாது பெருஞ் சேதத்துடன் தோல்வியுற்றான்.

பின்னரும் மூன்றாம் முறை கி. பி. 1323-ஆம் ஆண்டில், முன்னிலும் பதின்மடங்கு பெரும் படைகளையும், அவற்றைத் திறமையாக நடாத்தக்கூடிய படை வீரர்களையுங் கூட்டிக்கொண்டு, மாலிக்

காபூர் ஓரங்கல் கோட்டையை முற்றுகையிட்டான். இப் போர் முன் நிகழ்ந்த இரு போர்களிலும் உக்கிரமுடையதாகவே யிருந்தது. முகம்மதியச் சேனைகள், கொதித்தெழுஞ் சினத்தாற் கவரப்பட்டு, வெற்றிபெறும் நோக்கத்துடன் தங்கள் முழுப் பலத்தையுங் காட்டி முனைந்து, ஆந்திரப் படையை எதிர்த்தன. ஆந்திர வீரர்கள், போர் என்றாற் பூரிக்கும் உள்ளத்தினர். புறமுதுகு காட்டாத் தீரத்தினர்; அஞ்சா நெஞ்சினர்; விழுப்புண் படாத நாள் வீண் என்று நினைக்குஞ் சுபாவத்தினர்; தேசத்தின் நிமித்தம் உயிரைத் துரும்பென மதிக்கும் உத்தம குணத்தினர்; ராஜ விஸ்வாஸ மிக்கவர். இத்தகைய சூரர்கள், தங்களை வலுவில் எதிர்த்தவர்களை வெற்றி காணாது வாளாவிருப்பரோ?

கம்ம நாயுடுகளும், வேளாள வீரர்களும், ரெட்டி நாய்க்கர்களும், க்ஷத்திரியர்களுமாய்ச் சேர்ந்த ஓரங்கல் சாம்ராஜ்யப் படையினர் கோபத்தாற் கொதித்தெழுந்து, தம்மை எதிர்த்தும், கோட்டையை முற்றுகையிட்டும் போர்புரிகின்ற முகம்மதியப் படைகளைச் சின்னாபின்னமாகச் சிதற அடித்தும், அங்கங்களைத் துண்டஞ் செய்தும், பிண மலையாகக் குவித்தும் வெற்றி கண்டனர். முகம்மதியப் படைகள் ஓட்டமெடுத்தன போக, ஓடச் சக்தியற்ற படைகளும், யுத்த வீரர்களும் ஓரங்கல் கோட்டைக்குச் சலாம் செய்து, மன்னிப்புக் கேட்டு மறைந்தனர். தண்டநாயகனாகிய மாலிக்காபூர் மனமுடைந்து மிகவும் நாணினனெனினும், வைராக்கியமும், சினமும் மேலெழ நான்காமுறை எப்படியேனும் இக் கோட்டையைத் தகர்த்துப் பொடியாக்கிப் பிரதாப ருத்திரனைச் சிறைசெய்து, டில்லிக்குக் கொண்டு செல்லாது உயிர் வாழ்வதில்லையென்று கடுமையாகச் சபதஞ்செய்துகொண்டு தோற்றோடினான்.

பகைவர் பயங்கரனாகிய பிரதாப ருத்திரன், இப் போரில் வெற்றியடைந்து வாகை மாலை சூடினான் எனினும், அவனது வெற்றி பாரதப் போரிற் பாண்டவர்களது வெற்றியைப்போலவே யிருந்தது. பராக்கிரமசாலிகளும், அசகாய சூரர்களுமாகிய பாண்டவர்கள், துரியோதனாதியரின் பெரும் படைகளைக் கொன்று நிர்மூலத்படுத்தி, வெற்றிச் சங்கம் முழக்கினரே யல்லாமல், பந்துக்களும், மித்திரர்களும், சகோதரர்களும், குழந்தைகளும் ஒருங்கே மாண்டொழிந்தனர். இத்தகைய வெற்றியை யார் கண்டு மகிழ்வது? யார் மெச்சுவது? அதுபோலவேதான் பிரதாப ருத்திரனது வெற்றியாற் கீர்த்தியே யல்லாது இலாபமில்லை.

தோட்டி.

நண்பனே! உன்னைத் தொடுவதற்குத்தானும் அவர்கள் (ஜாதி ஹிந்துக்கள்) அருவருப்புக் கொள்ளுகிறார்களே யேன்?

சுத்தமானது, சதாசர்வ காலமும் உன்னை விட்டுப் பிரியாமல், உனது ஒவ்வொரு அடிச்சுவட்டையும் பின் பற்றிக்கொண்டு, நீ செல்லுகிற இடமெல்லாந் தொடர்ந்து திரிகையில் உன்னைச் சுத்தமில்லாதவனென்று எப்படி யழைக்கலாம்?

பூகோளத்தையும், வான வீதியையும் மனித ஜாதி வசிப்பதற்கருகதையான சுத்த, சுகந்த ஸ்தலமாக ஸ்ருஷ்டித்துக் கொண்டிருக்கும் உன்னைக், கர்ம தேவதையாகப் பூஜிக்காமல் புறக்கணிப்பதாவது?

நாங்களெல்லாந் திரும்பவும் பழமையான காட்டு மிராண்டி வாழ்விலே வீழ்ந்து விடாமல், நவீனமாகிற நாகரீக ஸ்வர்க்கத்திலே எங்களைத் திளைக்கச் செய்கிற நீயா தீண்டப்படாதவன்?

ஒரு தாயானவள் தனது பிரிய புத்திரனை மலஜலந் துடைத்து, ஈ யெறும்பு அணுகாமல், பக்ஷி பறவாமற் கோதாட்டிக் குளிப்பாட்டிப் பராமரிப்பது போல, நீயும் எங்களை நாளும் வளர்க்கின்றனை.

உபேக்ஷை யென்பது மனித ஜாதிக்கு எக் காலத்திலும் இல்லை யென்கிற சத்தியார்த்தத்தை உன்னைப் போல் வேறு யாராற் காப்பாற்ற முடியும்!

சந்திக் தெருப் பெருக்கும் உனது சாஸ்திரீகமான புண்ணிய வெள்ளப் பிரவாகத்திலே, அழுக்குக ளெல்லாம் அடித்துக் கொண்டு போகப்பட்டு உலகம் புனிதமடைகிறது; உனது நதியும் புனித நதியாகத் திகழுகிறது.

ஒரு காலத்திற் பரமசிவனானவன் பிரபஞ்சத்தைக் கொடு விஷத்தினின்றுங் காத்து ரக்ஷிப்பதற்காக அதைத் தானே உண்டு வாய் மடுத்தான். ஆனால் நீயோ தினந்தினம் அசுத்தமாகிற விஷத்தைப் பல கஷ்டங்களுக்கிடையே வலிய வரித்துக்கொண்டு உலகத்தை ரக்ஷிக்கின்றாய்.

நண்பனே வா! எனது வீரனே வா! மனிதனுக்கு மனிதன் தொண்டு செய்வதற்கான துணிச்சலை எங்களுக்குக் கொடு! காரி யுமிழ்ந்தாலும், கசக்கிப் பிழிந்தாலுங் கருமத்தைச் செய்ய மனிதனுக்கு ஆண்மையை யளி!

—கவியரசன் **ரவீந்திரநாத தாகூர்.**

“பாரதி”

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

மாலை	ஆங்கீரஸ-தை	மணி
4	1933-ஞூ ஜனவரி—பிப்ரவரிமீ	10

தொழிலாளி.

திரு. அய்யாமுத்து அவர்கள்.

தொழிலாளி என்கிற தமிழ் மொழிக்குத் தொழிலை ஆள்வோன் என்று அர்த்தமல்லவா? ஆள்வோன் அரசனன்றோ? இன்று தொழிலாளிகள் அரசர்களாகவா வாழ்கின்றனர்?

தொழில் என்பது என்ன? நாம் ஏன் தொழில் புரியவேண்டும்? எத் தொழிலுஞ் செய்யாது சோம்பியிருத்தல் தகாதா?

இயற்கை நம்மைத் தொழில் செய்யத் தூண்டுகிறது. தொழில் செய்தாலன்றி நாம் ஜீவிக்க முடியாதென்பது இயற்கையின் சட்டம். இயற்கையின் சட்டத்தை மக்கள் மீறுதற் கியலாதென அறிஞர் சொல்லுகின்றனர். எனினும் உலகத்தார் இயற்கை வழியை ஒவ்வொரு நிமிடமும் மீறியன்றோ வாழ்கின்றனர். இதனாலேதான் உலகம் நாசமாய்ப் போயிற்று; துன்பம் பெருகி, இன்பஞ் சுருங்கலாயிற்று.

குளிர்ந்த இரவொன்று. நால்வர் ஒரு காட்டில் வசிக்கலாயினர். குளிரின் கொடுமையைத் தணிக்கத் தீ வளர்க்க வேண்டும். கோடரி கொண்டு அந் நால்வரும் ஒரு காய்ந்த மரத்தை வெகு விரைவில் வெட்டித் தள்ளினர். பின்னர் நெருப்பிட்டுக் கொளுத்தினர். அதன் அனலண்டை நால்வரும் வீற்றிருந்து, வெகு உல்லாசமாகப்

பேசிக் களித்தனர். மரத்தைச் சடுதியிற் சாய்த்தனர். அது அவர்களுக்கு ஒரு தொழிலாகத் தோன்றவில்லை; ஒரு விளையாட்டாகவே எண்ணினர்; செய்தனர்; ஆனந்தங்கொண்டனர்.

நால்வருங் கூடி, ஏககாலத்தில் அவ் விறகை வெட்டாது, மூவர் சுகமே வீற்றிருந்து, ஒருவனை வெட்டச் செய்திருந்தால், அவ்வொருவனுக்கு அத் தொழில் விளையாட்டாகத் தோன்றியிருக்குமா? வியர்வை சொட்டத், தோள்கள் நோகக், கைகள் கடுகடுக்க, மூச்சுத் திணர அவன் பட்ட பாட்டை வர்ணிக்க முடியாது. அவனது கோடரி ஒவ்வொரு முறையுந் தலைக்குமேலெழுந்து, மரத்தின்மீது விழும்போது ஐயோ! ஐயோ! என்றல்லவோ சப்தம் பிறந்திருக்கும். குளிர் என்பது அவ் வொருவனைமட்டும் வாட்டவில்லையே? ஏககாலத்தில் அந் நால்வரையுமன்றோ வாட்டிற்று? அவ்வாறிருக்க மற்ற மூவர் நலனுக்காக ஒருவன் உழைத்தல் தகுதியாமோ?

பசி யென்னும் பிணி, இவ் வுலக மாந்தர் அனைவருக்கும் பொதுவேயன்றோ? பிரதி மனிதனுந் தன் தன் பசி போக்க உழைத்தே ஆக வேண்டும் என்பதை இயற்கை எதிர்பார்க்கவில்லையா? உலகின் கண் வாழும் 180 கோடி மக்களுந் தங்கள் தங்கள் தொழிலைப் பங்கிட்டுச் செய்கிறார்களா? இல்லையே! இருப்பின் உலகில் துன்பமுமில்லையே!

உலக மக்களை முப்பிரிவினராகக் கொள்ளலாம். யாதொரு தொழிலுஞ் செய்யாது பிறர் உழைப்பைக் கொண்டு சுகபோகமெய்தி வருஞ் செல்வவந்தர் முதல் வகுப்பார். இச் செல்வவந்தரிடமிருந்து கைக்கூலி பெற்றுக்கொண்டு அவர்கள் நலனுக்காகப் பிற மனிதரை உழைக்கச் செய்யும் மற்றொரு வகுப்பினர் இருக்கிறார்கள்; இவர்களை மத்திய வகுப்பாரெனச் சொல்லுவர். பிறருக்காக அல்லும் பகலும் கால் நோகக் கை நோக உழைத்தலுத்து விட்டு, அலுப்புத் தீர உணவும், உடையும், ஓய்வுமின்றிச் சாகும் ஏழைகள் மூன்றாம் வகுப்பினர்.

தொழிலிலே ஈனத் தொழில் என்பதில்லை. எல்லாத் தொழிலும் நல்ல தொழிலே. ஒரு தொழிலைப் பிற தொழிலை விட உயர்வென்றோ தாழ்வென்றோ சொல்லுதல் தகாதென வேதாந்தம் பேசுகிறார் செல்வவந்தர். ஆனால் அவர்கள் செய் தொழில் என்ன? காலையில் எழுந்தவுடன் சூடான காபியும் சிற்றுண்டியும் அவர் விடுதியிற் பிறராற் படைக்கப்படுகின்றன. அதைக் "கஷ்டப்பட்டுச்" சாப்பிடுகிறார்கள். தாம் உண்ணும் உணவிலே அறுசுவையும் சரிவரப் பொருந்தி யிருக்கிறதா வென ஆராய்ந்தறிந்து இல்லையெனிற் சமையற்காரரிடங் கோபித்துக் கொள்ளுகிறார்கள். சாப்பிட்ட பின்னர் கீழே வைத்திருக்குஞ் சொம்பை அவர்களாற் குனிந்தெடுக்கவும்

முடிகிறதில்லை; வேலையாள் எடுத்து அவர்கள் கைமீது தண்ணீர் கொட்டவேண்டும். கை துடைக்குந் "துவாலை"யையும் பிறர் எடுத்துக் கொடுக்கவேண்டும். பகலெல்லாம் அவர்கள் குற்றேவல்களைச் செய்யப் பலர் பணிவுடன் காத்து நிற்க வேண்டும். யாதொரு வேலையுஞ் செய்யாத இச் சோம்பேறிப் பணப் பேய்களை, காலை முதல் மாலைவரை நிற்க நேரமுமின்றி, உழைத்தலுத்து உண்டி உடை சுருங்கிய ஒரு கையாள், கால் பிடித்து உற்சாகப்படுத்த வேண்டும். மற்றொருவன் விசிறிகொண்டு வீச வேண்டும்! மேலும் எழுத வேண்டிய அவசியமுமில்லை; யோசித் துணருங்கள்! நீங்கள் தெரியாததன்றே!

உலகத் தேவைக்கு வேண்டிய தொழிலையாவது செய்கின்றனரா? அதுவுமில்லையே! சீமான்களும், சீமாட்டிகளுங் களிப்பெய்த எத்தனை அவசியமற்ற பொருட்கள் நிமிஷந்தோறும் இவ் வுலகிலே செய்யப்படுகின்றன. அவை ஒன்றிரண்டா? கோடிக் கணக்கிலுஞ் சரியான கணக்கெடுத்துக் கூற முடியுமா? மக்களின் முயற்சி, உலகச் செல்வம், அருமையான நேரம் எத்தனை எத்தனை வகையிற்றான் பாழாகின்றன? யோசித்துப் பாருங்கள்!

ஏழை மக்களின் தலையில் உபயோகமற்ற எத்தனை சாமான்கள் குவிக்கப்படுகின்றன. சென்னை மூர்மார்க்கட்டில் ஒரு விளையாட்டு மோட்டாருக்கு எட்டணா கொடுத்து வாங்கி, அதை நான்கு முறை சுற்றிய பின்னர் கெட்டுப்போய் விடவில்லையா? "கேட்டை"த் தாண்டி "வாராவதி" யேறியதும் அவ் விளையாட்டு மோட்டாரை "கூவம் நதி"யில் எறிவதைவிட அதனால் மற்றியாது பிரயோஜனம்? இவ்வாறு இன்னும் எத்தனை கோடி ஜாமான்களைப் பற்றிக் கூறுவது? மனிதன் தன் அரிய முயற்சியையும், காலத்தையும், உழைக்குந் திறனையும் இந்தக் 'குப்பை'களில் ஏனோ பாழாக்க வேண்டும்?

தொழிலாளிக்குத் தன் தொழிலிற் சுதந்திரமுண்டா? அவன் தனக்கெனத் தொழில் புரிந்தாலன்றோ சுதந்திரமிருக்கும்! அவன் தன்னை யமர்த்திய முதலாளியின் ஏவற்படியன்றோ தொழில் செய்து வருகிறான். ஒரு சாமான், ஒன்றுக்கு முதவாது, மக்களுக்குந் தேவை யில்லை எனக் கண்டறிந்தும், அவன் அதைச் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலல்லவா இருக்கிறான்?

"**குட்டித்தாச்சி**"க்கு ஏதாவதொரு வேலையைச் சதா கொடுத்துக்கொண் டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அது அதை வைத்திருப்பவனைக் கொன்றுவிடும் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதே மாதிரி பணக்காரர்கள், முதலாளிகள், ஜமீன்தாரர்கள் முதலானோர், தங்கள் சுகபோகங்களுக்காகப் பல கோடி பேர்க

லைக் கூலிக்காரர்களாக வைத்திருக்கின்றனர். தங்கள் தேவைக்கு வேண்டிய பொருட்கள் செய்தாகிவிட்டன. கூலிக்காரர்களுக்கு வேலையில்லை யென்று கூறி, விரட்டிவிடும்படியான நிலைமையில் இன்று உலகம் இல்லை. ஏனெனில் வேலை யில்லாதுபோனால் ஏழைகளுக்குக் கஞ்சியும் இல்லை யென்பதே அர்த்தமாகும். கஞ்சியற்ற தொழிலாளர் உடனே கொள்ளைக்கும், கொலைக்கும் ஆயத்தமாகிவிடுவர். எனவே அவர்கட்கு ஏதாவதொரு தொழில் கொடுத்தே யாகவேண்டுமல்லவா? குட்டித்தாச்சியை, ரோமங்களை எண்ணு, ஆற்று மணலைக் கணக்கிடு என ஆக்ஞை யிடுவார்களாம்! ஆற்று மணலை எண்ணிக் கணக்கிடுவதால் யாருக்கு என்ன பிரயோஜனம்? அம் மாதிரியே கூலிக்காரர்களைக் கண்டதை யெல்லாஞ் செய்யச் சொல்லி, அச் சாமான்களைச் சந்தைகளிற் குவித்துவருகிறார்கள். அப் பொருட்களைப்பற்றிப் பிரமாதமாகப் பேசியும், எழுதியும், விளம்பரஞ் செய்து, விற்றுப் பணமாக்க எண்ணிக்கையற்ற கடைக்காரர்கள், விற்பனைக்காரர்கள் என்கிற நடுத்தர மனிதர்கள் உலகில் தயாராக இருக்கின்றனர்.

பணக்காரர்களிடத்திலே அவர்கள் தேவைக்கு மிஞ்சிய பணமிருப்பதால், அதைச் செலவிட அவர்கட்கு வகை தெரியாமல் ஒரு ‘ஷாப்பு’க்குள் புகுந்தவுடன் தங்கள் கண்களிற் பகட்டாகப் பட்டதையெல்லாம் வாங்கிவிடுகின்றனர். ஏழைகள் பொருளின்மையால் நல்ல சாமான்களை வாங்கச் சக்தியின்றிக் கெட்டதுங் கிழிசலும் வாங்குகின்றனர். எனவே மக்கள் தேவையற்ற தொழிலைச் செய்து வருவதன் மூலம் மனித உழைப்பு வீணாகப் போகிறது.

மக்களுக்கு மிகவும் அத்யாவஸ்யமாக வேண்டிய பொருட்களையே செய்யவேண்டும்; அவ்விதப் பொருட்களை எல்லா மனிதர்களும் பங்கிட்டுச் செய்ய வேண்டும் என்றொரு சட்டம் ஏற்பட்டுவிட்டதாக மனதில் எண்ணிப் பாருங்கள்! ஹா! அந் நிலை எவ்வளவு இன்பந் தருவதா யிருக்கும்! எவ்வளவு தொழில் மீதியாகும்! எவ்வளவு செல்வம் மீதியாகும்! தொழில் செய்யும் நேரம் அபாரமாகக் குறைந்து விடுமல்லவா? மனிதன் நாளொன்றுக்குச் சிறிது நேரமே உழைத்தாற் போதுமல்லவா? அன்றாட உழைப்பு என்பது இன்பந் தரும் விளையாட்டுப் பந்தயங்களாக மாறிவிடாதா? யோசியுங்கள்! யோசியுங்கள்!

ஹா! அன்று உலக வாழ்வே இன்பம் நிறைந்ததாகிவிடுமே! துன்பம், துயரம், வாழ்க்கையில் வெறுப்பு எல்லாஞ் சூரியனைக் கண்ட பனிபோல் மாறி, உலக வாழ்வில் மக்கட்குப் பிரிய மேற்பட்டுவிடுமே?

ஏழைகளை உழைக்கச் செய்து, அவர்கட்குச் சரியான உடையும், உணவும், வீடு வாசலும், கல்வி நலனும், ஓய்வும் உற்சாகமும், பாதுகாப்பு வசதிகளும் அளிக்க மறுத்துவருங் கொடுமைப் பணக்கார முதலாளிகள் முடியுநாள் எந் நாளோ? ஏழைகளைச் சாறாய்ப் பிழிந்தெடுக்க உதவிபுரியும் “மத்திய வகுப்பார்” என்று சொல்லப்படுங் கங்காணிகள் அழியும் நாள் எந் நாளோ? பொய்யான கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள், ஆட்சி யமைப்புகள் எல்லாம் ஒழியும் நாள் எந் நாளோ? அந் நாளிலேதான் தொழிலாளி, உண்மையில் தொழில் உரிமை உடையோனாவான். தொழில் என்பது இன்பந் தருங் கனிகளாகவும், உலகமே அக் கனி தரும் விருக்ஷமாகவும் மாறி, மக்கள் பறவையினம்போற் கவலையின்றிக் களித்து வாழ்வர். அந் நிலையை உலகத்தே தோற்றுவிக்கப் பிறந்தவனும், பிறப்பவனுந் தொழிலாளியே! தொழிலாளி வாழ்க!

கந்தர்வ யாத்திரை.

ஆரியூர் திரு. வ. பதுமநாப பிள்ளை அவர்கள்.

ஆருயிர்கட் கெல்லாம் ஆனந்த மூட்டும் மனோகரமான மாலை வேளை. உடலையும், உள்ளத்தையும் ஒருங்கே குளிர்விக்கும் இனிய கடற்காற்று வீசிக்கொண்டிருந்தது. கண்ணுக் கெட்டிய தூரம்வரை நீல மயமாகத் தோன்றுங் கடற்காட்சி, காண்போரைப் பரவசப்படுத்துவதாக விளங்கியது. அனைத்துலகுக்கும் பிராணாகிய திருமாலின் நீல மேனியின் பேரெழிலை, உலக மாந்தர் அனைவருக்குங் காட்டி மகிழ்விக்க, வானமுங் கடலும் போட்டியிடுவதுபோல் தோன்றிற்று. அக் காட்சியைக் கூர்ந்து நோக்கி, ஆண்டவனது திருவருட் பெருக்கிற் சிந்தை செலுத்தி, இன்புற்றிருக்க வேண்டியதைத் தவிர்த்து, ‘அகிலமெல்லாங் கட்டி ஆளினுங் திருப்தியின்றிக் கடல்மீதும் ஆணை செலுத்த’ ஆசை கொண்டு அலையும் வேந்தர்களும் பலர் இருக்கின்றனரே யென்பதை யெண்ணிப் பெரிதும் இரங்கி

நின்றேன். மன்னர்களது பேராசை மண்ணோடு நில்லாமற் கடல் மீதும் பாய்வதை நினைத்துப் பெரிதும் வியந்தேன். பாழும் ஆசைப் பேய் பார்த்திபரை எவ்வாறு ஆட்டிவைத்து வருகிறது! **ஆசைப் பேய்க்கு அடிமைப்பட்டவர்களுக்கு, என்றேனும் மன அமைதி ஏற்படுவதுமுண்டோ?**

"என்னே! மண்ணுலகத்தினரின் இற்றைய நிலைமை! எங்கணுங் குழப்பம்!! எங்கணுஞ் சண்டைகள்!!! மெய்யின்பப் பொருள்களைச் சிந்தித்தும் பாராது, பொய்யின்பப் பொருள்களிற் பெருமையல் கொண்டு அலையும் பேதைமை! 'பணம் என்றால், பிணமும் வாய் திறக்குமாம்!' 'பணமில்லாதவன் நடைப் பிணமாம்!!' சிச்சீ! என்ன பழமொழிகள் இவை! 'இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடமில்லை!' **"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்—பெருமை உடையது இவ்வுலகு!"** நோட்டு நோட்டுகளாகப் பணத்தைச் செலவழித்த கைகள், காணாவுக்கும் பிறரிடஞ் சென்று, கடன் கேட்கக்கூடிய காலமும் நேரக் கூடும் என்பதைக் கண்ணாரக் கண்டிருந்தும், நிலைத்து நில்லாத பணத்திற்காக எத்தனை எத்தனை சூழ்ச்சிகள்! எத்தனை எத்தனை மோசங்கள்!! எத்தனை எத்தனை சண்டைகள்!!! எத்தனை எத்தனை கொலைகள்!!!!

"ஐயோ! என்ன உலகமடா இந்த மண்ணுலகம்! ஒழியாத ஏமாற்று! ஒழியாத வஞ்சனை! ஒழியாத கவலை! ஸாரமில்லை; ஸத்துக் கிடையாது; உள்ளூரப் பூச்சியரித்துக் குழலாயிருக்கும் வாழ்க்கை! ஒவ்வொருவனும் மற்றவன்மீது பழி கூறுகிறான். ஒவ்வொருவனுந் தன்னிஷ்டப்படி விட்டுவிட்டால், எல்லாம் நேராக நடக்குமென்ற நம்பிக்கையுடனே தானிருக்கிறான். ஆனால், 'நான் ஒருவன் சரியாக இருந்தாற் போதுமா? மற்றவர்களை நம்புவதற்கு இடமில்லையே!' என்று நினைக்கிறான். பிறரை நம்புவதற்கு இடமில்லையென்று எண்ணி ஏமாற்றுகிறான். மனித ஜாதிக்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம். இறங்காத விஷம். இதன் பெயர் பணம். மனித ஜாதியைக் கவர்ந்திருக்குந் தெய்வீகமாகிய அன்பு என்னும் வலையை அறுத்தெறியும் நீசத் தன்மை கொண்ட எலி ஒன்றிருக்கிறது. இதன் பெயர் பணம். இப் பேய்க்கு வணங்கும்படி மனிதனைத் தூண்டிவிடுவது விருப்பம். அதாவது ருசி நீங்கிய விருப்பம். (ருசி ஸஹிதமான விருப்பமுடையோர் கந்தர்வர்கள்) அறிவற்ற விருப்பம். (அறிவு சத்யலோகர் கருவி)" என்னுந் தேசீய கவீந்திரராகிய பாரதியாரின் மணிமொழிகள், இம் மண்ணுலகை மாந்தரின் ஹிருதயத்தில் ஊடுருவிப் பாயக்கூடிய காலம் என்றுதான்

வாய்க்குமோ? அறிவை மயக்கி, ஆட்கொண்டு அல்லற்படுத்தும் மாயத் தோற்றமுடைய பணப் பேயின் சூழ்ச்சிகளில், மயங்கிவிடாத மன உறுதியும், மெய்யறிவும் உடையவர்கள் எப்பொழுதுதான் பெருகுவார்களோ?"

இவ்வாறு நீலக் கடலின் காட்சியை நோக்கியவாறே சிந்தனைக் கடலில் ஆழ்ந்திருந்த என்னை, 'கடற்கரையின் மணற் படுக்கைச் சுகத்தை சிறிது அனுபவித்துப் பார்க்க வேண்டும்' என்னும் என் நெஞ்சில் எழுந்த ஆர்வம் மெல்ல மணலில் படுப்பித்தது; யானும் மெய் மறந்தேன்.

மேகத்தைப் பழிக்குங் கூந்தல்; சந்திரனைப் பழிக்கும் சுந்தர முகம்; வான வில்லைப் பழிக்கும் வட்ட நுதல்; சேல்களைப் பழிக்கும் விழி வேல்கள்; கோவைக் கனியைப் பழிக்கும் செங்கனி வாய்; முல்லை யரும்புகளைப் பழிக்கும் முத்தனைய பற்கள்; பத்தரை மாற்றுத் தங்கத்தை யொத்த பசும்பொன் மேனி. அத்தகைய கந்தர்வத் தோற்றமுடைய ஒரு சிங்கார மோகன மங்கை, என் எதிரில் தோன்றி நின்று என்னை நோக்கிப் புன்னகை புரிந்தாள். அப் புன்னகையிற் பொதிந்த பொருள்தான் என்னவோ, எனக்கு விளங்கவில்லை. அவளது இந்திர நீல விழிகளாகிற இணைக்கணைகளை என் மேல் ஏவினாள். அக் கணைகள் என் மேல் பாய்ந்தும், திருமாலுக்கே அடிமைப்பட்ட எனது ஹிருதயத்தைப் புண்படுத்துந் திறனற்று—மலை மீது எறியப்பட்ட கற்களை ஒத்தன. முல்லையரும்பன்ன பற்களும், செங்கனியை ஒத்த மலர் வாயுஞ் சிறந்து விளங்க அவள் புரிந்து நின்ற புன்னகையால், எனது மன உறுதியைச் சிறிதுங் குலைக்க முடியவில்லை. அவள் ஸர்வாங்க சுந்தரியாகவே தோன்றினாலும், திருஅரங்கச் செல்வனாரது வடிவழகைக் கண்டு ஆனந்தம் அடையும் எனது நெஞ்சம், அம் மோகினியின் வடிவழகிற் கொஞ்சமும் மயங்கவில்லை. அதைக் கண்ட அம் மங்கையின் முகத்திற் பெரு வியப்புக் குறி தோன்றியது; புன்னகையும் மறைந்தது. குயிலைப் பழிக்குங் குரலிலே, என்னை நோக்கி அவள் பின்வருமாறு பேசத் தொடங்கினாள்:—

"எத்தகைய சித்தத்தினரையும் எளிதில் மயக்கி, விரும்பியவாறெல்லாம் ஆட்டுவிக்கக்கூடிய என்னைக் கண்டும், என்னிடங் காதல் கொள்ளாத நீயும் ஒரு ஆண்மகனோ? பித்தன்தானோ? அலியேயோ? இம் மண்ணுலகத்து மாந்தரை என் மனம் போனவாறெல்லாம் ஆட்டுவிக்கக் கூடிய எனது பேராற்றல் எத்தகையது என்பதை நீ உணர்வாயோ? என்னிடம் அன்புகொண்டு இன்புறும் பாக்கியத்தை

இழந்து ஈனமுறுவதற்கு உனக்கு உண்மையிலேயே சம்மதந்தானோ? ஏ! பேதை மனிதா! இப்பொழுது நீ என்னை விரும்பாதது போற் பாவனை செய்தாலும், எனது புன்னகை உனது நெஞ்சில் வேலை செய்யாது போய்விடுமோ? அட அறிவற்றவனே! எல்லோரும் பெற ஏங்கி நிற்கும் பரம சுகம், உனக்கு மட்டும் எட்டிக் காயாகி விட்டதோ? இதோ பார்! உன் கன்னத்தில் முத்தமொன்று இடுகிறேன்! எங்கே உன் மன உறுதியைக் காத்துக்கொள் பார்ப்போம்!'' என்று கூறிக்கொண்டே என்னை அணைய நெருங்கினாள்.

அது கண்ட யான் எட்டிச் சென்று நின்று, "காமப் பித்து மிகுந்த காரிகையே! நீ என் முன் தோன்றியவுடன், நமது கண்கள் கலந்து கொண்டு விடவில்லையே! இருவர் கருத்தும் ஒருமித்துவிடவில்லையே! உனது பேரழகால் என் மனத்தைச் சிறிதும் மயக்க முடியவில்லையே! இங்ஙனம், என் நெஞ்சில் உன்மேற் சிறிதளவுங் காதல் என்பதே ஏற்படா தொழிந்துங்கூட, என்னை முத்தமிட விரும்பும் நீயும் ஒரு பெண்ணோ? கலியுக மாய சூர்ப்பணகைதானோ! சீ! சீ! உன் தந்திரம் என்னிடஞ் செல்லாது; உன் மாயமும் என்னிடம் வெல்லாது. மோகினீ! பகவதீ!! உனக்கு ஒரு நமஸ்காரம்; நீ மரியாதையாகப் போய் வா!'' என்றேன் யான்.

அதைக் கேட்டுக் கலகல வென்று சிரித்த சுந்தரி, "அட! பேதை மனிதா! நீ ஒருவன் எனது பேராற்றலை மதியாது அலட்சியப்படுத்தி விடுவதனாலேயே, எனது பெருமைக்கு எத்தகைய குறைவும் ஏற்பட்டு விடாது. நீ என்னைப் புறக்கணித்து விடுவது குறித்து யான் சிறிதும் வருத்தப்படப் போவதுமில்லை. எண்ணிறந்த மன்னர் மன்னர்களும் எனக்கு அடிமைப்பட்டு யான் ஏவியவாறெல்லாம் நடந்துகொண்டு வரும்போது, எளிய தோற்றமுடைய நீ எனக்கு எம்மாத்திரம்? பாவம்! வெவ்விய ஊழ்வினை, தானாக வந்தடைந்த என்னையும் அலட்சியப்படுத்துமாறு உனது மனத்தை மாற்றிவிட்டது போலும்! 'அதிருஷ்ட தேவியின் அநுக்கிரகம் உனக்கு இப் பிறப்பில் வாய்க்கப் போவதில்லை' என்று நான்முகன் உன் தலையில் எழுதிவிட்டிருந்தால், அக் கொடிய விதியை என்னால் மாற்ற முடியுமோ? அட! நிர்ப்பாக்கியனே! 'எனது பேராற்றலை நீ மெச்சிப் போற்ற வேண்டும்' என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை! ஆயினும், உன்மேல் எனக்கென்னவோ ஒருவித அன்பு பிறந்துவிட்டது. அவ்வன்பு எப்பயனுமின்றி ஒழிந்துவிடுவதை நான் விரும்பவில்லை. ஆதலால், மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலுஞ் சிற்சில காட்சிகளை உனக்குக் காட்ட விரும்புகிறேன். என்னுடன் வருவதில் உனக்கு ஏதேனுந் தடையுண்டோ?'' என அந்

நங்கை, குறுநகை தவழுங் குளிர் முகத்தினளாய் என்னை அன்போடு நோக்கி வினவினள்.

அவளது வேண்டுகோளுக்கு இணங்கலாமா, வேண்டாமா என்று பெரிதுஞ் சிந்தித்து நின்றேன். "கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசுபோதினும்—அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!'' என்னும் பாரதியாரின் வீர முழக்கம் எனது செவிகளில் ஒலிப்பது போன்று தோன்றியது. திருஅரங்கச் செல்வனாரது திருவடிகளுக்கு அடிமைப்பட்டுவிட்ட பின்னர்—புறத்தோற்றத்தைக் கண்டு மயங்கி விடாமல், உள்ளுண்மையைச் சிந்தித்து உணரப் போதிய உள்ள உறுதியைத் திருவரங்கேசர் எனக்கு அளித்திருக்கும் போது-திருவரங்கச் செல்வனாரது திவ்ய சேவானந்தமும், திருவாய்மொழியின் சிந்தனானந்தமுமே உண்மை ஆனந்தங்கள் என்பதை அனுபவ வாயிலாகக் கண்டுகொண்டு விட்டபோது—பகவத் பக்தி என்னும் மானஸ ஸரஸில் நீந்தி விளையாடிக்கொண்டிருப்பதையே விரும்பி நிற்கும், எனது மானஸ ராஜ ஹம்ஸத்தை, எத்தகைய பெருமாயம் வல்லவர்களாலும்—எத்தகைய காட்சிகளாலும் ஆசைப் பேயால் ஆட்டிவைக்கப்படும் மனக் குரங்காக மாற்றிவிட முடியாது என்னும் வீரத் துணிவு எனது அகத்தில் தோன்றியது. தமது மாயா லீலைக்கு இலக்காக்கி விடாது, தமது கைம்மாற்ற தனிப் பெருங் கருணைக்கே அடியேனை இலக்காக்கி உய்வித்தருள திருவரங்கேசர் திருவுள்ளம்பற்றி யாள்வர் என்னுந் திட நம்பிக்கை எனக்கு இருக்கும்போது, யான் எதன்பொருட்டு அஞ்சி நிற்க வேண்டும்?'' என நினைத்து அவளது வேண்டுகோளுக்கு உடன்படுவதாக மனத்திற்குள் முடிவு செய்துகொண்டு விட்டேன். ஆயினும், விண்ணுலகுக்குங் கூட என்னை அழைத்துச் செல்வதாகக் கூறியது உண்மைதானோ என்னும் ஐயம் என் நெஞ்சில் தோன்றியது.

அவ் ஐயத்தைப் போக்கிக்கொள்ள விரும்பிய யான், அந் நங்கையை நோக்கி, "இவ்வளவு அன்போடு என்னை அழைப்பதால், உனது வேண்டுகோளைப் புறக்கணித்துவிட என் மனந் துணியவில்லை. காமத்தை இகழ்ந்து தள்ளுபவனாயினும், யான் அன்புக்குக் கட்டுப்படாதவனன்று. எனினும், உன்மேல் எனக்கு எவ்விதமேனுங் காதலைத் தோற்றுவித்துவிட எண்ணி நீ எவ்வளவு முயன்றாலுமே, உனது முயற்சிகளுள் எதுவுஞ் சிறிதளவும் பயன்படப் போவதில்லை என்பதை இப்பொழுதே தெரிவித்து விடுகிறேன். மண்ணுலகுக்கு மட்டுமன்றி, விண்ணுலகுக்குங்கூட என்னை அழைத்துக் கொண்டு போவதாகக் கூறினாயே! ஒரு ஆகாய விமானங்கூட இல்லாமல், விண்ணுலகுக்கு எவ் வண்ணம் என்னை அழைத்துச் செல்லுவாய்?'' என வினவினேன்.

அது கேட்ட அப் பாவை, கக்கட கக்கட என்று சிரித்துவிட்டுக் கூறலானாள்:—

"பேதை மனிதா! இக் கேள்வி ஒன்றினாலேயே எனது ஆற்றல் எத்தகையது என்பதை நீ தெரிந்துகொண்டு விடவில்லை யென்பது, நன்கு விளங்கி விட்டதல்லவா? விண்ணுலகத்திற்கே யன்றி மண்ணுலகின் பற்பல இடங்களுக்குங்கூட உன்னை எவ்வாறு அழைத்துக் கொண்டு போகப்போகிறேன் என்று நினைத்துக்கொண்டு விட்டாய்? கேவலம் இரட்டை மாட்டு வண்டியிலோ—அல்லது குதிரை வண்டியிலோ—அல்லது மோட்டாரிலோ—அல்லது ஆகாய விமானத்திலோ ஏற்றிக்கொண்டு போவேன் என்று எண்ணிக்கொண்டுவிடாதே! அத்தகைய வண்டிகளிற் பிரயாணஞ் செய்து, எவ்விடத்திலேனும் ஆபத்துக்கு உட்பட்டுவிடுவோமோ, என்னவோ என்னும் அச்சம் உனக்கு வேண்டாம்! உன்மேற் கொண்டுவிட்ட அன்பின் பெருக்கினால், இதோ மனிதனாக இருக்கும் உன்னை, எனது அற்புத சக்தியினாற் கந்தர்வ சுந்தரனாக மாற்றிவிடுகிறேன் பார்!" என்று கூறித் தனது கருங் கூந்தலில் அணிந்துகொண்டிருந்த **ரோஜா** மலரை எடுத்து, என் மார்பில் எறிந்தாள்.

அடடாவோ அடடா! என்ன அற்புதம்! என்ன அற்புதம்!! எனது நூதன வடிவழகை என்னென்று எடுத்துரைப்பேன்! என் முதுகுப்புறத்தில் அழகிற் சிறந்த இரு சிறகுகள் முளைத்துக்கொண்டு விட்டதோடு, என் உருவம் முழுதுமே சிற்சில சந்தர்ப்பங்களில்—சிற்சில படங்களிற் பார்த்து மாத்திரமே மகிழ்ந்துகொண்டிருந்த சுந்தர கந்தர்வனது அற்புத உருவமாக மாறிவிட்டது! மண்ணுலகப் பெண்ணைப்போல் என் எதிரில் நின்றுகொண்டிருந்த மாதும், ஒரு கந்தர்வ சுந்தரியாக மாறிவிட்டாள். புன்னகை பூத்த முகத்தினளாய அன்னவள், என்னை நோக்கிப் 'பற' என்றாள்! உடனே இருவருந் துள்ளித் திரியும் புள்ளினத்தின் தனிப் பெரும் மகிழ்ச்சியை அனுபவிப்பவர்களாய், நீல மேகங்களுடன் போட்டிபோட்டுக் கொண்டு பறந்து செல்லலானோம்.

ஆனந்த சந்திரிகையின் அமுத கிரண ஒளியிலே, யாவும் பால் மயமாகத் திகழ்ந்துகொண்டிருந்தன. நீல வானத்திற்கு ஒப்புயர் அற்புத அழகைத் தந்த பூர்ண சந்திரன், தோற்றத்தில் மட்டுமன்றி உள்ளத்திலுங்கூடக் குளிர்ந்தவனாகவே விளங்கினான். மண்—மரம்—வயல்—ஆறு—தோட்டம்—தோப்பு—மாளிகை—குடிசை—புல் தரை—வெறும் வெளி நிலம்—மற்றும் எல்லாவற்றின்மேலுஞ் சிறிதும் பாரபட்சமின்றித் தனது வெண்ணிலவின் ஒளியைப் பரப்பி மகிழ்ந்து

சிரித்துக்கொண் டிருப்பவனைப்போன்று தோன்றினான் திங்களஞ் செல்வன். என்னே அவனது சக்தி! என்னே அவனது கருணை!! என்னே அவனது குதூகலம்!!!

சிறிது தூரஞ் சென்றபின் என்னைக் கந்தர்வனாக்கிய சுந்தரி, 'கீழே பார்!' என்றாள். அவள் கட்டளையிட்டபடியே, யானுங் கீழே கூர்ந்து நோக்கினேன், அந்தோ! நான் கண்ட பரிதாபக் காட்சியை என்னென்று கூறுவேன்? கந்தை அணிந்த இடையும், கரிய மண்ணோடு ஏந்திய கைகளும், குழிவிழுந்த கண்களும், வற்றிய தோலும் உடையவனாய், எலும்புக் கூடுபோல் தோன்றிய ஒரு பிச்சைக்காரனைக் கண்டேன். பசி மயக்கத்திலே கண்கள் பஞ்சடைந்து, நடையுந் தடுமாறிய அவன், குட்டிகளுடன் நடுத்தெருவில் படுத்துக்கொண்டிருந்த கருநிறமுடைய ஒரு நாயை, அறியாது மிதித்துவிட்டான். அவன் தன்னை அறியாமலே மிதித்துவிட்டான் என்பதை உணராத அந்தப் பாழும் நாய், தனது குட்டிகளுக்குத் தீங்கு வந்துவிட்டதோ என்று பயந்துபோய், அவனது காலை வெடுக்கென்று கடித்துவிட்டது. அக் காயத்தின் பெரு வலியைச் சகிக்க முடியாமல், இரந்து பெற்ற சொற்பச் சோற்றைத் தின்பதற்கும் முடியாமல், அவ் வெளியவன் கண்ணீர் சொரிந்து, கலங்கி நின்றான். அக் காட்சியைக் கண்டு பெரிதும் வருந்திய நான், "இன்பக் கடலில் திளைத்துக்கொண்டிருந்த எனது நெஞ்சைத் திடீரென்று ஏன் துன்பூட்ட நினைத்தாய்?" என்று சுந்தரியை வினவினேன்.

"அடடா! வேதாந்தம் பேசி, என் காதலைப் புறக்கணித்தாயே! 'கொள்' என்றால் வாயைத் திறப்பதும், கடிவாளம் என்றவுடனே வாயை மூடிக்கொண்டு விடுவதும் போன்றிருக்கிறதே உன் இயல்பு! இத்தகையதுதானா உனது வேதாந்த ஞானம்? இன்ப துன்பங்களைச் சமமாக நோக்கக்கூடிய சக்தி பெற்றுக்கொள்ளாத வரையில் உனது வாய் வேதாந்தத்தால் என்ன பயன்?" என்று என்னைப் பரிகசித்தாள் சுந்தரி.

அவளது புன்மொழிகளைக் கேட்ட யான், "பேதை மாதே! 'பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்!' என்று திருவரங்கேசரைப் போற்றி நிற்கும் எனக்கு, துன்பம் நேர்ந்தவிடத்துத் தைரியம் இழந்து வாடுவதும், இன்பம் நேர்ந்தவிடத்து இறைவனை மறந்து களிக்கூத்தாடுவதுமாகிய புன்மைத் தன்மை சிறிதும் இல்லை. "இடும்பைக்கு இடும்பை படுப்பர்; இடும்பைக்கு—இடும்பை படாஅதவர்" என்னும் அறவுரைக்கு இணங்க—எனக்கு எய்துந் துன்பத்தைப் பொருட்படுத்தாது நகையாடி நிற்கும் மன உறுதி பெற்றுள்ள யான்,

எளியவன் சொரியுங் கண்ணீரைக் கண்டு, ஜீவகாருண்யத்தினாற் பெரிதும் இரங்கி நிற்கின்றேனேயன்றி வேறன்று" என்றேன்.

அவ் வுரைகளைக் கேட்டு, உண்மை உணர்ந்துகொண்ட சுந்தரி கூறுவாள்:—

"இதோ இந்தப் பிச்சைக்காரன், பிறவி முதலே பிச்சையெடுத்துப் பிழைப்பவன் என்று நினைத்துக்கொண்டு விட்டாயோ? சில வருஷங்களுக்கு முன்னர், இதே மனிதன் மணிமுடி அணிந்து, அரியணை அமர்ந்து, தனது ஆக்ஞா சக்கரம் எங்கணும் நடக்கும்படி அரசாண்ட மன்னர் மன்னனாக விளங்கியவனே ஆவன். 'குடிகளுக்காக அரசனேயன்றி, அரசனுக்காகக் குடிகளன்று' என்னும் உண்மையைச் செல்வச் செருக்கின் மிகுதியால் மறந்துவிட்டுச் சுய நலம் ஒன்றையே குறிக்கொண்டு, கொடுங்கோல் செலுத்திய தீவினைப் பயனை, இக் கொடியோன் இப்பொழுது அனுபவிக்கின்றான். பாவம்! முன்பு அரச போகங்களை அனுபவித்தவனாதலாற், பகலில் பலர் காண வெளியிற் புறப்பட மனங் கொள்ளாது, பகலிற் பட்டினி கிடந்து, இரவில் வெளிப்பட்டு இரந்து உண்டு உழன்றுகொண்டிருக்கிறான். இனி, இப் பிறவியில் இவனுக்கு இன்பம் இல்லை. இவ்வளவு கொடுந் துன்பங்களை அனுபவித்துக்கொண் டிருந்தும்; இன்னும் உலக வாழ்க்கையில் வெறுப்பின்றிப் பிச்சையெடுத்து உண்டேனும் பிழைத்திருக்க மனங் கொண்டுள்ள இவனும் ஒரு மனிதனோ?"

பின்னர், அவ்விடத்தை விட்டு நீங்கிச் சிறிது தூரஞ் சென்றோம். 'கீழே பார்!' என்றாள் சுந்தரி. மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள ஒரு காட்டைக் கண்டேன். அரசமரம் ஒன்றின் அடியிலே, இரு விழிகளிலும் கண்ணீர் பெருகி வழிய ஒரு எளியவன் உட்கார்ந்துகொண்டிருந்தான். ஐயையோ! என்ன கொடுமை! என்ன அநியாயம்!! அம் மரத்தின் பின்புறத்தில், மறைந்து நின்றுகொண்டிருந்த கொடிய தோற்றமுடைய ஒருவன், அழுதுகொண்டிருந்த அவ் வெளியவனது தலையை வெட்டி வீழ்த்த வாளை ஓங்கினான்; மறு கணத்தில் அவனது தலையும் மண்ணில் வீழ்ந்தது. அது கண்டு மனம் பதறிய நான், சுந்தரியை நோக்கி, "கோரக் கொலையைக் காணவோ என்னைக் கூட்டிவந்தாய்?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"ஆத்திரங் கொள்ளாதே வேதாந்தியே! அமைதியாகக் கேள், சொல்லுகிறேன்" என்று சிரித்துரைத்த அச் சுந்தரி, பின்வருமாறு கூறலானாள்:—

"படை வலியில் தம்மினுங் குறைந்த சிற்றரசர்கள் பற்பலரிடஞ் சற்றுங் கருணையின்றி, "பிழைத்திருக்க விருப்பம் இருந்தால், வருடந் தோறும் பலவித கப்பங்களையுங் கொண்டுவந்து, என் காலடியில் வைத்து விழுந்து பணிந்து செல்லுங்கள்" என்று செருக்குரை கூறி, எளியவரை அடக்கி ஆண்ட அரசனே, இன்று இந்த அரசமரத்தடியிற் கொலையுண்டவன். தனது ராஜ்யத்திலே அழகிற் சிறந்த பெண்மணிகள் பலரைக் கொண்டுவந்து, தனது அரண்மனையில் திரட்டிய பெருங் காமுகன் இவன். முடிவில், வேற்றரசன் ஒருவனால் அரசையும், தான் திரட்டிய மாதர்களையும் இழந்து, உயிரின் மேலுள்ள இச்சையினாற் காட்டிலே ஒளிந்து வாழ ஓடிவந்த விடத்திலுந் தனது எதிரியால் ஏவப்பட்ட கொலைஞனாற் கொல்லப்பட்டு மடிந்தான். எவர்களால் தான் இன்பம் நுகரலாமென்று எண்ணியிருந்தானோ—எவற்றாற் சுகபோகங்களை அனுபவிக்கலாம் என்று இறுமாந்திருந்தானோ, அம் மாதர்களின் மையலும், அப் போகப் பொருள்களுமே இவன் இக் காட்டில் இவ்வாறு வெட்டுண்டு மடிய நேர்ந்ததற்குக் காரணமாயின. இவன் அணைய விரும்பிய அணங்குகளை இவனது எதிரி அடைந்தான். சிற்றரசர்களைப் பணிவித்த வீரக் கழலிட்ட இவனது கால்களை, இனி ஓநாய்களுங் கழுகுகளுங் கடித்துத் தின்னும். இனி, அடுத்த பிறவியிலேனும் இவன் செருக்கற்றவனாக இருக்க மனங் கொள்வானோ? என்னவோ?"

பின்னர் அவ்விடத்தை விட்டுப் பறந்து சென்றோம். பறக்குந் தன்மையினாலே, எனக்கு நெடுந்தூரமுஞ் சிறுதூரமாகவே தோன்றியது. அழகிற் சிறந்த மாளிகை ஒன்றைக் கண்டோம். 'கீழே இறங்கு' என்று கட்டளையிட்டாள் சுந்தரி. "பழக்கமில்லாதவர்கள் மனையில்—அதிலுஞ் செல்வச் செருக்கு மிகுந்த பணக்காரர் மாளிகையில் நாம் திடீரென்று எப்படி நுழைவது?" என்று அவளை வினவினேன். "பேதை மனிதா! எனது சாகசத்தைக் கண்டு சிறிதும் அஞ்சமாட்டேன் என்று வீரவாதம் பேசிய நீ, இம் மனைக்குள் நுழையவும் பயப்படுகிறாயே?" என்று என்னைப் பரிகசித்தாள் சுந்தரி. "சிச்சீ! நானோ அஞ்சுபவன்? முக்காலங்களிலும் இல்லை! பழக்கமில்லாத புது மனையிற் புகுவது எனக்கு வெட்கமாக இருக்கிறது" என்றேன் நான். "எம் மினத்தினர்க்கேயன்றோ வெட்கம் உரியது! இவ்வளவு வெட்கப்படுவதற்கு நீ ஆண் வேடம் பூண்ட பெண்தானோ?" என்று கூறிக் கலகலவென்று குறும்பாகச் சிரித்தாள் அந்த சுந்தரி!

பின் இருவரும் அம் மாளிகைக்குள் புகுந்தோம். பிறர் எவரும் எங்களைக் கண்டுகொள்ள முடியவில்லையாதலால், எவராலுந் தடுக்

கப்படாமல் தாராளமாக உட்சென்ற நாங்கள், அழகியதொரு படுக்கையறையை அடைந்தோம். சிறந்த சித்திரவேலைப்பாடுடையதொரு அழகிய கட்டிலிலே, காமப்பித்து மிகுந்தவனாய்க் காணப்பட்ட ஒருவன் வீற்றிருந்தான். அவனருகில் ஆறு அழகிய மாதர்கள் அமர்ந்துகொண்டிருந்தனர். எளிய தோற்றமுடைய ஒருவன் தரையைப் பெருக்கிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட யான் அருகில் நின்ற சுந்தரியை நோக்கி, "ஒருவன் தனது மனமார்ந்த உண்மைக் காதலை ஒருத்தியிடமே செலுத்தக் கூடுமேயல்லாது, ஒரே பள்ளியில் அமர்ந்துள்ள ஆறு மங்கைகளுக்குந் தனது உண்மைக் காதலைப் பங்கிட்டுக் கொடுப்பது எவ்வாறு சாத்தியம்? இவன் பல வடிவங்களெடுத்துப் பாவையரைப் பரவசப்படுத்தக்கூடிய அற்புத சக்தி படைத்த கண்ணபிரானா என்ன? தங்கள் எதிரில் மற்றொரு மனிதன் இருப்பதைச் சற்றுங் கவனியாமல், இவனோடு சரசசல்லாபங்கள் செய்து சிரிக்கும் இம் மாதர்களுங் கற்பிற் சிறந்த உத்தமிகளாக இருக்கக்கூடுமென்று என் மனதிற்குத் தோன்றவில்லை" என்றேன்.

அதைக் கேட்ட சுந்தரி பின்வருமாறு கூறலானாள்:—

"உன்னை வெறும் வேதாந்தியாக மட்டுமல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்; நீ ஒரு பக்காச் சோதிட நிபுணனாகவும் காண்கிறாயே! நீ சந்தேகித்தவாறே, இம் மங்கைகளுக்கு இருக்க வேண்டிய நாணத்தை, இவர்களைப் பிடித்த 'பணப் பித்து' எனும் பேய் திருடிக் கொண்டு போய்விட்டது. உண்மைக் காதலுடைய ஒருத்தி தனது ஹிருதயத்தைத் தன்னை அடிமை கொண்ட—தனது சிந்தையைக் கவர்ந்து கொண்ட ஒருவனுக்கே உரியதாகச் சமர்ப்பித்து விடுவாளேயன்றி, எக் காலத்திலும்—எத்தகைய சோதனைகளாலும்—வேறு எவருக்கும் அளிக்க ஒருப்பட மாட்டாள். அத் தெய்வீகக் காதலின் பசையுங்கூட, பெண் வடிவு கொண்டுள்ள இப் பேய்களின் நெஞ்சில் ஒட்டிக்கொண் டிருக்கவில்லை. இப்பொழுது கட்டிலில் அமர்ந்திருப்பவனோடு கொஞ்சிக் குலவும் இப் பெண்கள், கீழே தரையைப் பெருக்கிக்கொண் டிருப்பவனுக்கு இன்பக் கலவி யமுதூட்டி மகிழ்வித்து ஒரு வருஷந்தானும் இன்னும் கழியவில்லை.

சில மாதங்கட்டு முன்புதான், அழகிற் சிறந்ததும், கண்களையும் கருத்தையும் ஒருங்கே குளிர்விப்பதும், மேலே விரிக்கப்பட்டுள்ள சிகப்புப் பட்டுக்குள் மறைந்திருந்தும் கவனித்துப் பார்ப்போருக்கு தாங்கள் உள்ளே அகப்பட்டுக்கொண்டு கலங்கிச் சிதைவதைச் சிற்சில இடங்களில் வெளிக் காட்டிக் கொண்டுள்ள மல்லிகை மலர்களால் மனோகரமான நறு மணத்தைப் பெற்றதுமாகிய பூம் பள்ளியிலே, இம் மங்கைகளை வீற்றிருக்கச் செய்து, தன் கைகளால் இவர்களது கருங் குழலைச் சுகந்த தைலமிட்டுச் சீவி முடித்து அங்கங்களில் விலை யுயர்ந்த சிறந்த நகைகளைப் பூட்டி அழகு பார்த்து, தான் கீழிறங்கித் தாழ்ந்து நின்று, காமப் பெருக்கினாலே "திருவுள்ளத்திற் கொண்டிருப்பதைத் தெரிவிக்கலாகாதோ?" என்று அவர்களைக் கெஞ்சி நிற்பதையே ஒப்பற்ற தேவ போகமாக நினைத்துக்கொண்டிருந்தவனே இவன்.

இப்பொழுது, 'உன்னைப் பிரிய நேர்ந்தால், ஒரு கணமுந் தரிக்க மாட்டோம்' என்று கூறி இவனை அணைத்து மயக்கிய இம் மாதர்களே, இப்பொழுது வறுமைப் பேயால் வாடித் தவிக்கும் இவனை நோக்கி, தங்களுடன் கட்டிலில் இருப்பவனிடம் பலவிதமாகப் பழித்துரையாடிப் பரிகசித்துச் சிரிக்கின்றனர். இப் பெண் பேய்கள் காதல் தெய்வத்திற்கு அடிமைப் பட்டவர்களன்று; கேவலம், பணப் பேய்க்கே அடிமைப் பட்டவர்களாவர். இத்தகைய கொடிய மங்கையர் மேற் கொண்ட மோகம் இன்னும் நீங்கப்பெறாத இவ் வெளியவன் சிறிதளவும் 'மானம்' என்பதே இல்லாதவனாய், எத்தகைய இழிந்த வசைகளையுஞ் சகித்துக்கொண்டு, இவர்கள் ஏவிய குற்றேவல்களைச் செய்து, இட்ட பிச்சையை உண்டு வயிற்றை வளர்த்து வரும் அற்பத் தன்மையை என்னென்பது? இம் மாதர்களின் காதற் பசையற்ற வஞ்ச நெஞ்சமும், இவர்களது பொய் நடிப்பை மெய்யென நம்பி, இப் பெண் பேய்களுடன் குலவிக் கொண்டிருப்பவனது பேதைமையும், மானந் துறந்து ஈன வாழ்வு வாழும் இவ் வெளியவனது அற்பத் தன்மையும் உலக மாயையின் தன்மை எவ்வாறிருக்கின்றது என்பதைச் செவ்விதில் விளக்கிவிட்டனவன்றோ!"

அவ்வற்பக் காட்சியைப் பின்னும் பார்த்துக் கொண்டிருக்க விரும்பாமல் இருவரும் அவ்விடத்தை விட்டு நீங்கிப் பறந்து சென்றோம். அழகியதொரு மாளிகையைக் கண்டு, சுந்தரி கீழே இறங்கினாள்; யானும் இறங்கினேன். அம் மாளிகையின் தெரு வாசலிலே, ஒருவன் உட்கார்ந்துகொண் டிருந்தான். அவனது தோற்றத்தினின்றும், அவன் ஒரு செல்வச் செருக்குடையவன் என்பதை எளிதில் தெரிந்துகொண்டேன். அவனருகில் நான்கு மாதர்கள் நின்றுகொண்டு, அவனுடன் சரச சல்லாபங்கள் செய்துகொண்டே, தங்கள் கைகளில் தங்கக் கிண்ணங்களில் வைத்துக் கொண்டுள்ள திவ்ய சித்திரான்னங்களை விளையாட்டுப் பாலகனுக்குப் பரிந்து ஊட்டு

வது போல் அவனுக்கு ஊட்டிக்கொண் டிருந்தனர். அவர்கள் எதிரில், தெருவில் நின்றுகொண்டிருந்த ஒரு பிச்சைக்காரன், "அம்மா! பாழும் வயிறு துடிக்குது! காதடைக்குது! கண்கூட நல்லாத் தெரியலே! நிற்கக்கூட முடியலே! மயக்கமா யிருக்குது! ஒரு பிடி சோறு கொடுத்தா, உங்கள் குழந்தைகளுக்குக் கோடி புண்ணியம் உண்டு!" என்று ஈனக் குரலில் இரந்துகொண் டிருந்தான்.

அக் காட்சியைக் கண்டு அகங் கரைந்து நின்ற என்னிடம், பின் வருமாறு கூறலானாள் அருகில் நின்ற சுந்தரி.

"பசியின் கொடுமையால் இரந்து நிற்கும் இவனுக்கு, ஒரு பிடி சோறு கொடுக்கக்கூட மனம் இரங்காத இப் பெண் பேய்களைப் பார்த்தாயா! இவ் வெளியவன், சென்ற வருஷத்தில் செல்வச் சீமானாகச் சிறந்து விளங்கிய ஒருவனே! வறுமைப் பேயின் கொடுமையாற் செல்வத்தை இழந்துவிட்ட இவன், ஒரு வருட காலத்திற்குள் வீடு தோறும் இரந்து உண்டு வாடுபவனாக மாறிவிட்டான். இவனே, செல்வச் சீமானாய்ச் செருக்குற்றிருந்த காலத்திலே, வயிறு நிரம்ப அறுசுவையுண்டி உண்டு, பள்ளியிற் புரண்டு கொண்டிருந்தபோது இவனருகிற் சென்று நின்று, பெரிதும பரிவுடையவர்களைப் போல நடித்து, குயிலைப் பழிக்கும் இனிய குரலிலே—"ஐயோ! இப்படி இளைத்துவிட்டீர்களே! இதோ இந்தச் சர்க்கரைப் பொங்கலில் ஒரு பிடி சாப்பிடுங்கள்!" என்று கூறி இவனைத் தட்ட வொட்டாமற் செய்து, இவன் வாயில் திணித்த மாதர்களே, இன்று வறியவனாக மாறி நிற்கும் இவனுக்கு ஒரு பிடி சோறு கொடுக்கக்கூட மனமிரங்காது நிற்கின்றனர்! எத்தகைய கொடுமை மிகுந்த காட்சி யிது பார்!"

அதைக் கேட்ட நான், "போதும்! போதும்!! மண்ணுலகக் காட்சிகள்!!! பறப்பதிற் கொண்ட பித்தினாலே உன்னுடன் வர இசைந்ததன் பயன், இத்தகைய துன்பக் காட்சிகளைப் பார்த்து மனங் கொதிப்பதுதானா?" என்று சுந்தரியை வினவினேன்.

"ஆத்திரப்படாதே வேதாந்தியே! இனி, விண்ணுலகுக்குப் போவோம் வா!" என்றாள் அவள்.

அம் மொழிகள் செவிகளில் விழுந்த வுடனே, என் மனத்திலிருந்த எல்லா வகைப்பட்ட துன்பங்களும் மறைந்துவிட்டன. 'மனிதனாகப் பிறந்த நாம், கந்தர்வனாக மாறியதோடன்றித் தேவ லோகத்தையும் பார்க்கப் போகிறோமல்லவா' என்று என் மனங்

கொண்ட ஆனந்தத்தை வர்ணிக்க முடியாது. இருவரும் விண்ணுலகை அடைந்தோம்! எங்கு நோக்கினும் இன்பக் காட்சிகள்! எவர் முகத்திலும் ஆனந்தத் தாண்டவம்!! தேவலோகக் காட்சிகளின் அற்புதத்தைத் தேவ பாஷையாலேயே வர்ணிக்க முடியுமேயன்றி, மானிட மொழியால் வர்ணிக்க முயல்வதிற் பயனில்லை! இந்திரனும் இந்திராணியுஞ் சீரிய சிங்காசனம் ஒன்றில் வீற்றிருந்தனர். சுந்தர கந்தருவர் யாழ் மீட்டி இரு செவிகட்கு இன்னமுதமென்ன இன்னிசைக் கீதங்கள் பாடிக்கொண் டிருந்தனர். மேனகை, அரம்பை, ஊர்வசி முதலிய தேவ மாதர்கள் அற்புத நடனஞ் செய்துகொண்டிருந்தனர். கண்களுக்கினிய காட்சிகள்! செவிக்கினிய கீதங்கள்!! நாசிக்கினிய மனோகர மணம்!!! அத்தகைய ஆனந்தானுபவத்தில் ஈடுபட்டவர்களாய், பற்பல சுந்தர புருஷர்கள் அழகிய ஆசனங்களில் அமர்ந்துகொண் டிருந்தனர். அவ்வண்ணம் அமர்ந்திருந்தவர்களுள் ஒருவனை, இருவர் கழுத்தைப் பிடித்துக் கீழே தள்ளினர். அந்தோ! என்ன பரிதாபம்! என்ன கொடுமை!! அந்த நிர்ப்பாக்கியன் கதறிக்கொண்டே மண்ணுலகத்தை நோக்கித் தலைகீழாகச் செல்லுவானாயினன்.

என்னருகில் நின்ற சுந்தரி, என்னிடம் பின் வருமாறு கூறலானாள்:—

"தலைகீழாக மண்ணுலகத்தை நோக்கிச் செல்லுகின்ற இவனுக்கு இன்றோடு விண்ணுலக வாழ்வின்பம் முடிவுற்று விட்டது. ஐயோ! பாவம்!! இவன் பூவுலகிலே மண்ணாசையை விடுத்தான்; பொன்னாசையையுந் துறந்தான்; பெண்ணாசையையும் மறந்தான்; மழையில் நனைந்து, வெயிலில் உலர்ந்து காய்கனி தின்று காய மொறுத்துக் கடுந் தவம் புரிந்தான். ஆனால், அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்து அச்சுதனுக்கு அடிமைப்பட்டு வாழும் மீட்சி யில்லா வைகுந்தமாநகர் வாழ்வின்பத்தைப் பெறச் சிறிதளவும் முயற்சி எடுத்துக் கொண்டானில்லை. தேவ லோக வாழ்வின்பத்தையே பேரின்ப வாழ்வாகக் கருதி மயங்கி—அவ் வாழ்வின்பத்தைப் பெற்று என்றென்றும் இன்புற்றிருக்கலா மென்று எண்ணி, இவன் பட்ட பாடுகள் யாவும் வீணாயின. இப்பொழுதே, இவன் 'தேவ லோக வாழ்வின்பமும் நிலையற்ற இன்பமே' என்னும் உண்மையை உணர்ந்துகொண்டான். தபோ மகிமையின் பயனாகச் சுவர்க்க வாசத்தைப் பெற்றுங்கூட, இவன் செய்த தவப் பயன் தீர்ந்த வுடனே மீண்டும் பூவுலகத்திற்கே தள்ளப்படலானான். இவன் இனி, எவள் வயிற்றிலேனுங் கர்ப்பவாசஞ் செய்ய வேண்டியவனே; மீண்டுஞ் சம்சார சாகரத்தில் உழன்று வருந்த வேண்டியவனே! கண்டுகொண்

டாயோ விண்ணுலக வாழ்வின் நிலைத்து நில்லாத இவ் அற்ப இன்பத்தை! இத்தகைய வாழ்வுக்கு நீயும் ஆசைப்படுகிறாயோ?" என்று என்னைக் கேட்டாள் சுந்தரி.

"கருணைக் கடலான திருநாரணன் திருத்தாள்களின் மாண்பிலே என்றும் எப்பொழுதுஞ் சிந்தை செலுத்தி நிற்குஞ் சீரிய பேறு பெற்றுள்ள யான், நிலைத்து நில்லாத அற்ப இன்பமாகிய இத் தேவலோக இன்பத்தைச் சிறிதேனும் மதிப்பேனோ? உள்ளத்தை உருக்கி, ஒப்புயர்வற்ற பேரின்பம் ஊட்டும்-செந்தமிழ் மணக்கும் என் சிந்தைக்கினிய திருவாய்மொழிச் சேவை யின்பம், இத் தேவலோகத்தில் உண்டோ? நீ அன்போடு காட்டிய ஐந்து காட்சிகளும், நம்மாழ்வார் அறிவுறுத்தி யருளியவாறு, கடிசேர் துழாய் முடியனும், பனைத்தாள் மதகளிறட்ட பாந்தாமனும், மணிமின்னு மேனியனான மாயனும், கடற்பள்ளியண்ணலும், ஆதியஞ்சோதியனும், பணங்கொள் அரவணையானும், கொடிமன்னு புள்ளுடை அண்ணலும், மறுகலில் ஈசனும், முகில்வண்ணக் கண்ணனுமாகிய திருவரங்கச் செல்வனாரது செங்கமல வண்ண மென்மலர்த் திருவடிகளிலே சிறியேன் கொண்டிருந்த பக்தியைப் பெரிதும் உறுதிப்படுத்தக்கூடிய காட்சிகளாகும். அறிவை மயக்கக்கூடிய பொய்யின்பப் பொருள்களின் நிலையாமையைச் செவ்வியில் விளக்கிக் காட்டி, எனக்குச் சிறந்த படிப்பினைகளை நன்கு உணர்த்திய உனக்கு, நான் எத்தகைய கைம்மாறு செய்யக்கூடும்? என்னிடம் இவ்வளவு பேரன்பு பாராட்டிய நீ யாரென்பதை, இனியேனும் நான் தெரிந்து கொள்ளலாமோ?" என்றேன் நான்.

அதைக் கேட்ட அந்தச் சுந்தரி, "எவரையும் எளிதில் மயக்கிவிடக்கூடிய என்னைக் கண்டும், மன உறுதியிற் சிறிதுங் குன்றாதிருக்கக்கூடிய சக்தியை திருஅரங்கேசரே உனக்கு அளித்திருக்கின்றார். அதனாலேயே, உன்னை என்னால் மயக்க முடியவில்லை. எனது இந்தச் சுந்தர கந்தருவ உருவம், எனது மாயை வடிவேயன்றி உண்மை வடிவன்று. உண்மையில் நான் யார் தெரியுமோ? என்னையே உலகத்தினர் 'பணப் பேய்' என்று கூறுகிறார்கள்." என்று கூறிக் கடகட வென்று சிரித்தாள். ஐயோ! என்ன கோரம்! என்ன பயங்கரம்!! மறுகணத்தில் அவள் பயங்கரத் தோற்றமுடைய கருநிறப் பெரும் பேயாக மாறி நின்றாள். அதைக் கண்ட நான் 'ஐயோ!' என்று அலறினேன்; உடனே, விழித்துக்கொண்டேன். எதிரில் தண்கடலும் வானில் வெண்மதியுங் காட்சி யளித்தன. அக் காட்சியைக் கண்ட பின்பே, 'நாம் கடற்கரையிலே இருக்கிறோம்' என்கிற உணர்ச்சி என் மனதில் தோன்றியது. உடனே, அவ்விடத்தை விட்டெழுந்து வீட்டை நாடி நடந்து சென்றேன்.

சிறு மணித் திரள்.

(மனோகரனார்.)

1. நல்ல சிநேகிதர்களைச் சம்பாதித்துக்கொள். இன்றேல், சிநேகிதர்களே யில்லாதிருப்பது மேல்.

2. வருவாயுள்ள காலத்திலேயே சிறிது மீத்துவைக்க முயற்சி செய். இப்பொழுதுபோலவே எப்பொழுதும் வருவாய் கிடைத்துக் கொண்டிருக்குமென நம்பாதே.

3. கடன் கொடுத்துள்ளவனைப் பகைவனாக்கிக்கொள்ளாதே. கடனைத் தீர்த்து நீ விடுதலையடைவதற்கு அவனது உறவு மிகவும் உதவிசெய்யும்.

4. அற்பமென்று எதையும் அலட்சியஞ் செய்யாதே. அற்பத்தினின்றே பிரமாதம் விளைகிறது.

5. துன்பம் நேர்ந்த காலத்தில் தைரியத்தைக் கைவிடாதே. உனது தைரியத்தைச் சோதிக்கவே துன்பம் நேரிடுகிறது.

6. உனது பகைவனையும் நண்பனாக்கிக்கொள்ள முயல். ஆனால், அவனை முழுதும் நம்பி நடந்துவிடாதிரு.

7. உனது வார்த்தைகள் குறைவா யிருக்கட்டும். உனது சிந்தனை அதிகமாயிருக்கட்டும்.

8. ஒருவனுக்கு, நாளைக்கு அதிக உதவி செய்கிறேனென்பதைவிட, இன்றே உன்னாலியன்ற சிறு உதவியைச் செய்துவிடு. இன்றைக்கிருக்கும் உனது எண்ணமும், நிலையும் நாளைக்கு மிருக்குமென்பது நிலையானதல்ல.

9. பிறருக்குப் பல நீதிகளைப் போதிப்பதைவிட, உன்னாலியன்ற இரண்டொன்றை நீயே நடத்திக் காட்ட முயல். காதாற் கேட்பதைவிடக் கண்ணாற் காண்பதையே மக்கள் முதலிற் கைப்பற்ற முயல்வர்.

10. பல தொழில்களைச் செய்ய விரும்புவதை விடுத்து, ஒரு தொழிலையே உறுதியாகப் பற்றிச் செய். முழுத் திறமையின்றிப் பல தொழில்களைச் செய்து நஷ்டமடைவதைவிட, முழுத் திறமை வாய்க்கும்படி ஒரு தொழிலைச் செய்து உயர்வடைவது உத்தமம்.

11. உனது சொந்த இரகசியங்களை உனது நண்பனுக்குங் கூறாதே. இன்று உற்ற நண்பனாயிருப்பவன் நாளைக் கொடிய பகைவனாக மாறுவது கடினமல்லவே.

12. உனது பணியாளரில் எவரையும் முழுதும் நம்பி நடந்துவிடாமல், ஒரு கண் எச்சரிக்கையில் வைத்திரு. சுய (தன்) நலத்திற்கு அவசியம் ஏற்பட்டபொழுது எவரும் நம்பிக்கைத் துரோகஞ் செய்யத் துணிந்துவிடுவர்.

13. எப்பொழுதும் பிறருக்கு மரியாதை கொடுத்துப் பேசு. நீ கொடுக்கும் மரியாதையே உனக்குத் திரும்ப வருகிறது.

14. உற்ற சிநேகிதரென்றும், நெருங்கிய பந்துக்களென்றும் அவர்களிடத்தில் அதிகமாக நெருங்காதே. பழகப் பழகப் பாலும் புளிக்குமல்லவா?

15. படிப்பது குறைவாயும், எழுதுவது அதிகமாயும் இருக்கட்டும். படிப்பதைவிட எழுதியது மனதில் நன்கு பதியும்.

16. குற்றஞ் செய்தவர்களைத் தண்டிக்காமல் விடாதே. நீ ஒருதரம் மன்னிப்பதே அவர்களுக்கு மீண்டுங் குற்றஞ் செய்யத் துணிவுண்டாக்குகிறது.

17. கூடியவரையில் உன் அபிப்பிராயங்களை வெளியிடாமல் வைத்துப் பிறர் அபிப்பிராயங்களைப் பொறுமையாகக் கேட்கத் தலைப்படு. அதனால் பல துன்பங்களுக்கும், பழிகளுக்கும் நீ தப்பிப் பிழைப்பவனாவாய்.

18. கூடுமானவரையில் உனக்குத் தேவையான உதவிகளனைத்தையும் நீயே செய்துகொள். எதற்கும் பிறரை எதிர்பார்க்கும் பழக்கம் உன்னை அம்பலத்தில் விட்டுத் தவிக்கச் செய்துவிடும்.

19. ஜீவகாருண்ய முடையவனாயிரு. ஜீவகாருண்யமென்பது ஜீவர்களை வதைக்காமலிருப்பது மாத்திரமன்று; யாதொரு உயிர்க்கும் மனோ வாக்குக் காயங்களால் யாதொரு துன்பமுஞ் செய்யாம லிருத்தலேயாம்.

20. யாவரையும் அன்போடு நேசி. நீ பிறருக்கு அன்பு காட்டினால், பிறரால் உனக்கு அன்பு காட்டப்படும்.

21. உனக்கு ஒழிந்த நேரங்களில் நீ செய்த கருமங்களின் நன்மை தீமைகளை ஆலோசித்துப் பார். அவ்வாறு செய்யும் ஒவ்வொரு வினாடியும் உனது ஆத்ம சக்தியை உறுதிப்படுத்துகிறது.

தூத வாக்யம்.

(ஒரு சிறு நாடகம்.)

(தினமணி.)

இடம்:— உபலாவிய நகரியில் ஓர் அரண்மனை.

காலம்:— இரவு இரண்டாம் யாமம்.

[பன்னிரண்டு வருஷ வனவாசமும், ஒரு வருஷ அஞ்ஞாத வாசமுஞ் செய்து முடித்த பாண்டவர்கள், இனி மேற் செய்ய வேண்டியதைப் பற்றி ஆலோசனை செய்கிறார்கள். கண்ணன் சபைத் தலைமை வகிக்கின்றான். தருமன் முதல் ஐவரும், திரௌபதையும், தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறிக் கொள்ளுகிறார்கள்.]

தர்மன்:— தம்பிமார்களே! நமது உரிமை நாட்டைத் தாயாதிகளும் மாற்றாருஞ் சகோதரர்களுமாகிற கௌரவர்கள், சூதால் வென்று அரசாளுகிறார்கள். நமக்கும் அவர்களுக்கும் ஏற்பட்டிருந்த ஒப்பந்தப்படி பன்னிரண்டு வருஷ வனவாசமும், ஒரு வருஷந் தலை மறைவாய் மாற்றலர் கண்களிலும், மற்றவர்கள் கண்களிலுந் தென்படாமல் மாறு வேடத்துடன் மறைந்துறைந்து, தவணை முடிந்து வந்து விட்-

---

22. உனது வாணாளில், உலகிற் புகழ்ச்சிக்குரிய ஏதேனும் ஒரு நற்காரியத்தைச் செய்து முடிக்கத் தவறாதே. மெய்யென நம்பியுள்ள உனது பொய் யுடம்பு அழிந்துபோம்; புகழுடம்பு ஒன்றே அழியா திருப்பதாம்.

23. உனது வாழ்க்கையில், தினசரி நீ காணும் அனுபவங்களை அவ்வப்போது குறித்து வைத்துக்கொண்டுவா. அஃது பிற்காலத்தில் உனக்கேயன்றிப் பிறருக்கும் ஒரு அறிவுப் பொக்கிஷ (சாஸ்திர)மாக உபயோகப்படுவதாகும்.

24. கடன்காரனை நண்பனாக்கிக்கொள். நண்பனைக் கடன்காரனாக்கிக்கொள்ளாதே.

25. பெற்ற தாயையையும், பிறந்த நாட்டையும், மதலைகள் பேசி மகிழ்ந்து, அறிவெய்திய மொழியையும் அன்போடு நேசித்து, அவற்றின் மேன்மையை நாடு. தாயும், நாடும், மொழியும் ஒவ்வொருவருக்குந் தவறாது நன்றிக் குரியனவாகும்.

டோம். நமது நாடு நமக்கு வேண்டும். இந்திரப்பிரஸ்தத்தில் நம்முடைய அரசுரிமையை நாம் அமைத்துக்கொள்ள வேண்டும். தம்பி துரியோதனன் என்ன எண்ணிக்கொண்டிருக்கிறானோ தெரியவில்லையே!

பீமன்:— தெரியாமலென்ன அண்ணா? பங்காளிகளைப் பரம சத்துருக்களாகப் பாவித்துச் சர்வ நாசஞ் செய்துவிட வேண்டுமென்றெண்ணிக்கொண்டிருக்கின்றான் துரியன். விஷ விருந்து செய்தான்; அரக்கு மாளிகை யமைத்தான்; சூதால் நம் நாட்டைக் கைப்பற்றினான், பாஞ்சாலன் குல விளக்கைச் சிகை பிடித்துத் துகிலுரிந்தான்; நாம் நலிவுற நாட்டைவிட் டோட்டினான்; நச்சுப் பொய்கை சமைத்தான்; இனியும் என்னென்ன யாதனைகளைத்தான் செய்யக் காத்திருக்கின்றானோ சண்டாளன்?

அர்ஜுனன்:— கண்ணன் கைச் சகாயமும், அண்ணன் கைக் கதையும், அருச்சுனன் கைக் காண்டீபமும் இருக்குமட்டும் நம்மை யவர்கள் யாது செய்ய முடியும் அண்ணா?

கண்ணன்:— வாஸ்தவந்தான் அர்ஜுனா! உங்களுடைய பலத்தினால் நீங்கள் எதிரிகள் இழைக்கும் இன்னல்களைத் தடுக்க முடியுமென்பது வாஸ்தவந்தான். ஆனால் உங்கள் நாட்டை நீங்களடையும் உபாயமென்ன?

அர்ஜு:— எங்கள் உரிமையை எங்களுக்களிக்க எவன் மறுப்பன்?

கண்ணன்:— துரியோதனன்தான் வேறு யார்?

அர்ஜு:—ஏன் மறுப்பன்? மறுத்தாற் போர் செய்து எங்கள் இந்திரப்பிரஸ்தத்தை நாங்கள் எடுத்துக்கொள்ள மாட்டோமா? எங்களிடம் ஆயுதம் இல்லையா? ஆண்மை யில்லையா?

தர்மன்:— அர்ஜுனா! ஆதுரப்படாதே! அரச நீதியைப் புறங்காலால் மிதியாதே! நிர்ஸகாயமாய்ச், சேனாபலமில்லாமல், பஞ்சைகளாயிருக்கிற நமக்குத் தர்ம தேவதையும், தெய்வ சகாயமுந் தேவை. நீதிதர்மத்தை நாம் நிராகரித்துவிட்டால் அந்த இரண்டு சகாயந்தானுங் கிடைப்ப தெப்படி? தர்மந் தலை காக்குமா? தெய்வந் துணைபுரியுமா?

பீமன்:— அண்ணா! உங்களுடைய இந்த வேதாந்தம் நமக்கு இந்திரப்பிரஸ்தத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிடாது; போர் செய்துதான் பெற வேண்டும்.

தர்மன்:— வாஸ்தவம் பீமா! அதற்கும் இராஜ நீதி யில்லையா?

பீமன்:— உண்டு. ஆனால் யாரிடத்திலே? எப்பொழுது? எல்லோரிடத்திலும், எல்லாக் காலத்திலும் ஒரே நீதி ஒவ்வுமா?

தர்மன்:—என்றாலும் எல்லோரையும் எக் காலத்திலுஞ் சத்தியந் தானே ஜெயிக்கிறது?

பீமன்:— பார்க்கலாம் உங்கள் சத்தியத்தின் சௌகரியத்தை. வில்லெடுக்காமல், போர் தொடுக்காமல், அரவக் கொடி பிடித்த துரியோதனன் நமது நாட்டை நமக்குக் கொடுத்துவிடப் போகிறானா?

தர்மன்:— கொடுக்கத்தான் மாட்டான். அதற்காக நாம் நீதி பிசகி நடக்கலாமா?

பீமன்:— சரி. விவாதமென்னத்திற்கு. அண்ணாவின் முடிவான அபிப்பிராயத்தைச் சொல்லிவிடட்டும்.

தர்மன்:— தம்பிமார்களே! என் னபிப்பிராயத்தை நான் கூறிவிடுகிறேன் கேளுங்கள்; மதுசூதனரும் கேட்கட்டும்; திரௌபதையுங் கேட்கட்டும்.

எல்லோரும்:—சரி. சொல்லுங்கள்.

தர்மன்:—நமது நாடு நமக்கு வேண்டும்; தாயாதி பாகம் நாம் கேட்கின்றோம்; சுயோதனன் மறுப்பானாகில் அதன்மேற் செய்ய வேண்டுவதை அப்புறம் யோசிக்கலாம்.

பீமன்:—யோசிப்பதென்ன? போர் செய்து பெறுவோம்.

தர்மன்:—நல்லது. ஆனாற் போர் செய்வதன் முன்னதாக அரசரானவர்கள் செய்கிற வழக்கப்படி, ஒரு தூதுவனை யனுப்பித் தாயாதி பங்காளியின் எண்ணம் இன்னதெனத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

அர்ஜுனன்:—அண்ணா! இந்த வீண் முயற்சிகளெல்லாம் என்னத்திற்கு?

தர்மன்:—வீண் முயற்சியல்ல அர்ஜுனா! இராஜ நீதிப்படி நாம் நடக்கின்றோம்.

அர்ஜு:—இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் "இராஜ நீதி, இராஜ நீதி" என்று சொல்லிக்கொண்டிருக்கப் போகிறீர்கள்? உலூகனை யனுப்பினோம், சஞ்சயனைத் தூதனுர்த்தினோமே போதாதா?

தர்மன்:—போதாது; இன்னும் ஒருமுறை முயலுவோம். விருதாவிலே, தாயாதிகளையும், பந்துமித்திரர்களையும், குலப் பெரியார்களையுங் கொன்று, போர் வென்று அரசாளுவதைவிட, மீண்டும் வனவாசிகளாகக் காய் கனி, கிழங்குகளைத் தின்று வாழ்ந்துவிடலாமே.

கண்ணன்:—ஹா! இனியும் வனவாசமா? காடு காடாய் அலைந்து திரிவதோ? பாண்டவர்கள், போருக்குப் பயந்து காட்டுக்குப் போய் விட்டார்கள் என்று பூதலத்தார் ஏசமாட்டாரோ? நீங்கள் அன்றெடுத்துக்கொண்ட பிரதிக்ஞையும், சபதமும், சங்கற்பமும் பொய்த்துத்தான் போகாதோ? மேலும் இராஜநீதிதான் ஆகுமோ? தர்மா! இதுநீதியல்ல; கோழைத்தனம்' பேடிச் செயல்! பிச்சைப் பிழைப்பு!

தர்மன்:—(சிறிது சிந்தித்து) பின்னர் என்னதான் செய்கிறது? நாமாகப் போர் தொடுப்பதா? கூடாது. நீரே போய் அந்தச் சுயோதனன் கூட்டத்தாருக்குத் தர்ம நீதியையும், இராஜ நீதியையுஞ் சொல்லிப் பூமியையோ, போரையோ ஏதாவ திரண்டில் ஒன்றை வாங்கி வாரும் பரந்தாமா!

கண்ணன்:—நல்லது. அப்படியே யாகட்டும். ஆனால் மற்றவர்களுடைய அபிப்பிராயமென்ன? பீமா! நீ யென்ன சொல்லுகிறாய்?

பீமன்:— (கோபாவேசங் கொண்டு) எங்கள் ஆபத் பாந்தவா! அண்ணன் மானமிழந்து விட்டாரா? நமது கௌரவத்தையும், அந்தஸ்தையும் அவலமாக இழந்து, சத்துருபக்ஷத்தாரிடத்திலே பிச்சை கேட்கவுந் துணிந்துவிட்டாரே! ஹா! அன்றைக்கு அவ்வளவு இராஜ ராஜாக்கள் முன்னிலையிலே, அதிரதர், மஹாரதர், சமரதர் முதலிய வீராதி வீரர்களின் எதிரிலே, திரௌபதையைத் துச்சாதனன் மான பங்கஞ் செய்தபோதுங்கூட என்னையுந் தம்பிமார்களையுங் கையமர்த்திக் "கோபியாதீர்கள்" என்று தீராப்பழியை யுண்டாக்கினார். துரியோதனனுடைய கொடுமையைவிட அண்ணனுடைய அருள் மஹா பயங்கரமாகவல்லவோ இருக்கிறது!

தர்மன்:—பொருத்தார்தான் பூமி யாள்வார் பீமா!

பீமன்:—எப்பொழுது ஆள்வார்கள்? பகைவர்கள் பிச்சை தந்த பின்னா? வேண்டாம் அண்ணா! வேண்டாம். தங்களையும், என்னையும், தம்பிமார்களையும், திரௌபதையையும் நாட்டைவிட் டோட்டிக் காட்டில் வாசஞ்செய்யச் செய்த அந்தச் சுயோதனனைக் கொன்று, போர் வென்று, அவனுண்ட அவனியெல்லாம் நீ யாளவேண்டும்; பிச்சை வேண்டாம்; போர்செய்து, புகழும், பூமியும் பெறுவோம்.

தர்மன்:—"குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" தம்பீ! சகோதரர்களுக்குள்ளே சண்டையாகாது.

பீமன்:—ஹா! ஜெகதீசா! இத்தகைய சகோதரனோடு நான் ஏன் பிறந்தேன்? நாடு பறித்தவனை, நங்கையைப் பழித்தவனை, வீடு கொடுத்தவனையும் பிழை பொறுப்பதுவோ தர்மம். இதோ! மலையைப்போன்றிருக்கின்ற எனது மகா கதையின் வலிமையை மறந்து

விட்டாயா? அருச்சுனன் வளைக்கின்ற காண்டீபத்தின் நாணொலி கேட்கவில்லையா? நகுல சகாதேவர்களின் வாள்வலி தெரியாதா? இவ்வளவு பலம் நமக்கிருந்தும் அண்ணனிடத்திலே க்ஷத்திரிய தேஜஸ் ஏன் மங்கிப்போய்விட்டது? அல்லாமலும் நமக்கு ஹிததற்பரனாகவும், ஜெகத்திற்கு ரக்ஷகனாகவும் இருக்கின்ற இந்தப் பரந்தாமனுக்கு இவ்வளவு கஷ்டத்தையும் ஏன் தரவேண்டும்? அவஸ்யந் தூது போகத்தான் வேண்டும் என்பது அண்ணனின் கருத்தானால் நான் போய் வருகிறேனே?

கண்ணன்:—பீமா! க்ஷாத்திரத்தினால் ஆத்திரங்கொள்ளாதே. உன் னபிப்பிராயப்படியே யாவும் நடந்தேறும். சபதம் பொய்க்காது; க்ஷாத்திரந் தீர்த்துக்கொள்ளுவாய், சாந்தமாயிரு.

பீமன்:—நல்லது; நான் பேசவில்லை.

கண்ணன்:—உன் னபிப்பிராய மென்ன அர்ஜுனா?

அர்ஜு:—என் னபிப்பிராயமும் அதுதான். பிச்சை வாங்கிப் பூமி யாளவேண்டாம். போர் செய்தே புகழும், பூமியும் பெறுவோம்.

கண்ணன்:—நீ யென்ன சொல்லுகிறாய் நகுலா?

நகுலன்:—எனக்கும் போர்தான் வேண்டும்.

கண்ணன்:—சகாதேவன் சிந்தனை யாது?

சகாதேவன்:—கிருஷ்ண பரமாத்மாவுக்கு இத்தகைய மாயா விலாசம் மாமூலாகிவிட்டதல்லவா? இப்படி யொரு மந்திராலோசனையென்கிற நாடகத்தை ஏனோ நடத்தவேண்டும்? பாரதப் போரின் சூத்திரக் கயிறு பரந்தாமனின் கையிலல்லவோ இருக்கிறது? அதை நடத்துபவரும் அவர்தானே? முடித்துவைப்பவரும் அவரேயன்றோ? எண்ணியிருக்கிறபடி தேவரீர் தூது போனாலும் போகாவிட்டாலும், அந்தத் துரியோதனன் உமது தூது கேட்டு, எங்களுடைய நாட்டை எங்களுக்குக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், திரௌபதி கூந்தலை முடித்தாலும் விரித்தாலும், பூபாரந் தீர்ப்பதற்காகவே பிறந்திருக்கிற நீர் உமது வேலையை முடிக்காமல் விடப்போகிறீரா? பின்னர் எங்கள் அபிப்பிராயம் என்னத்துக்கு வேண்டும்? உமது யுக்தம்போல் செய்யும்!

கண்ணன்:—திரௌபதா! உனது அபீஷ்டம் யாதோ?

திரௌபதி:—அண்ணா! நானென்ன சொல்லட்டும்? பட்ட அவமானம் போதாதா? பெரிய ராஜ சதஸிலே என்னை மானபங்கமாகச் சேலை யுரிந்தபோது ஐவரும் பார்த்திருந்தார்; நீர் சேலை கொடுத்துதவி

197886

னீர். இந்தப் பதின்மூன்று வருஷங்களும் நானெடுத்துக்கொண்ட சபத நிமித்தமாகத் தலைவிரிகோலமா யிருக்கின்றேன். இனி எக்காலத்தில் நான் கூந்தலை முடிப்பது? என் சபதத்தையு முடிப்பது?

கண்ணன்:—தங்காய்! தயங்காதே! நானிருக்கும்போது உனக்கென்ன குறை? நானே உன் கூந்தலை முடிக்கின்றேன்! நானே உன் சபதமும் முடிக்கின்றேன்!

திரௌபதி:—நல்லது, அண்ணா!

கண்ணன்:—நான் துரியோதனனுக்குத் தூதுணர்த்த வேண்டிய விஷயங்கள் யாவை தர்மபுத்ரா?

தர்மன்:—ஒப்பந்தப்படி பாண்டவர்கள் வனவாசமும், அஞ்ஞாத வாசமும் முடிந்து வந்துவிட்டார்கள். அவர்களது உரிமை நாட்டை அவர்களுக்கே கொடுத்துவிடும்படி சொல்லுங்கள். அவன் மறுப்பானாகில் ஐந்தூர்களையாவது கேளுங்கள், அதுவும் இல்லையென்றால் ஐந்து வீடுகளாவது கேளுங்கள். அதையுங் கொடுப்பதற் கிணங்காவிட்டால், வேறென்ன யுத்தத்திற்குத் தயாராக இருக்கும்படி சொல்லிவிட்டு வரவேண்டியதுதான்.

கண்ணன்:—சரி. அப்படியே செய்கிறேன்.

[திரை விழுகிறது.]

காட்சி முடிவு.

இரண்டாங் காட்சி.

இடம்:— ஹஸ்தினாபுரத்தில், துரியோதனன் தர்பார்.

காலம்:— காலை.

[துரியோதனன் சிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கிறான். பீஷ்மன், துரோணன், கிருபன், அஸ்வத்தாமா முதலிய ஆச்சாரியார்களும், நூறு சகோதரர்களும், விதுரன் கர்ணன் முதலிய வீரர்களும் வீற்றிருக்கின்றனர்.]

துரியோதனன்:— ஆச்சாரியர்களே! மகுட மன்னர்களே! வில் வீரர்களே! பஞ்சையர்களாகிய பஞ்ச பாண்டவர்களுக்கு நாடு வேண்டுமாம். நாம் இரண்டு முறை "கொடுக்க முடியா" தென்று சொல்லிவிட்டும் மேலும் மேலுந் தூதனுப்பிக் கொண்டே யிருக்கிறார்கள். இதென்ன பேடிச் செயல்! பூமி வேண்டுமானால் போர் செய்தல்லவோ பெற வேண்டும்!

கர்ணன்:— வாஸ்தவந்தான். ஆண்மை யுண்டானால் குரு க்ஷேத்திரத்திலே அவர்களது அரசுரிமையை அமைக்கட்டுமே. இல்லாவிட்டால் அரச பதம், அவர்களைத் தேடித் தேடித் தெருத் தெருவாய் அலைகிறதா?

சகுனி:— சிச்சீ! பாண்டவர்களின் ஆண்மை யென்ன ஆண்மையோ? போரில் தோற்ற (?) பிரதேசத்தைப் பிச்சையிற் பெறுவதோ க்ஷத்திரியத் திறம்? தம்பி சுயோதனா! இந்தக் கதைக ளெல்லாம் என்னத்துக்கு! நாம் வெற்றி பெற்ற உரிமையில் இந்திரப் பிரஸ்தத்தை ஆளுகிறோம். இதிலே எவருக்குத் தாயாதி பாகம் இருக்கிறது. நமக்கும் பாண்டவர்களுக்கும் நடுவிலே தூதென்ன? சந்தியென்ன? கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் குரு க்ஷேத்திரத்தைத் தவிர வேறிடத்திலே சந்தியில்லை. இருவரின் வாளும் வாளும் சந்திக்கட்டும்! வில்லும் வில்லும் பொருதட்டும்! இச் சமாச்சாரத்தைத் தூது வந்தவனிடம் துடுக்காய்ச் சொல்லிவிடு.

துரியோ:— மாமா வார்த்தைக்கு மறு வார்த்தையு முண்டா? அப்படித்தான் சொல்ல வேண்டும். போர் என்கிற வார்த்தையைப் போட்ட பின்னும் வியவகாரமேது? பாண்டவர்கள் அவ் வார்த்தையைக் கேட்ட பின்னும் வாளெடுக்கப் போகிறார்களா? வெறுங் கையால் என்ன வீரத்தைச் சாதித்துவிட முடியும்?

பீஷ்மன்:— ஆயிரமானாலுந் தாயாதி சகோதரர்களல்லவா சுயோதனா! அவர்களுக்கு வந்த அவமானம் உனக்கில்லையா? பாண்டவர்கள் போர் செய்து வெல்லாமல் விடமாட்டார்கள். வீணாக நமது விருதா வலியை நாமே கூறிக்கொண் டிருந்தால் என்னாகிவிடப் போகிறது? எந்த வொரு காரியத்தையும் வரும் என்றே எதிர் பார்க்க வேண்டும். வராதென் றெண்ணுகிறவனது காரியம், தோல்வியிலே தான் முடியும். பாண்டவர்கள் போருக்கு வரவே செய்வார்கள். நமது சைன்ய மென்ன? பலமென்ன? என்னும் பிரச்னைகளல்லவா இப்பொழுது செய்யப்பட வேண்டியவை!

துரியோ:— வாஸ்தவந்தான். பிதாமகர் போன்ற பரமாத்மாக்களிருக்கும்வரை துரியோதனனுக்கு யாது குறை? ஆயிரம் யானை பலம் எனக்கிருக்கிறது! பதினோராயிரம் அக்ரோணி சேனா பலமும் இருக்கிறது!

விதுரன்:— (தனக்குள்) ஹா! எவ்வளவு கர்வம்! எவ்வளவு மமதை!! இந்த அகங்கார பாவமே உன்னை அழித்துவிடப் போகிறதை நீ அறிவாயா துரியா!

விகர்ணன்:— (தனக்குத்தானே) தர்மத்தை அதர்மம் வென்றுவிடப் போகிறதா?

துரியோ:— சாமந்தகர்களே! வரப்போகிற பாரதப் போரில் நமது பதினோரக்ரோணி சைன்யத்திற்கும் யாரைச் சேனைபதியாக நியமிக்கலாம்?

சகுனி:— ஏன்? இதுபற்றிய சிந்தனைதானும் மஹா ராஜாவின் சிந்தனையிலே யேன் பிறக்க வேணும்? நமது பீஷ்மாச்சாரியார்தான் சேனா நாயகராக நியமிக்கப்பட வேண்டியவர்.

துரியோ:— சரியாகச் சொன்னீர் மாமா! பிதாமகர் பீஷ்மாச்சாரியாரை நமது சைன்ய மனைத்திற்கும் அதிபதியாக நாம் நியமிக்கின்றோம். எல்லோருக்கும் இது சம்மதந்தானே?

எல்லோரும்:— பீஷ்மாச்சார்யருக்கு ஜயகோஷஞ் செய்கின்றனர்.

[பாராக்காரன் பிரவேசம்.]

பாராக்காரன்:— மஹாராஜ்! பாண்டவர்களிடமிருந்து பகவான் நாராயணமூர்த்தி தூது வந்திருக்கிறார்.

துரியோ:— யார்?

பாராக்:— பரமாத்மா கிருஷ்ணன்.

துரியோ:— என்ன சொன்னை? யார் பரமாத்மா? கம்ஸனின் கழிசிறையா பரமாத்மா? காலி கன்றுகளை மேய்ப்பவனா பரமாத்மா? வேய்ங்குழல் ஊதியா பரமாத்மா? கன்னியழிக்குங் காமாந்தகாரனா பரமாத்மா? யாரடா! மெய்க் காப்பாளன், இவனை—இந்த இராஜத் துரோகியைப் பிடித்துப்போய்க் காராக்ருஹத்தில் அடைத்து விடு.

[பாராக்காரன் நடுநடுங்கிக் கொண்டு துரியோதனன் பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறான்.]

துரியோ:— பதனம். இம்முறை மன்னித்தேன். இனிமேல் இத்தகைய அதிகப்பிரசங்கஞ் செய்யப் போகிறாய் ஜாக்கிரதை! மன்னித்தேன் போ. அந்தச் சேவகனை இங்கே அனுப்பிவை.

பாராக்:— கட்டளை மஹாராஜ்!

[பாராக்காரன் செல்லுதல்.]

துரியோ:— சபையினிடமாகப் பாண்டவர்கள் சார்பில் தூது வருகிற கேசவனுக்கு எனது சாமந்தகர்களில் யாராவது மரியாதை செய்யப் போகிறீர்கள்? ஜாக்கிரதை! இங்குள்ளவர்களிலும் எனது பிரஜைகளிலும் எவனாவது கேசவனுக்கு மரியாதை செலுத்தினானோ கண்டிப்பாய்த் தண்டிக்கப்படுவான். இது, அகில ஆரியா வர்த்தத்

திற்கும் சம்ராட்டாயிருக்கிற துரியோதன மஹாராஜாவின் கட்டளை. தெரிந்ததா; பதனம்.

[கிருஷ்ணன் பிரவேசம்.]

கிருஷ்ணன்:— (தனக்குள்) தர்மபுத்ரனது வேண்டுகோளுக்காகவும், தனஞ்செயனுடைய நட்புக்காகவும் துரியோதனனிடத்திலே நான் தூது வந்திருக்கிறேன். இந் தூது, பயனளிக்காதென்பதை நான் நன்றாய் அறிவேன். தனக்குத்தானே யறியாத துரியோதனன் பிறர் சொல்லித் தெரியவா போகிறான்? என்றாலுங் கெட்டுப் போய் விட்டதென்ன? சத்துருக்களின் சதுரங்க சேனைகளையும் துவம்ஸஞ் செய்கின்றதான பீமசேனனுடைய கதாயுதந் துருப்பிடித்துவிடவில்லையே? அசகாய சூரனான விஜயனது காண்டீபம் ஒடிந்து போய் விட்டதா? அழியாத அம்புறாத்தூணி வற்றிவிட்டதா? பூமிச் சுமை பொறுக்க முடியவில்லையே யென்று பூதேவி புலம்புகிற அழுகுரலைக் கேட்கக் கிருஷ்ணனுடைய காதுகள் அடைத்துப் போய்விடவில்லையே? நல்லது உள்ளே செல்லுகிறேன்.

[ராஜதர்பாருக்குட் செல்லுதல்.]

கிருஷ்:— ஹா! நான் பிரவேசித்தவுடன், எனது தோற்றங் கண்டு இந்த க்ஷத்திரியர்களெல்லாம் ஏன் நடுங்குகிறார்கள்? வீரர்களே! பயப்படாதீர்கள். எல்லோரும் அவரவர் ஆசனத்திலேதானே அமர்ந்திருங்கள்!

துரியோ:— என்ன? என்ன இது? கேசவனைக் கண்டு நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்? என்னுடைய கட்டளையை மறந்துவிட்டீர்களா? ஜாக்கிரதை! துரியோதன மஹாராஜாவின் ஆக்ஞை!!

கிருஷ்:— ஹே! சுயோதனா.........

துரியோ:—(நக முதற்சிகைவரை நடு நடுங்கிக்கொண்டு தனக்குள்) ஹா! என்ன அதிகாரம்! எவ்வளவு ருத்ராங்காரம்! எத்தகைய முன்னெச்சரிக்கையோடு ஸ்திரமாக வீற்றிருந்த என்னையுங்கூட இவனது தோற்றம் நிலைகுலையச் செய்து விட்டதே? ஹா! இவன் உண்மையிலேயே மஹா மாயாவாதிதான். (பஹிரங்கமாக) தூதுவரே! இதோ இந்த ஆசனத் தமருங்கள்!

கிருஷ்:— நல்லது. தாங்களும் அமருங்கள்! மகுட மன்னர்களே! நீங்களும் வீற்றிருங்கள்! நானும் இருக்கின்றேன்.

[ஆசனத் தமருதல்.]

துரியோ:— தூதுவரே! தர்ம புத்ரரும், வாயு குமாரனும், இந்திரன் மைந்தனும், அஸ்வினி குமாரர்களும் க்ஷேமந்தானே?

கிருஷ்:— எல்லோருஞ் சுகமே யிருக்கிறார்கள் காந்தாரி மைந்தா! ஹஸ்தினாபுரத்து அரசனுடைய க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்டு, பாண்டு புத்ரர்கள், தங்களுக்குரிய தாயாதி பாகத்தைக் கேட்டு வாங்கி வரும்படி என்னை இங்கு அனுப்பி யிருக்கிறார்கள்.

துரியோ:— யார் தாயாதிகள்? யாருக்கு இங்கே பாகமிருக்கிறது? என்ன பித்தலாட்டம் இது? அன்று வேட்டை மார்க்கமாகச் சென்ற என் சிற்றப்பன் ஒரு யோகீஸ்வரருடைய சாபத்தினாலே காதற் சுகத்தை யிழந்துவிட்ட பின், பஞ்சவர்கள் பாண்டு மைந்தர்களென்று பாகங் கேட்க என்ன நியாயமுண்டு?

கிருஷ்:— ஆனால் விசித்திர வீர்யனுக்கல்லாது வியாஸனுக்குப் பிறந்த உனது தந்தைக்கு, இந்த ராஜ்யத்தில் என்ன உரிமை யிருந்தது? வேண்டாம். பூர்வ காலத்துக் கதைகளைப் பார்த்துக் கொண்டு மாற்றாஞ் சகோதரர்களாகிற நீங்கள் பரஸ்பரம் அன்யோன்யமாக இராமல் மாற்சர்யப்பட்டுக் கொண்டிருப்பது நல்லதல்ல. கௌரவ குலம் கௌரவமாக வாழ வேண்டுமானால், பாண்டவர்களுக்கு அவர்களது பங்கைக் கொடுத்து விடுவதுதான் முறை.

துரியோ:— கேசவா! உமக்கு இராஜநீதி தெரியாது. பாரம்பர்யமான உரிமையோடு போரில் வென்ற உரிமையாலும் நான் இந்திரப் பிரஸ்தத்தை ஆளுகிறேன். பிச்சை வாங்கி அரசுரிமை பெற எவருக்காவது பாத்தியதை யிருக்கிறதா?

கிருஷ்:— சுயோதனா! வஞ்சனை வேண்டாம். பிறரை வஞ்சிக்கிறவன் பிறரால் வஞ்சிக்கப்படுவான். அதிலும் பங்காளிகளைத்தானா வஞ்சிக்கிறது?

துரியோ:— பேஷ்! ரொம்ப லட்சணம். தனக்கொரு நீதி பிறர்க்கொரு நீதியா? உன்னுடைய மாமன் கம்ஸனிடத்திலே இந்த நீதியை நீ காட்டவில்லையே?

கிருஷ்:—அல்ல; அது என் குற்றமல்ல; கம்ஸன் அழிந்ததற்குக் கிருஷ்ணன் காரணஸ்தன் ஆகமாட்டான். என் மாதாவைச் சிறை செய்து, எனது பத்துச் சகோதரர்களையுந் தின்ற பாவியைத் தர்ம தேவதையாகப் பார்த்துக் கொன்று முடித்ததேயொழிய நான் கொல்லவில்லை.

துரியோ:—ஆனால் கம்ஸன் வஞ்சிக்கப்பட்டது கிருஷ்ணனாலேதான். இவ் வுண்மையை யேன் மறைக்கவேண்டும்? வீரத்தினால் உன் மாமனை நீ வெல்லவில்லை; சோரத்தினாற் கொன்றாய்.

கிருஷ்:—சுயோதனா! இந்த வியவகாரம் இப்பொழுது வேண்டாம், தூதனோடு அவனுடைய ஆத்ம கதை பேசுவது கூடாது. வந்த காரியத்தைப் பேசுவோம். உனது சகோதரர்களை நீ வஞ்சிக்காமல் அவர்களுக்கு உரியதை அவர்களிடங் கொடுத்துவிடுவதுதான் இராஜ நீதி.

துரியோ:—என்றாலுந் தேவகுமாரர்கள், மனுஷ்யர்களோடு உறவு கொண்டாடுவதெப்படி? மேலும் வஞ்சகன், வஞ்சிக்கப்படுபவனுக்கு உதவிசெய்தலும் ஒவ்வுமோ? வேண்டாம். இவ் வியவகாரம் இத்துடனே முடியட்டும்.

கிருஷ்:—(தனக்குள்) இவ்வாறு மரியாதையாகக் கேட்டால், துரியோதனன் எனது கோரிக்கைக்கு இணங்கப்போகிறானா? மூர்க்கனும், முதலையுங் கொண்டவை விடா! கொஞ்சங் கோபமாகப் பேசிப் பயமுறுத்திப் பார்க்கிறேன். (பகிரங்கமாக) ஹே! சுயோதனா! அருச்சுனனுடைய வில்வீரத்தை மறந்துவிட்டாயா?

துரியோ:—இருக்கலாம்.

கிருஷ்.—அப்படியானாற் கேள் சொல்லுகிறேன். வேடுவனாக வந்த பசுபதியை வில்லாலடித்துப் பாசுபதாஸ்திரம் பெற்றவன் விஜயன்; தேவர்களுக்கு அரசனாகிற இந்திரனுடைய காண்டாவனத்தை எரித்தவன் அருச்சுனன்; மூவருக்குந் தேவருக்கும் மற்றும் யாவருக்குஞ் சகிக்கமுடியாத கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த காலகேய நிவாத கவசர்களை வென்று, அதள, சுதள, பாதாளமாகிற மூன்று லோகங்களையுங் காத்து ரக்ஷித்தவன் தனஞ்செயன்; விராட நகரத்திலே நடந்த மாடுபிடி சண்டையில், உன்னையும் உனது சதுரங்க சேனைகளையுந் தன்னந்தனியனாக வந்து ஜெயங்கொண்டவன்; அவ்வளவுதானா? சித்திரசேனன் உன்னைக் கைதியாக்கி வான வீதிவழியாகக் கொண்டு சென்றபோது நீ ஓலமிட்டாய். பற்குனன் (அருச்சுனன்) உன்னைச் சிறைமீட்டான். அப்பேர்ப்பட்ட அசகாய சூரனாகிற அருச்சுனன் ஒருவனே உன்னையும், உனது சதுரங்க சைன்யத்தையும், கௌரவ குலத்தையுஞ் சர்வநாசஞ் செய்து, இந்திரப் பிரஸ்தத்தை மாத்திரமல்ல, அதிலே அஸ்தினாபுரத்தையுமே ஆளப் போகிறான். பதனம். பங்காளிகளுக்கு அவர்களது பாகத்தைக் கொடுத்துவிடு.

துரியோ:—கேசவா! என்னிடத்திலா இந்தப் பூச்சாண்டி காட்ட வந்தாய்? நான் யார் தெரியுமா? துரியோதனன்; ஆயிரம் யானைப் பலம் படைத்த சுயோதனன். உன்னுடைய பிள்ளைக் கதைகளை

ஆசிரியர் குறிப்புகள்.

பர்மாப் பயணம்:

எதிர்பாராத பல இடையூறுகளால் இன்றளவுந் தடைப்பட்டுக் கொண்டிருந்த எமது பர்மாப் பயணம் ஈஸ்வர அனுக்கிரஹத்தால் சமீபத்தில் சித்திக்கப்போகிறது. மாசி மதி நடுவில் பிரயாணத்தை ஆரம்பிக்கிறது என்கிற ஸ்திரமான முடிவுக்கு வந்திருக்கிறோம். "பாரதி"யின் கேந்திர வாழ்க்கைக்கு அறிகுறியாகவும், நல்ல காலத்துக்கு லட்சணமாகவும் எமது யாத்திரை தீர்க்கம் பெற்றதில் அன்பர்கள் ஆனந்திப்பர்; காலதாமதத்திற்கு மன்னிக்கவும் மன்னிப்பர்.

"பாரதி" இந்த நாலாண்டுகளாகக் கற்றவர்களும், மற்ற சாமான்ய ஜனங்களுங் களிக்கும்படி சரித்திரம், இலக்கியம், கைத்தொழில், நவீன சாஸ்திரம், அரசியல் முதலிய பல துறைகளிலுங் கட்டுரைகள் தாங்கி வந்திருக்கிறது. இன்னும் இவைபோன்ற அனந்தம் வியாசங்கள் வெளிவரவும் இருக்கின்றன. ஆனால் "பாரதி"ப் பத்திரிகை உயர்ந்ததோ தாழ்ந்ததோ, வாசகர்களைத் திருப்தி செய்யாமல் இருக்க முடியாது என்பது நிஸ்ஸந்தேகம்.

"பாரதி"யைப் பல வழிகளிலும் அபிவிருத்தி செய்து, ரமணீயமாக்க வேண்டுமென்பது எமது கருத்து. ஆனால் எமது பிரிய தமிழ் நாட்டாரின் பேருதவி யில்லாமல் இக் கருத்து நிறைவேறாது

யெல்லாம் என்னிடம் படிக்கவேண்டாம். தருமனது தந்தை எமன் வந்தாலும், பீமனுடைய பிதா வாயுவே வந்து போர் செய்தாலும், தனஞ்செயனைப் பெற்ற இந்திரனே வந்தெதிர்த்தாலும், நகுல சகாதேவர்களின் தந்தையாகிற அஸ்வினிகுமாரர்கள் பகைத்தாலுந் துரியோதனன், பாண்டவர்களுக்கு 'ஈ' யிருக்கும் இடந்தானுந் தரமாட்டான்; இது சத்தியம். நாடு வேண்டுமானால் போர்செய்து, ஜெயித்து அரசாளட்டும்.

கிருஷ்:—இதுதானே சுயோதனனுடைய முடிவான பதில்; பூமி கொடுக்கமாட்டாய்; போர் வேண்டுகிறாய். அப்படியே நடக்கும்; ஆயத்தமாயிரு.

[திரை விழுகிறது.]

நாடக முடிவு.

என்பதுந் தெரியும். எமது இந்தப் பிரயாணத்தில் பர்மாவிலிருக்கிற தமிழர்கள் "பாரதி"யின் வாழ்க்கையை எவ்வளவு தூரம் உயர்த்தப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது "பாரதி"யின் வளர்ச்சி.

பத்திரிகைப் பிரசாரத்தாலும், புத்தகப் பிரசாரத்தாலுந் தமிழ் ஜாதியை வங்காளிகளைப்போல் மேன்மையடையும்படி செய்யவேண்டுமென்கிற ஆசை 'பாரதி'க்கு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிவிடமுடியாது. நஷ்டத்தில் நடந்துகொண்டுந் தன்னோடு ஒரு புத்தகாலயத்தையும் வைத்துக்கொண்டு பல நூல்களைப் பிரசுரித்துவருகிறது. அதன் முதல் வெளியீடாக **ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மி பாய்** தோன்றினாள். அதனைத் தொடர்ந்து **சுப்ரமண்ய பாரதியார், போலந்து நாட்டின் சுதந்திரம், துர்க்கா தாஸ், சோவியத் ருஷியா** முதலியன வந்திருக்கின்றன. இனியும் எத்தனையோ நூற்கள் வெளிவரவும் இருக்கின்றன. "பாரதி"யின் சந்தாதார்களாகச் சேர்ந்தும், "பாரதிப் புத்தகாலய" நூல்களையும், 1930, 1931-ம் வருஷத்திய பாரதி தொகுதி (வால்யூம்)களையும் வாங்கி "பாரதி"யை ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டு எமது பர்மாப் பயணத்தை மாசி மத்தியில் ஆரம்பிக்கின்றோம். வாழ்க! பாரதி!! வாழ்க பல்லாண்டு!!!

மாசி மிதழ்:

பத்திரிகைத் தொழில் பரம பவித்திரமானது. ஆனால் பரம சங்கடமானது. கத்தியின் கூர்ப்புறத்தில் நடந்து செல்லுவதற்கும் இத் தொழிலுக்கும் இவ்வளவுகூட வித்தியாசமில்லை. சர்க்காரின் தவைதத்திற்கும், ஜனங்களின் அதிருப்திக்குந் தப்பிப் பிழைத்தால் பாக்கியம் வாழலாம். இந்த நடுப்பாதையிலிருந்து, ஒரு அடி அப்புறம் இப்புறம் எடுத்து வைத்துவிட்டால், எல்லாம் அசாத்தியமாகிவிடுகிறது.

"பாரதி"யின் பிரதம ஆசிரியர் ஸ்ரீ பா. நாராயணஸ்வாமி அவர்கள் பத்திரிகைத் தொண்டை விட்டு, தேசத் தொண்டின் முன்னணியிலே நின்று சிறை சென்றது முதல், இந்தச் சில மாதங்களாக "பாரதி"யைப் பல வழிகளிலும் வாசகர்களின் திருப்திக்குக் குறைவு நேராமல் நடத்திவந்தோம். அடுத்த மாத முதல் திருவாளர் பா. நாராயணஸ்வாமி அவர்களின் ஆசிரியத்துவத்தில் "பாரதி" முன்னிலும் பிரகாசமாக மிளிரும் என்பதிற் சந்தேகமில்லை. மாசி யிதழ் மகிழ்வளிப்பதாக!

எமன் டி வாலரா:

சமீபத்தில் அயர்லாந்திலே நடந்த தேர்தலானது எமன் டி வாலராவுக்கும், காஸ்கிரேவுக்கும் இடையிலே நடந்த போராட்டம் என்று

கூறுவர் சிலர். எம்முடைய எண்ணத்தில் அப்படித் தோன்றவில்லை. சுதந்திர தேவிக்கும், அடிமைச் சைதானிக்கும் நிகழ்ந்த இறுதிச் சண்டையாக இதை நாம் எண்ணுகிறோம். இந்த யுத்தத்தில் டி வாலரா வெற்றிபெற்றான். ஆனால் அது ஸ்வதந்திர தேவியின் வெற்றி; ஸ்வாதீன அயர்லாந்தின் வெற்றி.

இப்பொழுது உயிர் வாழும் ஸ்வதந்திர வீரர்களிலே டி வாலராவுக்குத்தான் உன்னத ஸ்தானம் அளிக்கவேண்டும். ஸ்பானியத் தந்தைக்கு அமெரிக்காவிலே பிறந்த டிவாலரா, ஐரிஷ் தாய்க்குப் பிறந்து, மூன்று பிராயம் முதல் அயர்லாந்திலேதானே வளர்ந்து, வாலிபனாய் வயோதிகனான பிரீதியில் அயர்லாந்தை அபிமானிக்கின்றான்; அதற்காக உயிரளவுந் தியாகஞ் செய்திருக்கிறான். இன்று நாம் நமது காந்திஜீயை மஹாத்மா என்றழைப்பதுபோல சுயாதீன அயர்லாந்தாரும் டி வாலராவை "தேவ்" என்று அன்புடன் அழைக்கின்றார்கள். ஐரிஷ் பாஷையில் அப் பதத்திற்கு அர்த்தம் யாதாயிருந்தாலும் நாம் "தேவன்" என்று அர்த்தங் கொள்ளுகிறோம். "உலகத்தை இயேசுநாதர் ரக்ஷித்ததுபோல அயர்லாந்தை எமன் டி. வாலரா ரக்ஷிக்கப்போகிறான்" என்று 1916-ம் ஆண்டில் அயர்லாந்துக்காகத் தூக்குமேடை யேறிய **பாட்ரிக் பியர்ஸ்** என்பவர் கூறியுள்ளார். "டி வாலரா பேசுகையில் அவருடைய கடுகடுப்பான முகத்தில் கூரிய ஒளியானது பிரபாமண்டலம்போல் பிரகாசிக்கிறது. அவரது கண்களினின்றும் அக்கினி ஜ்வாலை வீசுகிறது. இயந்திர பீரங்கியிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாய் வெடிக்குண்டுகள் புறப்படுவதுபோல அவருடைய வாயிலிருந்தும் வார்த்தைகள் வெளிவருகின்றன. அதைக் கேட்டவுடனே—எரிமலையின் அக்கினியைக் கக்குஞ் சிகரம்போன்ற வாயிலிருந்து யுத்த வேட்கையுடைய சொற்கள் நீரருவிபோல் தொடர்ந்தவுடன் ஜனங்கள் வீராவேசங் கொள்ளுகிறார்கள்" என்று சாது நிஹால சிம்ஹர் எழுதியிருப்பது கவனிக்க வேண்டியது.

1919-ல் லின்கன் சிறையிலிருந்து மைக்கேல் காலின்ஸ், ஹாரி போலந்து ஆகிய இரு துணைவர்களோடுந் தப்பியோடிய கலகக்காரன்—புரட்சிக்காரன் டி வாலரா மறுபடியும் அயர்லாந்தின் தலைவனைத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் இங்கிலீஷ்காரர்களுக்கு வருத்தஞ் சொல்லிடப்படாது. எவ்வளவோ எதிர்ப்பிரசாரஞ் செய்தும் பயன்படவில்லையே யென்று அன்னியநாட்டு மந்திரி தாமஸ் அழுகிறார். என்ன செய்வது? மேஜை புரண்டுவிட்டது.

பிரமாணத் தகராறு, கப்பங்கட்ட மறுத்தல் இவை சம்மந்தமாய்ப் பிறந்த ஐரிஷ் தேர்தலில் பிரிட்டிஷ் சர்க்காரும், காஸ்கிரேவ்

கட்சியாரும் எவ்வளவோ முயற்சித்தும் முடிவிற் சத்தியமே ஜெயித்தது. நியாயம் டிவாலராவின் பக்ஷத்திலிருக்கும் போது வேறு யார் ஜெயிப்பது? "நான்—ஜார்ஜ் சக்கிரவர்த்திக்கும் அவருடைய வாரீஸுகளுக்குஞ் சட்டப்படி விஸ்வாசத்துடனும், உண்மையுடனும் இருப்பேன். எனவே கடவுள் எனக்குத் துணைபுரிவாராக!" என்பது பிரமாணத்தின் ஷரத்து. இதைச் செய்துகொடுக்க ஸ்வாதந்தர்ய உணர்வுள்ள எந்த அயர்லாந்துக்காரன் சம்மதிப்பான்? இங்கிலாந்திற்கு அயர்லாந்து கப்பம் கட்ட வேண்டியதும் அவசியந்தானா? டி வாலரா மறுபடியுந் தலைவராகிவிட்டதால் இனிமேல் இந்த இரண்டு ஆசைகளையும் இங்கிலாந்து விட்டுவிடுவதுதான் நலம். மரியாதையும் அதுதான்.

மீரத் வழக்கு:

1929-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் நாள் இந்தியாவுக்கு ஒரு கருநாள். பணக்காரர்களின் இரும்புக் கரத்தால் தாழ்த்தப்பட்டும் தேடுவாரற்றுங் கிடந்த தொழிலாளிகளுடைய க்ஷேமத்திற்காகப் பாடுபட்ட ஒருசிலரும், அன்று அந் நிர்ப்பாக்கிய ஜனங்களினின்றும், அவர்களை நேசித்த குற்றத்திற்காகப் பிரிக்கப்பட்டார்கள். நாடெங்கும் நன்றாய் வேட்டை நடந்தது. தொழிலாளர் தலைவர்கள் பலர் பிடிக்கப்பட்டுச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். 46 மாதங்கள் சர்க்காருக்கும் சதிகாரருக்கும் வழக்கு நடந்தது. அரசாங்கச் சார்பில் 16 லட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டன. எதிரிகளுக்கேற்பட்ட செலவு வேறு.

வழக்கிலே வழங்கப்பட்டிருப்பது நீதியோ அநீதியோ அதைப் பற்றி இங்கு நாம் எதுவும் எழுதப்போவதில்லை; எழுதவுங் கூடாது. ஆனால் மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய இரக்கமானது, இவ் வழக்கில் இவ்வளவேனுங் காட்டப்பட்டதில்லை யென்பதைச் சொல்லாதிருக்க முடியவில்லை. வெனிஸ் வர்த்தகனில் வருகிற ஷைலாக்குக்கு, நீதிபதியும், நியாயவாதியுங் கூறுகிற இரக்கத் (Mercy)தை இவ் வழக்கில் நீதிபதியாயிருந்தவர் காண்பித்திருக்கலாம்.

நாலு வருஷங்கள் நன்றாய் நடத்தப்படாமலும், சிறைத் துயரத்தாலும், கஷ்டப்பட்ட கைதிகள் அவர்கள் செய்த குற்றத்திற்குரிய தண்டனையை ஏற்கெனவே அனுபவித்துவிட்டார்கள் என்பது வெகுஜன வாக்கு. ஆனால் நீதிபதி அதைக் கவனிக்காமல் நிர்தாக்ஷண்யமாய்த் தண்டித்துவிட்டார். தியாகிகள் சகிக்கவேண்டியதுதான். காலம் மாறும்போது கஷ்டங்கள் நிவர்த்தியாகும்.

பெர்னார்டு ஷா:

பேரறிஞர் பெர்னார்டு ஷா இப்பொழுது ப்ரப்ரத்யக்ஷணம் புறப் பட்டிருக்கின்றார். காவ்யலோகத்திலே இவர் ஒரு பழுத்த கிழவர்; வயதிலுங் கிழவர் (76 பிராயத்தினர்). ஆனால் ஆத்மத்திலோ இளை ஞர். நாடக பீடத்தில் ஆசிரியர்களாயிருக்கின்ற எல்லோரிலும் ஷா, ஷா (அரசன்) வாகவே யிருக்கின்றார். ஜெகப்பிரியர் (Shakespear), பிளெச்சர், மோலியர், ரேஸீன், கோர்னேயி, கத்தே (Goethe), ஷில்லர் முதலிய மேனாட்டு நாடகாசிரியர்களின் ஜாதியிலே பெர்னார்டு ஷாவும் ஒருவர். ஆங்கில இலக்கியத்திலே ஒரு மஹத்தான புரட் சியை யுண்டாக்கியவர் பெர்னார்ட் ஷா. இவர் எழுதியுள்ள நாடகங் களும், சிறு கதைகளும் நவீனமானவை; தற்கால அரசியலையும், சம தர்மத்தையும் ஒட்டியவை. "ரூஸோவின் எழுத்து வன்மைதான் பிரெஞ்சுக்காரர்களைப் புரட்சியிலே யிறக்கிவிட்ட"தென்று ஹிலேர் பெல்லாக் கூறுகிறபடி ஷாவின் நாடகங்களும், கதைகளும் அநேக அரசியல் தத்துவங்களையும், சமதர்மக் கொள்கைகளையும் அமைக் கின்றன.

உலகத்து அரசியல்களில் ருஷியாவில் நடைபெறும் சோஷியத் அரசாங்கமே சிலாக்கியமானதென்பது பெர்னாதரின் அபிப்பிராயம். உலகத்தின் சொத்து, அதை அனுபவிக்கும் உரிமை, தொழிலாதிக் கம், வருமான பாத்தியதை இவைகளெல்லாம் மனுஷ்ய ஜாதிக்கே பொதுவாகவும், பொதுவுடைமையாகவும் இருக்க வேண்டுமென்பது ஷாவின் கருத்து.

ஆயுதப் பரிஹாரணம் பற்றிய பேச்சு நடந்தபோது ஷா கூறிய தும் இங்குக் குறிப்பிடத் தக்கது:

"ஆயுதப் பரிஹாரணம் என்பது அர்த்தமற்ற பதம்; அபத்தம். எல்லாத் தேசத்தாரிடமிருந்தும் ஆயுதங்களைப் பிடுங்கிவிடுவதால் யுத்தம் நின்றுவிடுமா? முஷ்டிகளைக்கொண்டு குத்தியும், பற்களைக் கொண்டு கடித்துங் கொன்றுகொள்ளுவார்கள். இன்னொரு யுத்தம் ஏற்படுவதால் என்ன கெடுதல்? சில கோடி ஜனங்கள் சாவதால் என்ன நஷ்டம்? உலகமே முழுகிவிடாதே? ஜனங்கள் ஒருவரை யொருவர் கொல்லுவதை விரும்புகின்றனர். பிறரைக் கொல்லுப வரை ஜனங்கள் புகழுகிறார்கள்; அவர்களுக்கே உலகம் பயப்படுகி றது."

இனி எக்காலம்?

ஆனால் ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சாச்வதமான சனிப் பார்வையைப் பார்க்கையில், அக் கண்ணராவியை எழுதவுங்

கை கூசுகிறது. தேசத்தின் சத்தாகவும், தேச ஜனங்களின் ஜீவனா கவும் இருக்கின்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு, சௌபாக்கிய சூரியன் இனிமேலேதான் உதயமாகவேண்டும். நீண்ட பல நூற்றாண்டுக ளாக, அந்த நிர்பாக்கிய ஆசிரியர்கள் வயிற்றுக்குப் போதாத கூலியை வாங்கிக்கொண்டு போதிக்கின்ற கல்வியால், நாட்டில் அறிவானது ஒரு அங்குலங்கூட விசாலிக்கவில்லை. ஆனால் கல்விக்காக நாடு பணந் தரவில்லையா? நன்றாய்த் தந்தது! நிறையத் தந்தது!! என்றாலும் அவ்வளவு பணமும் சரியான வழியிற் செலவு செய்யப்படாத குறை யினாலேதான் நமது நாட்டார் நூற்றுக்கு ஏழு பேர்தானும் படிப்பா ளிகளாகவில்லை. இடையிலிருந்த பூதம் விழுங்கிவிட்ட செல்வமெல் லாம், ஆரம்ப ஆசிரியர்களின் பசித்த வயிற்றிலே போடப்பட்டிருந் தால், இந்தியக் கல்வி இன்னுங் கொஞ்சமாவது முன்னேறி யிருக்க லாம்.

ஆரம்ப ஆசிரிய பீடம் கௌரவமானது; குரு ஸ்தானம்; க்ஷேத் திர க்ஷேத்திரம். ஆனால் இப்பொழுதைய ஆசிரியர்கள், அத பாதாளத்திலே வைக்கப்பட் டிருக்கிறார்கள். தெருப் பெருக்குந் தோட்டிக்குக் கிடைக்கிற சம்பளங்கூட, ஆசிரியர்களுக்குக் கிடை யாது. "குடி ஜனங்களை யெவ்வளவுக் கெவ்வளவு மடமையிலும் தற்குறித் தன்மையிலும் வைத்திருக்கிறோமோ அவ்வளவுக் கவ் வளது நீடித்த காலம் இந்தியாவை நாம் ஆளலாம்—ஏக போகமாக ஆளலாம்" என்கிற ஆங்கில இராஜதந்திரியின் தத்துவ போதத் தால் இந்தியா ஆளப்படுகிறவரை தேசக் கல்வி சிறிதேனும் முன் னேறுமென் றெண்ணப்படாது.

சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர்களின் 8-வது மஹா நாடு சில தினங்களுக்கு முன்னே சென்னையிலேதானே கூடி முடிந்தது. யாது பயன்? எத்தனை மஹா நாடுகள் கூடினாலும் உள்ளதில் ஒரு அணுப்பிரமாணமாவது முன்னேறிவிடப் போகிறார்களா? திவான் பஹதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் அக் கூட்டத்திற்குத் தலைமை வஹித்தார். மந்திரி கனம் பி. டி. ராஜன் கூட்டத்தைத் திறந்து வைத்தார். அவ்வளவுதான்.

உலகத்தில் நல்ல விளைச்சலும், நல்ல வியாபாரமும் இருந்து பணப் பஞ்சமில்லாமல் மனித ஜாதி சுபிக்ஷமாக வாழ்ந்த போது—அரசாங்க வரவு செலவில் துண்டு விழாமல் கஜானா நிறைந்திருந்த போது செய்ய முடியாத சீர்திருத்தத்தை, இந்தப் பஞ்ச காலத்திற் செய்வார்களென்று யார் நம்புவார்? நாப் கமிட்டி செய்த சிபார்சு, தஜ்தவேஜ் அளவில் நன்றாய்ப் பத்திரமா யிருக்கி றது. "தனக்குத்தானே யறியாதான் பிறர் சொல்லி அறிவனோ தரணி வேந்தே!" என்கிறது போல் சர்க்காருக்கே யிஷ்டமில்லாத

காரியத்தை வெறுங் காகிதத் தீர்மானங்களால் வற்புறுத்தி யாவ தென்ன? இஷ்டமிருந்தால் இப்பொழுது கள்ளு வருமானத்திற் கிடைத்திருக்கிற ஆதாயத்தைக் கல்விக்காகச் செலவிடக்கூடாதா?

அறிக்கை

நமதாபீஸிலிருந்து வந்த திரு. கு. ஆறுமுகம் என்பார், இம் மாத இறுதியில் வேலையினின்றும் விலகிக்கொண்டார். இனிமேல் அவரிடம் நமது பிரஸ், புத்தகசாலை, "பாரதி"ப் பத்திரிகை முதலிய வைகளுக்காகப் பணம் கொடுக்க வேண்டியதில்லை. அத்துடன் எவ் வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள வேண்டா மென்றும் அறிவித் துக் கொள்ளுகின்றோம்.

தேவை

தமிழில் தேர்ச்சியும் பத்திரிகானுபவமும் பெற்ற ஒருவர் தேவை. அத்துடன் புரூப் பார்ப்பதற்கும் காரியாலயப் பணிக்கும் தகுதியுடையவர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பி மானேஜருக்கு விருப் பத்தை யறிவிக்கவும்.

ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் வேண்டும்

பிற பாஷைகளிலுள்ள நல்ல நல்ல நவ நவமான நூற்களை மொழிபெயர்த்தும், பல்வேறு சிறந்த நூற்களை முதல் நூலாகவே பிர சுரித்தும்வர ஸ்தாபித்துள்ள நமது பாரதிப் புத்தகாலயத்திற்கு இது போது, ஹிந்தியிலுள்ள சில சிறந்த நூற்களைத் தமிழிற் கொணர வேண்டிய அவஸ்யம் நேர்ந்திருக்கிறது. அதற்குத், தமிழிலும் ஹிந்தி யிலும் நல்ல பாண்டித்ய முடையவர் அவஸ்யமாகலான் அத் தன்மை யுள்ளோர் விருப்ப மிருப்பின், "பாரதி" மானேஜருக்கு அறிவித்து மற்ற விஷயங்களை அறிந்து கொள்ளவும்.

புத்தகாபிமானிகளுக்கு

நமது பிரசுரங்களுக்காக முன்பண மனுப்பியுள்ளவர்களும், பிற அன்பர்களும் வெளியீடுகள் வெளிவரும் நாளை ஆவலுடன் எதிர் பார்த்துப் பார்த்து ஏமாற்றமடைந்து விட்டது பற்றி மிகவும் விச னிக்கின்றோம். பல்வேறு சங்கடங்களால் நேர்ந்த இப் பெரும் தாம தத்திற்கு மன்னிப்பார்களாக. இனி தாமதம் நேர இடமில்லை. மாசி மதியின் பிற் பகுதியில் புத்தகங்கள் வெளி வருகிறது. அன் பர்களே விரைவில் இப் பிரசுரங்கள் வந்தடைந்து களிப்பிக்குமென உறுதி கூறுகின்றோம்.

பொறுப்பாசிரியர் திரு. ரா. சுப்ரமண்யம் அவர்களால், தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டுப் பிரசுரிக்கப்படுகிறது.

197886
சென்னை-600 003

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900,000 பங்குகளின்பேரில் 2,700,000, ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி, டில்லி, கான் பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்துவருவ தோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்துவரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையு மடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்),
கோம்பை. மதுரை ஜில்லா.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது

ராட்டூர் வீரன் * *

* * தூர்க்கா தாஸ்

"பாரதி"யின் பிரதம ஆசிரியர்

திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்களின்

விரிவான முகவுரையுடன் கூடிய

ஓர் தேசிய நாடகம்.

ஆரம்ப முதல் இறுதிவரை

அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!

தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது

வங்காள மஹாகவி துவிஜேந்திரராய

எழுதிய எல்லா நாடகங்களிலும்

துர்க்கா தாஸே முதன்மையானது.

ஆவேச நடை! அலங்கார பாஷை

மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

கிரௌன் $\frac{1}{8}$ சைஸ்

360 பக்கங்களுக்கு மேற்கொண்ட புத்தகம் விலை ரூ. 1,

தபாற் செலவு பிரத்தியேகம்.

"பாரதி" புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.